

பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ்
தவிசாளர், ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன

“சிறுபான்மை என்ற சொல்லை நான் அவ்வளவு விரும்புவதில்லை”

முஸ்லிம் விவாக - விவாகரத்துச் சட்டத் திருத்த அறிக்கை




05

ஒழித்து விளையாடும் பொறுப்பாளர்கள்






# மீள்பார்வை

මීල්පාර්වෙ


Registered as a Newspaper in Sri Lanka
GPO-QD/93/NEWS/2018 - ISSN 2012-5038

Meelparvai Fortnightly
meelparvai.net

සමාජ වෙනසකට නගන හඬ
சமூக மாற்றத்திற்கான குரல்

இதழ் - 399 • 03 ஒகஸ்ட் 2018 வெள்ளிக்கிழமை • துல் கஃதா 1439 • விலை 40.00







# முஸ்லிம் தனியார் சட்டம் இழுத்தடிக்கும் முயற்சியில் நீதியமைச்சு

2009 ஆம் ஆண்டிலிருந்து வரையப்படுகின்ற முஸ்லிம் தனியார் சட்டத் திருத்தத்துக்கான முன்மொழிவுகளின் இரு தரப்பு அறிக்கைகளும் நீதி அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டு பொதுமக்களின் அபிப்பிராயம் கோரப்பட்டுள்ள நிலையில், முஸ்லிம் சமூகத்தின் ஆர்வலர்கள் பலரும் இது தொடர்பில் தற்போது செயற்பட்டு வருகின்றனர். இருந்த போதிலும் நீதி அமைச்சின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கைகள் எதுவும் இந்த அறிக்கைகளுடன் சம்பந்தப்பட்ட முஸ்லிம் சமூகத்தின் பெரும்பாலானவர்களின் மொழியான தமிழ் மொழியில் வெளியிடப்படாமல் இருப்பது குறித்து பலரும் தமது அதிருப்தியை வெளியிட்டு வருகின்றனர். (பக். 14)

## அஸ்ஸாம் முஸ்லிம்கள் குடியுரிமை இழக்கும் அபாயம்



இந்திய மாநில அரசு வெளியிட்டிருக்கும் புதிய சட்ட மூலத்தினால் 4 மில்லியன் பெங்காலியர்கள் தமது குடியுரிமையை இழக்கும் நிலை தோன்றியிருக்கிறது. மியன்மாரின் ரெக்கெய்ன் பிரதேசத்தில் வாழ்ந்த ரோஹிங்கிய மக்கள் போல அஸ்ஸாமில் வாழும் பங்களாதேஷ் மக்களின் நிலை இந்தச் சட்டம் மூலம் மாறியிருக்கிறது. (பக். 14)

## முதலாவது கத்தோலிக்க புனித பூமியாக மன்னாரின் மடுமாதா தேவாலயம் பிரகடனம்



கத்தோலிக்கருக்கு மிகவும் புனிதமானதாகக் கருதப்படுகின்ற 400 வருடங்கள் பழைமை வாய்ந்த மன்னார் மடு மாதா தேவாலயத்தைச் சூழ்ந்துள்ள பகுதிகளை புனிதப் பிரதேசமாக மாற்றுவதற்கு அமைச்சரவையில் ஜனாதிபதி முன்வைத்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

இந்துக்களதும் பௌத்தர்களதும் வழிபாட்டுத் தலமாக அமைந்திருக்கும் இந்தத் தேவாலயம் தமிழருக்கும் சிங்கள வருக்கும் இடையில் நடந்த யுத்தத்தின் போதெல்லாம் இரு தரப்பாலும் பாதுகாக்கப்பட்டு வந்ததோடு பாதிக்கப்பட்ட மக்களுக்கான அடைக்கலம் வழங்கும் தலமாகவும் விளங்கியது. அந்த வகையில் அடைக்கலம் வழங்கும் தலமாக அது சர்வதேச அரங்கிலும் ஏற்றுக் கொள்ளப்பட்டிருந்தது. (பக். 14)

## மன்னாரில் மீண்டும் எண்ணெய் அகழ்வு ஆராய்ச்சி



மன்னாரின் காவேரிக் கரையில் எண்ணெய் அகழ்வாராய்ச்சிகளை மேற் கொள்வதற்காக சர்வதேச பெற்றோலியம் நிபுணர்களிடம் இருந்து இலங்கை விண்ணப்பங்களைக் கோரியுள்ளது. பெற்றோலிய வளங்கள் அபிவிருத்தி அமைச்சர் அர்ஜுனா ரணதுங்க இதற்கென முன்வைத்த யோசனையை அமைச்சரவை அங்கீகரித்துள்ளது. (பக். 14)

## வாக்காளர் இடாப்பு ஒக்டோபர் 05 இல் இறுதிப்படுத்தப்படும்



தற்பொழுது வாக்காளர்களுக்கு விநியோகிக்கப்பட்டு, சேகரிக்கப்பட்டுள்ள வாக்காளர் பதிவு அட்டையிலுள்ள விபரங்கள் அனைத்தும் பதிவு செய்யப்பட்டு ஆவணப்படுத்தும் நடவடிக்கைகள் நடைபெற்று வருகின்றன.

தற்பொழுது தேர்தல்கள் திணைக்களத்தினால் தயாரிக்கப்படும் இந்த வாக்காளர் இடாப்பில் தமது விபரங்கள் சரியாகப் பதியப்பட்டுள்ளனவா என்பதனை வாக்காளர்கள் சரிபார்த்துக் கொள்ள முடியும்.

வாக்காளர்களின் தகவல்கள் அடங்கிய முதல் வரைவினை மாவட்டத் தேர்தல் அலுவலகங்கள், பிரதேச செயலகங்கள், உள்ளூர் அதிகார சபை அலுவலகங்கள், கிராம சேவை அதிகாரியின் அலுவலகங்கள், தபாலகங்கள் ஆகியவற்றில் பார்வையிடலாம்.

இந்த முதல் வரைவில் ஏதேனும் தவறுகள் இருந்தால், (பக். 14)

## வனப் பாதுகாப்பு நிலங்களை புத்தளம் பிரதேச சபை மீளவும் கையளித்தது

வனப் பாதுகாப்பென்ற காரணத்தைக் காட்டி பல காணிகள் சுவீகரிக்கப்பட்டு வரும் நிலையில், வனப் பாதுகாப்புக்கென சுவீகரிக்கப்பட்ட நிலத்தை புத்தளம் பிரதேச சபை பிரதேச மக்களுக்கு திருப்பி ஒப்படைத்துள்ளது.

புத்தளம் மாவட்ட விவசாயிகள் விவசாயம் செய்து கொண்டிருந்த காணிகள், வனப் பாதுகாப்புத் திணைக்களத்தால் சுவீகரிக்கப்பட்ட 10,000 ஏக்கருக்கும் மேற்பட்ட காணிகளை மீண்டும் விவசாயிகளிடமே திருப்பி (பக். 14)





## மேலதிக ஊழியர்களுக்கு இனி திணைக்களத் தலைவர்களே பொறுப்பு

அங்கீகரிக்கப்பட்ட பணியாளர் தொகைக்கு மேலதிகமாக ஆட்சேர்ப்பினைச் செய்துள்ள அமைச்சுக்களின் செயலகங்கள், திணைக்களங்கள் உள்ளிட்ட அனைத்து அரச நிறுவனங்களதும் தலைவர்கள், மேலதிகமாக ஆட்சேர்க்கப்பட்ட பணியாளர்களின் சம்பளத்தைப் பொறுப்பேற்க வேண்டும் என அரசாங்கம் வெளியிட்டுள்ள சுற்றுநிருபம் 03/2018 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. (பக். 14)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஷரீஆ சட்டத்திற்கு மாற்றம் செய்து விட்டாரோ ?

- நஸ்ரின் நவாஸ்

பருவமடைந்துள்ள 12 வயதுச் சிறுமி ஒன்றினைப் பெண் கேட்டுப் போகிறார் ஒரு நல்ல மாப்பிள்ளை. சிறுமியின் தந்தையோ எனது பிள்ளையோ இல்லற வாழ்க்கை நடத்தும் அளவு இன்னும் பக்குவமடையவில்லை எனக்கூறி மறுத்து விடுகிறார்.

அது மாத்திரமன்றி 18-20 வயதாகி சிறந்ததொரு குடும்பத்தலைவியாவதற்கான பக்குவத்தை அடையும் வரை யாருக்கும் திருமணம் முடித்துக் கொடுக்க மாட்டேன் என்பதையும் சொல்லி விடுகிறார்.

இப்போது சொல்லுங்கள் இத்தந்தை ஷரீஆ சட்டத்திற்கு மாற்றம் செய்து விட்டாரோ ?

(பொதுப்புத்தி 12 வயதைத் தானே திருமணத்திற்கான ஷரீஆ சட்டம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறது)




## சமூக வலைத்தளங்களில் அலசப்படுபவை

## UGC Approved Degree

- சப்வான் பஸீர்

தனியார் கல்வி நிறுவனங்கள் சொல்லும் UGC அங்கீகாரம் என் பது ஒரு கண்துடைப்பு மட்டும் தான். UGC அங்கீகாரம் என்பதன் சரியான அர்த்தம் இதுதான்.

'ஒரு பட்டப்படிப்புக்கான பாடநெறியை நடத்துவதற்கும் ஒரு பட்டச் சான்றிதழை வழங்கு வதற்கும் குறித்த கல்வி நிறுவனத்துக்கு பல்கலைக்கழக மாணியங்கள் ஆணைக் குழுவினால் வழங்கப்படும் ஒரு அனுமதி' இதைத்தான் இவர்கள் UGC Approved Degree என்று விளம்பரப்படுத்துகிறார்கள். ஆனால், இலங்கையின் UGC, ஒரு சில உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு தனியார் கல்வி நிறுவனங்களின் Degree யை மட்டுமே.

இலங்கையின் தேசிய பல்கலைக்கழகங்களின் Degree க்கு சமமாக ஏற்றுக் கொள்கிறது. அப்படியான கல்வி நிறுவனம் ஒன்றில் கற்று அந்த Degree certificate ஐ UGC இல் கொடுத்து, ஒரு அங்கீகாரக் கடிதம் பெற்றுக் கொண்டால் மட்டுமே அந்த Degree ஐ ஒரு அங்கீகாரமிக்க Degree யாக இலங்கை அரசாங்கம் ஏற்றுக் கொள்ளும்.

எனவே, இலங்கையின் தனியார் கல்வி நிறுவனங்களில் தனது உயர் கல்வியைத் தொடர இருப்பவர்கள் இந்த விடயத்தில் மிக அவதானமாக இருக்க வேண்டும். இல்லாவிட்டால் நேரம், பணம் எல்லாவற்றையும் செலவு செய்து எந்தப் பிரயோசனமும் இல்லாத ஒரு Degree யை வீட்டில் வைத்துக் கொண்டு இருக்க வேண்டிவரும்.

## கியாமத் நாளில் தனியான நீதிமன்றம்

- இர்ஷாத் மூமீன்

பள்ளிவாசல் நிர்வாகிகளை விசாரிப்பதற்கென்று கியாமத் நாளில் தனியான ஒரு நீதிமன்றம் அமைக்கப்பட்டால்கூட ஆச்சரியப்படுவதற்கில்லை.

பள்ளிவாசல்களில் பணிபுரியும் இமாம், முஅத்தின்களுக்கு ஏன் இவ்வளவு அநியாயங்கள் செய்தீர்கள் என்ற கேள்வி, ஊரில் நடைபெறும் பாவங்களை ஏன் தடுக்க முயற்சிக்கவில்லை என்ற கேள்வி.

ஊர் மக்களின் கல்வி விவகாரங்களில் ஏன் கவனம் செலுத்தவில்லை என்ற கேள்வி, கலவன் பாடசாலை முறையை மாற்றி ஆண் பெண் இரு பாலாருக்கும் தனித்தனிப் பாடசாலைகள் உருவாக்குவதில் ஏன் கவனம் செலுத்த வில்லை என்ற கேள்வி.

வட்டிசார் நடவடிக்கைகளை பார்த்துக் கொண்டு ஏன் மௌனமாக இருந்தீர்கள் என்ற கேள்வி, விபச்சாரத்தைத் தடுக்க ஏன் முயற்சிக்கவில்லை என்ற கேள்வி.

ஸகாத்தை வசூல் செய்து வினியோகம் செய்வதில் ஏன் கவனம் செலுத்தவில்லை என்ற கேள்வி.

அன்புள்ள நிர்வாகிகளே!!

இதுபோன்ற இன்னும் ஆயிரக்கணக்கான கேள்விகளுக்கு பதில் சொல்லும் தைரியம் உங்களுக்கு இருந்தால் நிர்வாகத்தில் இருங்கள், அல்லது தகுதியானவர்களுக்கு வழிவிட்டு இப்போதே ஒதுங்கி விடுங்கள்!!

## முஸ்லிம் தனியார் சட்ட சீர்திருத்த மக்கள் அபிப்பிராயம்

-இம்ரான் ஹுஸைன்

முஸ்லிம் தனியார் சட்ட சீர்திருத்தம் தொடர்பில் பல வாதப் பிரதிவாதங்கள் சமூகத்தில் இருப்பது அனைவரும் அறிந்ததே. இது குறித்து நீதி அமைச்சரால் நியமிக்கப்பட்ட குழு இரண்டாகப் பிரிந்து தமது தரப்பு ஆலோசனைகளை அறிக்கை யாகச் சமர்ப்பித்துள்ளது.

தற்போது பொது மக்கள் தரப்பிலிருந்தும் சீர்திருத்தம் தொடர்பில் அபிப்பிராயம் கோரப்படுவதாக அறிய முடிகிறது. எப்படி இருப்பினும், அமைச்சினால் நியமிக்கப்பட்ட இரு குழுக்களின் அறிக்கைகளும் ஏனைய முஸ்லிம் அமைப்புக்களால் சமர்ப்பிக்கப்பட்ட முன்மொழிவுகளும் இணையத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த முன்மொழிவுகளில் அவரவர் பக்க நியாயங்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. இதனை ஆழமாக ஆராய்ந்து, இதன் சாதக பாதகங்களை விளங்குவது இது தொடர்பில் ஆர்வங்காட்டுபவர்களுக்கு அவசியமானது.

1. நீதியரசர் சலீம் மர்சூப் இன் குழுவின் - 313 பக்க அறிக்கை
2. ரிஸ்வி முப்தி குழுவின் - 10 பக்க அறிக்கை (மாற்றப்பட வேண்டியவை மட்டும் குறித்து)
3. ஏனைய 07 முஸ்லிம் குழுக்களின் முன்மொழிவுகள் அறிக்கை - 302 பக்கம்

இந்த அறிக்கைகளை மேலோட்டமாகவேனும் வாசித்து, எந்தமாதிரியான முன்மொழிவை மேற்கொள் வது என முடிவுசெய்வதே பொருத்தம்.

- ★ திருமண வயது
- ★ பலதாரமணம் சம்பந்தமான விதிகள்
- ★ விவாகரத்தின் பின்னரான தாபரிப்புப் பணம்
- ★ பெண் முஸ்லிம் விவாகப் பதிவாளர் நியமனம்
- ★ பெண் காதி நீதிபதி நியமனம்

போன்ற பிரதான விடயங்களில் பல தரப்பும் தெரிவித்துள்ள எதிரும் புதிருமான கருத்துக்களையும், முன்மொழியப்பட்டுள்ள சட்ட வரை பையும் புரிந்துகொள்வது அவசிய மானது.

பல போராட்டங்களின் பின் இந்த விவகாரம் சமூகத்தின் பார்வைக்கும் கருத்து அறியும் நிலைக்கும் வந்துள்ளமை நல்ல விடயம்தான்.

பொது மக்களில் இருக்கும் புத்தி ஜீவிகளின் உள்ளீடுகளும் இதில் இடம் பெறுவது இந்தச் சட்டத் திருத்தத்தை இந்த நாட்டிலுள்ள முஸ்லிம்களுக்கு இன்னும் நன்மை பயக்கத்தக்கதாக மாற்ற உதவியாக இருக்கும்.




## இந்த அவலம் இன்னும் எத்தனை நூற்றாண்டுகள்?

-சிராஜுல்ஹஸன்

'இத்தா' என்றால் என்ன? மாமியாருக்கு மருமகள் பணிவிடை செய்தாக வேண்டுமா? மாதவிடாயின் சட்டங்கள் என்ன? குலாவின் (பெண் தரப்பில் கோரப்படும் மணவிலக்கு) வழி முறைகள் என்ன?

பெண்கள் தொடர்பான இவை போன்ற மார்க்கச் சட்டங்களை எல்லாம் 1400 ஆண்டுகள் ஆன பின்னரும்கூட இன்னும் ஆண்கள் தாம் பேசிக்கொண்டிருக்கிறார்கள் (பயான் கள்)

பெண்களுக்கான மார்க்கச் சட்டங்களைப் பெண்களே துணிந்து பேசும் அளவுக்குப் பெண்கள் இல்லையா? அத்தகைய பெண்கள் உருவாக வில்லையா? அல்லது நாம் உருவாக்கவில்லையா? இந்த அவலம் இன்னும் எத்த னை நூற்றாண்டுகள் தொடரும்?

## பெண் காதி நீதிபதி



-இம்ரான் ஹுஸைன்

பெண் காதி நீதிபதிகளை நியமிப்பதில் சர்ச்சைப்படும் இலங்கைக்கு, மலேசியாவில் நடைமுறையில் இருக்கும் சரீஆ நீதிமன்றங்களில் நீதிபதிகளாக இருக்கும் பெண்கள் எடுத்துக் காட்டாக இருக்கும். அவர்களது நீதிமன்ற செயன்முறையையும் ஆராய்ந்து பார்த்து முடிவெடுக்கலாமே.

## வெளிநாடு சென்றுள்ள விரிவுரையாளர்களிடம் நிதி அறவிட நடவடிக்கை



பட்டப்பின்படிப்பு மற்றும் ஆய்வுகளுக்காக வெளிநாடுகளுக்குச் சென்று மீள நாடு திரும்பாத பல்கலைக்கழக விரிவுரையாளர்களின் விபரங்கள் பகிரங்கப்படுத்தப்படவுள்ளதாக உயர்கல்வி அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக உயர்கல்வி அமைச்சர் விஜதாஸ ராஜபக்ஷ, 486 பேரினது விபரங்கள் வெளியிடப்படும் என்று தெரிவித்ததுடன் வெளிநாடு சென்றுள்ள பல்கலைக்கழக விரிவுரையாளர்களிடமிருந்து 813 மில்லியன் ரூபா அறவிடவேண்டியுள்ளதாகவும் கூறினார்.

சட்ட விதிகளுக்கு அமைவாக இந்த அறவீடு மேற்கொள்ளப்படும் இத்தொகை எமது பல்லைக்கழகங்களுக்கு உரித்தானது. இது தொடர்பில் சில விரிவுரையாளர்கள் மற்றும் அவர்களின் சாட்சிகளாகக் கையொப்பமிட்டுள்ள சிலருக்கு எதிராக தற்போது வழக்கு தொடரப்படவுள்ளது என்றும் உயர்கல்வி அமைச்சர் விஜேதாஸ ராஜபக்ஷ மேலும் தெரிவித்தார்.

## ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் 28ஆவது பேராளர் மாநாடு



ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் 28ஆவது பேராளர் மாநாடு 05ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை கண்டி பொல்கொல்லை மஹிந்த ராஜபக்ஷ அரங்கில் நடைபெறவுள்ளது. இம்மா நாட்டில் நாடெங்கிலுமிருந்து கட்சியின் பேராளர்கள் கலந்து கொள்ளவுள்ளனர். காலை 09.30 மணிக்கு ஆரம்பமாகும் இந்நிகழ்வு இரு அமர்வுகளாக நடைபெறும்.

முதல் அமர்வில் செயலாளர், பொருளாளர் ஆகியோரின் ஆண்டறிக்கை மற்றும் யாப்புச் சீர்திருத்தம் இருப்பின் அதுவும் வாசிக்கப்படும். பின்னர் செயற்குழுவுக்கான நியமனம் மற்றும் பேராளர்களின் கருத்துரைகள் என்பன இடம்பெறும்.

பிற்பகல் நடைபெறவுள்ள இரண்டாவது அமர்வில், புதிய உயர் பீட உறுப்பினர்கள் பற்றிய விபரங்கள் அறி விக்கப்படுவதுடன், மறைந்த ஸ்தாபகத் தலைவர் எம்.எச்.எம். அஷ்ரபின் நினைவுகூரலும் தேசியத் தலைவரின் பிரதான உரையும் இடம்பெறும்.




## தாமரைக் கோபுர கட்டுமாணப் பணிகள்

கொழும்பில் நிர்மாணிக்கப்படும் தாமரை கோபுரத்தின் கட்டுமாணப்பணிகள் எதிர்வரும் ஒக்டோபர் மாதத்திற்குள் பூர்த்திசெய்யப்படுமென செயற்திட்ட ஆலோசனைக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.

கோபுரத்தின் 90 சதவீதமான பணிகள் பூர்த்தியடைந்துள்ளன. எஞ்சிய வேலைகளும் துரிதகதியில் இடம்பெறுவதாக செயற்திட்ட ஆலோசனைக்குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.

## இருதய பாதிப்பால் உயிரிழப்பதை தடுக்கும் மருந்து ஊசி இறக்குமதிக்கு அனுமதி



இருதய பாதிப்பு ஏற்படுவோர் உயிரிழப்பதை தடுப்பதற்காக பயன்படுத்தப்படும் டெனேக்டிப்ளெஸ் (tenecteplase) மருந்து ஊசி 13,000ஐ கொள்வனவு செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதற்கென அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட நிலையில் கொள்வனவு குழுவின் சிபார்சுக்கு அமைய இந்திய நிறுவனம் ஒன்றுக்கு 5.525 மில்லியன் அமெரிக்க டொலர்களை வழங்குதவற்காக சுகாதார போஷாக்கு மற்றும் சுதேச வைத்தியத்துறை அமைச்சர் ராஜித்த சேனாரத்த சமர்ப்பித்த அமைச்சரவை பத்திரத்துக்கு அங்கீகாரம் கிடைத்துள்ளது.




## அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணியின் மட்டக்களப்பு மாவட்டச் சம்மேளனத்தை ஆகஸ்ட் மாதத்துக்குள் புனரமைப்புச் செய்வதற்கான ஏற்பாடு

All Ceylon Union of Muslim League Youth Fronts

அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகள் சம்மேளனம் வரும் செப்டம்பர் மாதத்துக்குள் அதன் மாவட்டச் சம்மேளனங்களைப் புனரமைப்புச் செய்து அவற்றை இளைஞர்களிடம் ஒப்படைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்து வருகிறது.

இதன் அடிப்படையில் மட்டக்களப்பு மாவட்டச் சம்மேளனத்தை ஆகஸ்ட் மாதத்துக்குள் புனரமைப்புச் செய்வதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இம்மாவட்டச் சம்மேளனத்தில் இணைந்து மாவட்ட, தொகுதி அமைப்பாளர்களாகவும் செயற்பாட்டாளர்களாகவும் உறுப்பினர்களாகவும் செயற்பட விரும்புவோர் ஆகஸ்ட் மாதம் 15 ஆம் திகதிக்கு முன்னர் சம்மேளனத்தின் தேசியத் தலைவர் கலாநிதி பீ.எம். பாரூக் (0770 550 557) உடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகிறார்கள். கூட்டம் நடைபெறும் திகதி மற்றும் விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முஸ்லிம் தனியார் சட்டத்தில் சமூகம் புரிந்து கொள்ள வேண்டிய மாற்றத்துக்கான அம்சங்கள்

• பியாஸ் முஹம்மத்

முஸ்லிம் தனியார் சட்டத்தில் திருத்தங்களை முன்வைப்பதற்கான குழுவினர் 09 வருட பிரயத்தனத்தின் பின்னர் தமது அறிக்கைகளைச் சமர்ப்பித்திருக்கின்றனர். ஜனாதிபதி சட்டத்தரணி பாயிஸ் முஸ்தபா உள்ளிட்ட அகில இலங்கை ஜம்மியதுல் உலமா அணி உலமாக்களையும் இஸ்லாமிய அறிஞர்களையும் சட்டத்துறை வல்லுனர்களையும் கொண்டதாக இருக்கிறது.

மறுபுறத்தில் மொத்தக் குழுவினதும் தலைவரான நீதியரசர் ஸலீம் மர்சூப் தலைமையிலான அணி, சட்ட வல்லுனர்களையும், இந்தத் தனியார் சட்ட சீர்திருத்தங்கள் சூடுபிடிப்பதற்குக் காரணமாக அமைந்த பெண்ணிலைவாதிகள் என்று சொல்லப்படுபவர்களையும் முஸ்லிமல்லாத சிலரையும் கொண்டிருக்கிறது.

இஸ்லாமிய சட்டங்கள் என்பது வெறுமனே மார்க்க விவகாரங்களை மட்டும் உள்ளடக்கியதும் அல்ல, மார்க்கத்தைப் புறந்தள்ளி வெறும் சட்டங்களாக நடைமுறைப்படுத்தப்படுவனவும் அல்ல என்ற வகையில் இந்த இரு அணிகளிலும் இருப்பவர்களின் தராதரங்களை எடைபோட்டுப் பார்ப்பது பொருத்தமானதல்ல. இஸ்லாம் அந்நியமாக வாழும் ஒரு நாட்டில், 90 வீதத்துக்கும் மேல் முஸ்லிமல்லாதவர்கள் அடங்கிய பாராளுமன்றத்தில் சட்டமாக்கக் கூடிய அளவில் முஸ்லிம் தனியார் சட்டத்தை முன்வைத்து அங்கீகாரம் பெறுவது தான் தற்போது முன்வைக்கப்பட்டுள்ள முஸ்லிம் தனியார் சட்ட அறிக்கைகளைப் பொறுத்தவரையில் நாங்கள் கவனிக்க வேண்டிய விடயம்.

இஸ்லாமிய சட்டங்களை உலகுக்குச் சிறந்த சட்டங்களாக எடுத்துக் காட்டிய நீதிபதி வீரமந்திரி போன்றவர்கள் வாழும் இந்த நாட்டில் அவர்கள் உயர்வானதாக எடுத்துக் காட்டிய இஸ்லாமிய சட்டங்களை உயர்ந்த இடத்தில் வைத்துக் காட்டி நடைமுறைப்படுத்துவது தான் எங்கள் முன்னாலுள்ள பொறுப்பு.

இந்த வகையில் குழுவில் இருப்பவர்களின் மார்க்க அடையாளங்களையும் அறிவுப் புலமையையும் நோக்குவதை விட இஸ்லாம் சொல்லுகின்ற சட்ட வாக்கத்தின் அடிப்படையில் இந்த அறிக்கைகளை சாராம்சப்படுத்துவது தான் முக்கியமானது. இப்படிப் பார்க்கும் போது சலீம் மர்சூப் அறிக்கை வெற்றி பெற்றதா, ஜம்மியதுல் உலமாவின் அறிக்கை வெற்றி பெற்றதா என்ற கண்ணோட்டத்தில் யாரும் பார்க்க நினைப்பது, சட்டத்தைச் சரியான நிலைப்பாட்டில் கொண்டு வருவதற்குத் தடையாக அமைய முடியும்.





இறுதியில் இந்த நாட்டு முஸ்லிம்களும் அவர்களது தலைமுறைகளும் பின்பற்றக் கூடிய, இந்த நாடும் பிராந்தியமும் மெச்சக் கூடிய சட்டமொன்று வெளிவர வேண்டுமே ஒழிய அந்தத் தரப்பு வென்று விட்டார்கள், இந்தத் தரப்பு தோற்று விட்டார்கள், பெண்ணிலைவாதிகளின் போராட்டம் வெற்றியளித்தது என்றெல்லாம் கோஷங்கள் எழுமானால், அது அவரவர்களுடைய முயற்சிகள் தமது தனிப்பட்ட வெற்றி தோல்வியை பிரகடனப்படுத்துவதற்கான முயற்சிகள் என்ற அர்த்தத்தையே கொடுத்து விடும். அந்த வகையில் 09 வருட கால இந்த நீண்ட முயற்சியை யாரும் மலினப்படுத்தக் கூடாது என்ற வேண்டுதலை ஆரம்பத்தில் முன்வைக்கின்றேன்.

இலங்கையின் முஸ்லிம் தனியார் சட்டம் என்பது, அது தான் இஸ்லாமிய சட்டம் என்று சொல்லுமளவுக்கு இஸ்லாமியமயப்பட்டதல்ல என்பதுவும், இதில் மாற்றங்கள் செய்யப்பட வேண்டும் என்பதுவும் தற்போது எல்லோரும் ஏற்றுக் கொண்ட விடயம். அதேபோல எந்தெந்தப் பகுதிகளில் மாற்றங்கள் வர வேண்டும் என்பதிலும் இரு தரப்பிலும் இணக்கம் காணப்பட்டிருப்பதும் மகிழ்வான விடயம். மாற்றங்கள் வர வேண்டிய பகுதிகளில் எப்படியான மாற்றங்கள் வர வேண்டும் என்பதில் கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், இந்த விடயங்களில் கருத்து வேறுபாடுகள் வரலாம் என்பதை ஏற்றுக் கொண்டு காரிய மாற்றியிருப்பது அறிஞர்களின் அவை என்ற வகையில் இரு தரப்பிலும் காணப்படுகின்ற அருமையானதொரு விடயம்.

இதே உணர்வுகளுடன் இரண்டு அறிக்கைகளையும் சாராம்சப்படுத்தி முடிக்கும் போது இருக்க முடியும் என்றிருந்தால் அது தான் இஸ்லாம் எங்களிடம் வேண்டுகின்ற விடயம். இதனால் தான் அறிஞர்களுக்கிடையிலான கருத்து வேறுபாட்டை அருளாக நாங்கள் ஏற்றுக் கொண்டிருக்கிறோம்.

இந்த இடத்தில் யாருடைய அறிக்கையில் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்று பிரித்துப் பார்ப்பதை விட என்ன விடயங்களில் உடன்பாடுகள் எட்டப்பட வேண்டும் என்பதை சுட்டிக் காட்டுவது பொருத்தம் என்று நினைக்கின்றேன்.

முக்கியமாக திருமணத்தை செல்லுபடியாக்கும் விடயத்தில் மத்ஹப் என்ற பகுதி குறித்து இரு தரப்பிலும் குறிப்பிடப்பட்டுள்ளது. ஒவ்வொருவரதும் மத்ஹப் அடிப்படையிலேயே திருமணங்கள் நிகழ வேண்டும் என தற்பொழுது உள்ள சட்டத்தில் மத்ஹப் என்ற பகுதி நீக்கப்பட வேண்டும் என்ற கருத்தும், மத்ஹப் என்பதை நீக்குவது மார்க்கத்தைச் சீர்குலைத்து விடும் என்ற கருத்தும் முன்வைக்கப்படுகிறது.

பொதுவாக இலங்கையில் மத்ஹபுகளுக்கு அப்பால் சென்று இஸ்லாத்தை நடைமுறைப்படுத்தும் செயற்பாடுகள் மிகவும் பரவலாக நடைபெற்று வருகின்றன. ஒருவர் மத்ஹபுக்கு வெளியில் செல்வது மார்க்கத்திலிருந்து வெளியேறிச் செல்வதாகக் கருதப்பட மாட்டாது என்பதில் பெரும்பாலான கருத்தொற்றுமை சமூகத்தில் நிலவுகிறது. அந்த வகையில் இலங்கை முஸ்லிம் சமூகத்துக்கு இது புதிய விடயமல்ல.

ஆனாலும் மத்ஹபுகளுக்கு அப்பால் செல்லுதல் என்னும் போது, சட்டங்களைத் தொகுத்து அமைத்த சட்டத்தொகுப்பொன்று எம்மிடம் இருக்க வேண்டும் என இலங்கையின் இஸ்லாமிய அறிஞர்கள் கருத்திடுகின்றனர். இந்த விடயத்தைக் கவனத்தில் கொண்டு மத்ஹப் விவகாரத்தைக் கையாள்வது பொருத்தமானதாக அமைய முடியும்.

நீதிச் சேவைகள் ஆணைக்குழு காதிகளை நியமிக்கும் போது முஸ்லிம் ஆண்களையே நியமிக்க வேண்டும் என முஸ்லிம் தனியார் சட்டம் சொல்கிறது. இந்தச் சட்டத்தில் ஆண் என்று குறிப்பிடப்பட்டுள்ளமையை நீக்குவது தொடர்பில் கருத்து பேறுபாடுகள் நிலவுகின்றன. பெண் சட்டத்தரணிகள் பலரும் மிகவும் வேண்டிக் கொண்ட விடயமாகவும் இது காணப்பட்டது. பெண் காதி நீதிபதியாக இருப்பது மார்க்கத்துக்கு முரணான விடயமல்ல என்பது அரசல் புரசலாகவேனும் சம்பந்தப்பட்ட தரப்பினரால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

ஆனால் இது தற்போது காதி நீதிமன்றங்களில் எதிர்நோக்குகின்ற எந்தப் பிரச்சினைக்குத் தீர்வாக அமையும் என்ற கேள்வியும் கேட்கப்படுகிறது. ஆண் காதிகள் தற்போது செய்கின்ற சில தவறுகளினால் பெண்கள் தீங்கிழைக்கப்பட்டு அதனடியாக இந்தக் கோரிக்கை எழுந்ததாக வைத்துக் கொண்டாலும், பெண் காதிகள் இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபட மாட்டார்கள் என்பதற்கும் எந்த உத்தரவாதமும் கிடையாது. இஸ்லாம் பெண்களுக்கு சமமான அந்தஸ்தை வழங்கியுள்ளதை என்பது பெண்காதி நியமனம் மூலம் வெளிப்படுத்தப்படலாம். ஆனாலும் இதனால் வரக் கூடிய நடைமுறைச் சிக்கல்களை கையாளக் கூடிய பலமான பொறிமுறைகள் எம்மிடம் உண்டா என்பது பற்றியும் சிறிது யோசித்துப் பார்ப்பது பொருத்தமாக அமைய முடியும்.

திருமணம் பதிவு செய்யப்படுவது தான் திருமணத்தைச் செல்லுபடியானதாக்குமா என்பதில் வாதப்பிரதிவாதங்கள் இருக்கின்றன. நாட்டின் சட்டத்தை மதித்துச் செயற்படும் சமூகம் என்பதால் நாட்டுச் சட்டத்தின்படி திருமணத்தைப் பதிவு செய்ய வேண்டும் என்பதில் மாற்றுக் கருத்துக்கள் இல்லை. ஆனால் திருமணம் பதிவு செய்யப்படாவிட்டால் அந்தத் திருமணம் மார்க்கத்தின் நிழலில் செல்லுபடியான திருமணமாக அமையுமா என்பதில் மாற்றமான கருத்துக்கள் நிலவுகின்றன.

அத்தோடு திருமணத்தின் போது மணப்பெண்ணே வலியாக அன்மயவும் முடியும் என்ற கருத்தும் முன்வைக்கப்பட்டுள்ளது. இவை இரண்டும் தொடர்பிலும் சமூக விவகாரங்கள் பல தொடர்புபட்டுள்ளன. இந்த விடயங்களில் சட்டம், மார்க்கம் என்ற விடயங்களுக்கு அப்பால் சமூகத்தின் கட்டுக்கோப்பைப் பேண வேண்டிய விடயமும் கவனத்தில் எடுத்துக் கொள்ளப்பட வேண்டியிருக்கிறது.

முஸ்லிம் தனியார் சட்டத் திருத்தம் என்றதுமே முஸ்லிமல்லாதார் மத்தியில் மிகவும் பேசப்பட்ட விடயமாக திருமண வயது அமைந்திருந்தது. இந்த விவகாரத்தில் இதுவரை உடன்பாடு எட்டப்பட்டதாகத் தெரியவில்லை. ஆண்களுக்கு 18 வயதும் பெண்களுக்குப் 16 வயதும் குறைந்த வயதெல்லையாக இருக்க வேண்டும் என்ற கருத்தும், ஆண் பெண் இருவருக்குமே 18 வயதை பொதுவான வயதெல்லையாக வைக்க வேண்டும் என்ற கருத்துக்களும் முன்வைக்கப்பட்டிருக்கின்றன. இதுவும் தற்போதைய சமூகச் சூழலுடன் ஒன்றித்துப் பார்க்க வேண்டிய விடயமாக இருப்பதால் இவை தொடர்பில் தரவுகளுடன் முன்வைக்கக் கூடிய நியாயங்கள் பொருத்தமாக அமையலாம்.

பலதார மணம் தொடர்பில் பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன. சமூகப் பிரச்சினைக்கான தீர்வொன்றாகவே இஸ்லாம் பலதார மணத்தை ஏற்றுள்ள நிலையில், தற்போது அதுவே சமூகப் பிரச்சினையாக மாறும் நிலைமைகள் தோன்றி வருகின்றன. அதனால் பலதார மணத்தை ஒரு ஒழுங்கமைப்பில் கொண்டு வர வேண்டிய தேவையை இருதரப்பும் உணர்ந்திருக்கிறார்கள். இந்த வகையில் பலதார மணத்துக்கு முதல் மனைவியின் அனுமதி கட்டாயமாகப் பெறப்பட வேண்டும் என்ற விதியும் இங்கு குறிப்பிடப்பட்டுள்ளது.

அதேவேளை மனைவியருக்கிடையே நீதி செலுத்துதல் என்பது சில இடங்களில் பணபலத்தைக் குறிப்பதாகவும் நோக்கப்பட்டுள்ளது. பலதார மணம் என்பது அன்றைய சமூகத்துக்கு வழங்கப்பட்ட ஒரு தீர்வாக நீதிபதி வீரமந்திரி சுட்டிக் காட்டுகிறார். பல பெண்களை கணக்கின்றி அனுபவித்து வந்த ஒரு சமூகத்தில் முதலில் இரண்டிரண்டு, நான்கு நான்கு என்று சொல்லி வந்த அல்குர்ஆன், பின்னர் உங்களால் நீதி செலுத்த முடியுமென்றால் என்ற நிபந்தனையை விதிக்கிறது. பின்னர் நீங்கள் நினைத்தாலும் நீதி செலுத்த முடியாது என்று கூறி திருமணத்தை ஒரு தாரத்துடன் ஊக்குவிக்கிறது.

மதுவை இல்லாமல் செய்தது போல விபச்சாரத்தை இல்லாமல் செய்வதற்கான படிமுறையாக அவர் இஸ்லாத்தில் பலதார மணத்தைக் கருதுகிறார். (பக்.14)

• அஜாஸ் முஹம்மத்

# சம்பிக்கவின் கருத்துக்களுக்கு முஸ்லிம் சமூகம் என்ன சொல்லப் போகிறது?

இனவாத சம்பவங்களை பொறுத்தமட்டில், கடைசி நிமிடத்தில் நடந்த சம்பவத்தையோ, அதனை ஏற்பாடு செய்து வழிநடத்தியது யார் என்பதையோ முக்கியமாகக் கவனிக்க வேண்டியதில்லை. ஒரு நாயை அடித்த சம்பவம்தான் இந்தியாவில் 'இந்து - முஸ்லிம்' கலவரத்திற்குக் காரணமாக இருந்தது. இனவாதத் தீயை எரிய விட்ட பின்பு அது கொழுந்துவிட்டு எரிய ஒரு சில நொடிகளே போதும்.

இனவாதத்தையும் மதவாதத்தையும் சமூகத்திற்குள் புகுத்திய பின்னர், வெறிபிடித்த நாயொன்றை அவிழ்த்து விட்டால் என்ன நடக்குமோ அதுதான் நடக்கும். பின்னர், நாயை அவிழ்த்து விட்டவர்களால் கூட அதைக் கட்டுப்படுத்த முடியாமல் போய் விடும்.

இலங்கை மக்கள் மத்தியில் இன வாதத் தீயை மிகவும் திட்டமிட்டு விதைத்தவர் பாடலீ சம்பிக ரணவக்க. இவர் பல வருடங்களுக்கு முன்பு எழுதியுள்ள 'அல்கைதா அல் ஜிஹாத்' என்ற நூலில் குறிப்பிட்டுள்ள கருத்துக்களை, அன்று இவர் விதைத்த நச்சுக் கருத்துக்கள் என்ற விதைகள்தான் இன்று மரமாக வளர்ந்து இலங்கை பூராவும் முஸ்லிம்களுக்கு எதிராக சிங்கள மக்களைத் தூண்டி விட்டுக் கொண்டிருக்கிறது என்பதை விளங்கிக் கொள்ள வேண்டும் என்ற நோக்கில் பகிர்கின்றேன்.

(அல்ஜிஹாத் அல்கைதா - இஸ்லாமிய அடிப்படைவாதத்தின் கடந்த காலம், தற்காலம், எதிர்காலம்- பாடலீ சம்பிக ரணவக்க Tharanga Publishers, Mudungoda, 2003, Feb.)

மேற்படி நூலிலிருந்து பெறப்பட்ட முக்கிய கருத்துக்களை பக்கங்களுடன் அவரது வார்த்தைகளிலேயே வரிக்கு வரி அப்படியே இங்கு மொழிபெயர்க்கப்பட்டுள்ளன. அவர் இஸ்லாத்தையும் முஸ்லிம்களையும் பற்றி எவ்வளவு மோசமான கருத்துக்களைக் கொண்டிருக்கிறார் என்பதை இதிலிருந்து புரியலாம். இவரது 'நெகனஹிர சிங்கள உருமய' (கிழக்கின் சிங்கள பூர்வீகம்) 2002 எனும் நூலிலும் இது போன்ற கருத்துக்கள் உள்ளன.



**சர்வதேச முஸ்லிம் அடிப்படைவாதம்**

"உலகின் பல பௌத்த நாடுகளின் வரலாறு அழிந்து போனதற்கு முஸ்லிம் அடிப்படைவாதத்தின் ஆக்கிரமிப்பு தான் காரணமாகும். ஆப்கானிஸ்தானிலிருந்து இந்தியா வரையிலும் இதுதான் பகிரங்க உண்மையாகும். இப்போதுள்ள ஈரான், ஈராக், மக்கா மற்றும் அதனைச் சூழ உள்ள பகுதிகளிலும் ஒரு காலத்தில் பௌத்த வழிபாடுகள் நடந்துள்ளன." (முகவுரையில்)

"தற்போது முழு உலகிலும் இஸ்லாத்தின் பரவலுக்கும் அடிப்படைவாதத்துக்கும் பணம் கொடுக்கும் நாடாக சவூதி அரேபியா மாறியிருக்கிறது. இஸ்லாமிய அடிப்படைவாதம் உலகம் பூராவும் பரவுவதற்கும் ஷரீஆ சட்டத்தைப் பரப்புவதற்கும் ஈரானும் அடிப்படையாக அமைந்திருக்கிறது. இலங்கையின் அடிப்படைவாதக் குழுக்களுக்கு பண மற்றும் யுத்த உதவிகளைச் செய்யும் நாடாக ஈரானைக் காணலாம். அல்ஜீரியா, மொரோக்கோ, சிரியா, ஜோர்தான், லெபனான் மற்றும் வளைகுடா நாடுகளிலும் அடிப்படைவாதம் பரவியிருக்கிறது." (பக்:78)

"கடாபி இலங்கை வந்த வேளை முஸ்லிம்கள் அவருக்காக ஏற்பாடு செய்த நிகழ்ச்சி ஒன்றில் பேசும்போது தனது பேரப்பிள்ளை இலங்கைக்கு வரும் போது இலங்கையை ஒரு இஸ்லாமிய நாடாக மாற்றுவதற்கு சகலரும் திடசங்கற்பம் கொள்ள வேண்டும் என்று கூறினார். கடாபி மனதால் இஸ்லாமிய அடிப்படைவாதிதான். இலங்கையிலுள்ள சில முஸ்லிம் அடிப்படைவாதிகளுக்கும் அமெரிக்காவை போலியாக எதிர்ப்பவர்களுக்கும் அவர் அடிப்படையான பல உதவிகளைச் செய்வது இரகசியமல்ல.

சதாம் ஹுஸைன் மேற்குலக எதிரிகளுக்கும் இலங்கையிலுள்ள முஸ்லிம் மற்றும் முஸ்லிம் அல்லாத கட்சிகளுக்கும் பண ரீதியான மற்றும் ஆயுத ரீதியான பல உதவிகளைச் செய்திருக்கிறார்." (பக்: 111,116)

"இஹ்வானுல் முஸ்லிமூன் இயக்கத்தைச் சேர்ந்தவர்களும் சவூதி அரேபியாவின் ஸலபீக்களும் அடிப்படைவாதிகளாவர். இவர்கள்தான் உஸாமா பின்லாடனை உருவாக்கினார்கள். சவூதி அரேபியாவுக்குள் அல்காயிதாவுக்கு பெருமளவு பணம் திரட்டப்படுகிறது. இதற்காக IIRO, ISCAG, IWWWM போன்ற நிறுவனங்கள் பயன்படுத்தப்படுகின்றன. உலகெங்கும் பள்ளிவாயல்களை மத்ரஸாக்களை, பாடசாலைகளைக் கட்டுவதற்கும் சேமநலத் திட்டங்களை மேற்கொள்வதற்கும் சவூதி அதிக பணத்தை வழங்குகின்றது. இலங்கையிலும் இது இப்படித்தான் நடக்கின்றது. அந்தவகையில் பயங்கர வாதத்தின் ஆணிவேராக சவூதியின் ரியால்தான் இருக்கிறது." (பக்:228)

"முஹம்மத் பின் காஸிம் இந்தியா வந்த வேளை நாலந்தா பௌத்த பல்கலைக்கழகத்தை தீயிட்டுக் கொழுத்தி 5000 பிக்குகளைக் கொன்றான்."

"இந்தியாவுக்கு வந்த முஹம்மத் பின் காஸிம் காஷ்மீரின் பௌத்த அரசை தாக்கினான். உலகின் மிகப் பெரிய பௌத்த பல்கலைக்கழகமாக இருந்த நாலந்தாவுக்கு தீயிட்டுக் கொழுத்தி 5000 பிக்குகளைக் கொன்று குவித்தான். பிக்குகள் உணவருந்திக் கொண்டிருந்த வேளையில்தான் காஸிம் நாலந்தாவுக்குள் நுழைந்தான். அந்தப் பிக்குகள் எந்த எதிர் நடவடிக்கையிலும் ஈடுபடாததினால் இந்தக் கொலையையும் தீயிடலையும் அவனால் செய்ய முடிந்தது.

பௌத்தர்கள் தமது அரசை ஆயுத பலத்தால் ஆளவில்லை. எனவே பௌத்த சாம்ராஜ்யத்தின் வடமேல் பகுதி சரிந்து விழுந்தது. பௌத்த ராஜ்யத்தின் சிதைவுகளின் மீது கட்டி யெழுப்பப்பட்ட இஸ்லாமிய அரசு கி.பி 808 வரை இந்தியாவின் சிந்துப் பிரதேசத்தில் நிலைத்தது." (பக்:52)

(பக்.06)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

EDITORIAL
49, St. Mahinda Dharma Mawatha (Perth Road), Colombo-09.
Tel: 0112 691258, 0113 642663
E-mail: meelparvai@gmail.com, Web: www.meelparvai.net

## கறுப்பு மாதங்கள் தொடரக் கூடாது

இலங்கையின் இன முரண்பாடுகளுக்குள்ளால் கறுப்பு மாதங்கள் விஷேட அடையாளங்களைப் பெறும் குறிகாட்டிகளாக மாறி வருகின்றன. 1983 ஜூலையில் தமிழினம் மீது கட்டவிழ்த்து விடப்பட்ட பேரினவாதத் தாக்குதல்கள் மயிர்க் கூச்செறியச் செய்பவை. தமிழ் இனத்தைச் சேர்ந்தவர்கள் என்ற ஒரே காரணத்துக்காக, ஒரு சிங்களச் சொல்லை உச்சரிக்கத் தெரியாமல் போன ஒரே விடயத்துக்காக தமிழர்கள் வகைதொகையின்றிக் கொல்லப்பட்டார்கள். கொதிக்கின்ற தார்ப் பீப்பாக்களில் உயிருடன் போட்டு அமிழ்த்தப்பட்டார்கள். ஈவிரக்கமின்றி மனிதத் தன்மையே வெட்கித் தலைகுனிகின்ற அளவுக்கு பேயாட்டம் ஆடி, ஓர் இனத்துக்கு எதிரான தமது வஞ்சினத்தைத் தீர்த்துக் கொண்டது சிங்களப் பேரினவாதம். 35 வருடங்கள் தாண்டியும் ஆறாத வடுவாக இலங்கையின் இனத்துவ வரலாற்றில் கறுப்பு ஜூலை ஞாபகிக்கப்படுகிறது.

அதேபோல அடுத்து வருகின்ற ஓகஸ்ட் மாதமும் இலங்கையின் இனத்துவ வரலாற்றில் கறைபடிந்த மாதமாக அனுஷ்டிக்கப்படுகிறது. காத்தான்குடிப் படுகொலைகளை ஞாபகப்படுத்தும் ஷுஹதாக்கள் தினம் முஸ்லிம் சமூகத்தால் இந்த ஓகஸ்ட் மாதத்திலேயே நினைவுகூரப்படுகிறது. இறைவழிபாட்டில் ஈடுபட்டுக் கொண்டிருந்த நிராயுதபாணி அப்பாவிகள் மீது தமிழரின் விடுதலைக்காகப் போராடுவதாகச் சொல்லிக் கொண்ட குழுவினர், சரமாரியாகத் துப்பாக்கியால் சுட்டு துடிதுடிக்கக் கொன்ற கொடூரம், உலகில் எந்தப் பயங்கரவாத அமைப்புமே செய்யாத ஈனமற்ற கொடுமையாகப் பதியப்பட்டிருக்கிறது. இங்கும் முஸ்லிம் என்ற இனத்துவ அடையாளத்தைச் சுமந்திருந்ததுவே தமிழினத்தின் விடுதலைக்காகப் போராடியவர்கள் இந்த அடாவடித்தனத்தைப் புரிவதற்குக் காரணமாக இருந்தது.

இதுபோலவே சிங்கள இனவாதிகள் முஸ்லிம் சமூகத்தின் மீது அளுத்கமையில் கட்டவிழ்த்து விட்ட காடைத்தனமும் அமைகிறது. கறுப்பு ஜூன் என முஸ்லிம் சமூகம் குறிப்பிட்டு ஞாபகப்படுத்தும் அளவுக்கு இந்தச் சம்பவமும் இலங்கையின் இனத்துவ வரலாற்றில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது. இந்தச் சம்பவத்திலும் முஸ்லிம்கள் என்ற ஒரே காரணமே குறித்த இனத்தின் மீதான தாக்குதலைத் தூண்டியிருப்பது கவனிக்கத் தக்கது.

பௌர்ணமி வெளிச்சத்துடன் மாதங்களை அடையாளப்படுத்துகின்ற ஒரு நாட்டில் இப்படி வருடத்தின் எல்லா மாதங்களும் கறுப்பானதாக மாற்றப்பட்டுக் கொண்டு வருவது நாகரிகமான உலகுக்குப் பொருத்தமானதல்ல. பெரும்பான்மை என்ற அடையாளம் கிடைத்தவர்கள் எல்லாம் தம்மை விட எண்ணிக்கையில் குறைந்ததனால் சிறுபான்மையாகிய ஒரு சமூகத்தின் மீது அத்துமீறுகின்ற காட்டுமிராண்டித் தனம் மனித குலத்துக்குரிய பண்பாடல்ல. தன்னை விடப் பலவீனமானதை வேட்டையாடி தனது வாழ்க்கை வசதிகளை அமைத்துக் கொள்ளும் சிங்கங்களதும் புலிகளதும் காட்டு தர்பார் நியாயம் மனிதர்களும் மனிதமும் வாழும் நாடுகளுக்கு உகந்ததல்ல.

இந்த வகையில் தனது இனம் மட்டுமே என்ற குறுகிய வட்டத்திலிருந்து சகல சமூகங்களும் விடுபடுவதுதான் எல்லா இனங்களுக்கும் பொதுவான இந்த நாட்டைக் கட்டியெழுப்புவதற்கான தாரக மந்திரமாக அமைய முடியும். தமிழினத்தின் மீது சிங்களப் பேரினவாதம் மேற்கொண்ட அடாவடித்தனத்துக்கான நஷ்டஈட்டை முழுத் தேசமும் சேர்ந்துதான் சுமக்கின்றது. அதேபோல சிங்கள இனவாதிகள் அளுத்கமையில் முஸ்லிம்கள் மீது மேற்கொண்ட தாக்குதலுக்கு வழங்கப்பட்ட கோடிக்கணக்கான ரூபா நஷ்டஈடுகளையும் முழுத் தேசமும் சேர்ந்தே சுமக்கிறது.

இந்த வகையில் இனமேலாதிக்க உணர்வை நிறுவுவதற்கான தளமாக நமது தேசத்தைப் பயன்படுத்தும் போதெல்லாம் நாடு பின்னோக்கி இழுபட்டுச் செல்கிறது என்பதுவே நிதர்சனமாய்த் தெரிகிறது. தனது இனத்தின் பாதிப்பை ஞாபகிக்கும் எந்த இனமும், தான் அதற்கு அருகதை தானா என்பதைச் சிந்தித்துப் பார்க்க வேண்டிய கட்டாய சூழலிலேயே நாடு நகர்ந்து கொண்டிருக்கிறது.

இன வெறியும் இன மேலாதிக்க உணர்வும் ஒழியும் வரை இலங்கை சுதந்திரக் காற்றை நுகரப் போவதில்லை.

இப்பத்திரிக்கையானது இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவிற்கு ஒத்துழைப்பு வழங்குகிறது.

வாசகர் உரிமை

Press Complaints Commission of Sri Lanka

# ராஜபக்ஷாக்களின் பம்மாத்து அரசியல்

• திஸரணி குணசேகர







இது சர்ச்சைக்குரிய செய்தி. ஆனால் சமூகத்தில் அவ்வளவு பெரிதாக அடிபடவில்லை. இரத்தினபுரி விகாரையொன்றின் விகாராதிபதி பொலிஸ் பரிசோதகர் ஒருவரை கழுத்தை நெறித்துக் கொலைசெய்துள்ளார். பாலியல் குற்றச்சாட்டில் சில காலம் இந்தத் தேரர் தலைமறைவாகியிருந்தார். இந்தக் குற்றச்சாட்டுடன் தொடர்பான பிடியாணைப் பத்திரத்தை கையளிப்பதற்காகவே பொலிஸ் பரிசோதகர் நிராயுதபாணியாக விகாரைக்கு சென்றுள்ளார். இவ்வாறு ஒரு பிக்குவை சந்திப்பதற்கு விகாரைக்குச் செல்வதைத் தவிர வேறு வழிமுறை தொடர்பில் யாரும் சிந்திப்பதுண்டா? பொலிஸ் அதிகாரியின் சத்தத்தைக் கேட்டு கிராமவாசிகள் பொலிஸ் நிலையத்திற்கு அறிவித்துள்ளனர். இதன்படி, விகாரைக்கு விரைந்த பொலிஸார் மீதும் தேரர் கைக்குண்டொன்றை வீசியுள்ளார்.

இதுபோன்ற சம்பவம் கோவில், பள்ளிவாசல் அல்லது கிறிஸ்தவ தேவாலயத்தில் இடம்பெற்றிருந்தால் நிலமை எவ்வாறிருந்திருக்கும்? இவ்வாறு ஒரு சம்பவம் இடம்பெற்றிருந்தாலும் கூட எமது ஊடகங்கள் இந்தச் சம்பவத்தை மாதக் கணக்கில் அசைபோட்டிருக்கும். தேசப்பற்றால் வயிறு கழுவும் அரசியல்வாதிகள் புலிகளின் எழுச்சி, இஸ்லாமியப் பயங்கரவாதம், கிறிஸ்தவ சூழ்ச்சி என்று விடயத்திற்கு ஏற்றவாறு கூச்சலிட்டிருப்பார்கள். இந்தக் கைக்குண்டு எங்கு தயாரிக்கப்பட்டிருக்கும்? தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக அமையும் ஆயுதத்தை ஒருவருக்கு சுதந்திரமான முறையில் தயாரிக்க முடிந்திருப்பது எவ்வளவு பயங்கரமானது என்றெல்லாம் பல்வேறு கேள்விகளை ஊடகங்கள் வாயிலாக மேலெழுப்பியிருப்பார்கள்.

எனினும் குற்றவாளி பௌத்த துறவி என்பதால் அற்பமான செய்திகளே வெளியாகின. நாட்டிற்கு ஆபத்து என்பதாக தெரிவிக்கும் எவ்வித செய்திகளையோ, கண்டனங்களையோ காண முடியவில்லை. மறு உலகின் சகல விடயங்கள் தொடர்பாகவும் பிரித் ஓதுவதை சமூகப் பொறுப்பாகக் கொண்டுள்ள மகாநாயக்க தேரர்கள் இக்குற்றச் செயல் குறித்து வாய்திறக்கவில்லை.

தற்பொழுது சந்தேகத்திற்குரிய தேரர் விசாரணைகளுக்கு உட்படுத்தப்பட்டு வருகின்றார். துரித வழக்கு விசாரணைகளின் பின்னர் இவரை கொலை உள்ளிட்ட ஏனைய குற்றச் செயல்களுடன் தொடர்பான இன்னும் 15 பிக்குகள் உள்ள சிறைச்சாலைக்கு அனுப்பினால் சிறந்தது. இவ்வாறு சிறைப்படுத்தப்பட்டிருக்கும் தேரர்களுக்கு மேலதிகமாக இன்னும் 10 தேரர்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளதாக சிறைச்சாலை பிரதானி தெரிவித்துள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக இருந்த சமயத்தில் வழக்கு நடவடிக்கைகளைப் பிரச்சினையாகப் பார்த்தார். இதனால் அவர் நீதி நடவடிக்கைகளுக்கு பதிலாக வேட்டையாடுவதை வழக்கமாக கொண்டார். தற்போதைய வழக்கு நடவடிக்கைகளை அவர் தம்மை வேட்டையாடுவதாகக் காண்கிறார். கடந்த மாதம் மாத்தறை விகாரையொன்றில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றிய அவர், பிக்குகளை பழிவாங்கும் நோக்கில் குற்றவாளிக்கூண்டில் நிறுத்தியிருப்பதாக தெரிவித்தார். "40-50 தேரர்களை சிறையில் அடைத்திருக்கும் காலம் இது. பௌத்தர்கள் எனும் வகையில் அவர்களை பாதுகாக்கும் தேவையுள்ளது" தொடர்ந்தும் அவர் "முன்னர் ஒரு குடும்பத்தில் ஒன்பது பத்துப் பேர் இருப்பார்கள். இன்று ஓரிருவரே உள்ளனர். கூடினால் மூன்று. எமது இனம் இன்று அருகி வருகின்றது. பொருளாதாரக் கஷ்டங்கள் உள்ளன. என்றாலும் எமது சனத்தொகையை குறைப்பதற்கு அரசாங்கமும் மறைமுக வேலைத்திட்டமொன்றை முன்னெடுக்கிறது"

தேரர்களை பழிவாங்குதல் மற்றும் சிங்கள இனத்தை அருகச்செய்தல் போன்ற விடயங்களை இவ்வரசு முன்னின்று செயற்படுத்தி வருவதாகவே ராஜபக்ஷ தன்னுடைய கருத்துக்கள் மூலம் புலப்படுத்துகிறார். 1881 இல் 66.91 வீதமாகவும் 61.53 வீதமாகவும் காணப்பட்ட இலங்கைச் சிங்களவர்கள் மற்றும் பௌத்தர்களின் சனத்தொகை 2012 இல் முறையே 74.9, 70.1 வீதம் வரை வளர்ச்சி [illegible] வோம். இதையில் 25 தேரர்கள் மாத்திரம் உள்ளார்கள் என்பதையும், குற்றச்சாட்டுகளின் பேரிலேயே அவர்கள் சிறையில் தள்ளப்பட்டிருக்கிறார்கள் என்பதையும் மறந்துவிடுவோம். அவரது கதையைச் செவிமடுப்பவர்களுக்கு இந்த விடயங்கள் தெரியாது. அறிந்துகொள்ள வேண்டிய தேவையும் அவர்களுக்கு இருக்காது. இவர்களால் உருவாக்கிக் கொள்ளப்பட்டுள்ள புனைகதைக்கு ராஜபக்ஷவின் பொய்கள் சரியாகப் பொருந்துகிறது.

மஹிந்த ராஜபக்ஷவுக்கு 3 பிள்ளைகள் மாத்திரம் இருப்பது ஏன் என்பதையாவது இவர்கள் சும்மாவேனும் சிந்தித்துப் பார்ப்பதில்லை. மஹிந்தவை விட தேசப் பற்றாளரான கோத்தாபயவுக்கு ஒரு பிள்ளை மாத்திரமே இருப்பது பற்றியேனும் இவர்கள் சிந்திப்பதில்லை. மஹிந்தவிற்கு அல்லது அவரது சகோதரருக்கு ஒன்பது அல்லது 10 பிள்ளைகள் இல்லாதிருப்பதற்கான காரணம் ராஜபக்ஷ கூறுவதைப் போன்று பொருளாதாரக் கஷ்டங்களோ, தற்போதைய அரசின் சூழ்ச்சித் திட்டங்களோ காரணமாக இருக்காது. இவையனைத்தையும் ஒருபுறத்தில் வைத்திடுங்கள். ராஜபக்ஷ குடும்பத்தில் ஏன் இதுவரையில் ஒருவரும் துறவறம் பூணவில்லை?

சிறிசேன - விக்ரமசிங்க அரசாங்கத்தில் கோமாளிகளே அதிகம் உள்ளனர். இந்த அரசாங்கத்திற்கு எதிராக ஒருவரால் தரவு ரீதியில் நிரூபிக்கக்கூடிய ஆயிரம் குற்றச்சாட்டுகள் உள்ளன. சாதாரண மனிதனின் வாழ்க்கைத் தரத்தை கட்டியெழுப்புவதில் இவ்வரசாங்கம் தோல்வியடைந்திருக்கும் முறையைச் சுட்டிக்காட்டி அவற்றை ஒருவரால் முன்வைக்க முடியும். இதற்குப் பதிலாக நாட்டைக் கொளுத்தும் பொய்களை கூற வேண்டிய அவசியம் இல்லை. எனினும் ராஜபக்ஷாக்கள் மீண்டும் அதிகாரத்தை கைப்பற்ற பொய்களை தெரிவித்து வருகிறார்கள். இதன் மூலம் இவர்கள் ஜனநாயக விரோத மனநிலையை நாட்டில் விதைத்து வருகின்றார்கள்.

### குற்றங்கள் அதிகரித்துள்ளதா?

'ஹிட்லர் அவதாரம் எடுத்தேனும் நாட்டை செய்யுங்கள்' என வெடருவே உபாலி தேரர் கோட்டாபயவுக்கு உபதேசம் செய்துள்ளார். ஹிட்லர் பைத்தியத்தில் உழலும் ஒரே நபர் இவர் மாத்திரமல்ல. கிறிஸ்தவர் என தன்னை அழைத்துக்கொள்ளும் ஒருவர் டுவிட்டரில் பின்வருமாறு பதிவிட்டுள்ளார், "இலங்கையில் இடம்பெறுகின்ற கொலைச்சம்பவங்களை [illegible]ார்க்கும் போது இந்நாட்டை யார் ஆட்சிசெய்கிறார்கள் என்பது விளங்குகிறது... நாடு மிக மோசமான நிலைக்கு தள்ளப்பட்டுள்ளது." (ஹிட்லரை வர்ணித்தமை தொடர்பில் அவர் தனது கவலையை வெளிப்படுத்தியிருப்பதால் அவரது பெயரை நான் இங்கு குறிப்பிட விரும்பவில்லை)

நிலைமை பாரதூரமான கட்டத்தில் உள்ளதை தெரிந்துகொள்ள இவர் எதனைப் பார்த்தார் என்கின்ற கேள்வி இங்கு மேலெழுகின்றது. இவர் தற்போதைய தரவுகளை அவதானிக்கவில்லை என்பது உறுதி. ஏனெனில் ஆய்வுகளின் படி, இன்று ராஜபக்ஷ காலப்பகுதியில் இடம்பெற்ற கொலைச் சம்பவங்களை விடவும் குறைந்தளவிலான கொலைச் சம்பவங்களே பதிவாகின்றன. (அத்துடன் அவை பாரதூரமற்றவை என்பதும் கவனிக்கத்தக்கது.)

2010 இல் 57,381 பாரதூரமான குற்றச் செயல்கள் இடம்பெற்றுள்ளன. 2011 இல் அவ்வெண்ணிக்கை 54,156 ஆகவும், 2012 இல் (முழுமையான தரவுகள் இல்லை) 2013 இல் 55,128 ஆகவும், 2014 இல் 50,814 ஆக வும், 2015 இல் 40,188 ஆகவும், 2016 இல் 36,937 ஆகவும், 2017 இல் 35,978 ஆகவும் பதிவாகியுள்ளன. கொலைச் சம்பவங்களை எடுத்துக் கொண்டால் 2010 இல் 742 உம், 2011இல் 703 உம், 2012 இல் (முழுமையான தரவுகள் இல்லை) 2013 இல் 586 உம், 2014 இல் 548 உம், 2015 இல் 474 உம், 2016 இல் 502உம் 2017இல் 452உம் பதிவாகியுள்ளன.

பெண்களுக்கு எதிரான பாலியல் வன் கொடுமைகள் மற்றும் சிறுவர் துஷ்பிரயோகச் சம்பவங்கள் உள்ளிட்ட ஏனைய குற்றச் செயல்கள் தொடர்பிலான ஆய்வறிக்கையை நோக்கினாலும் மேற்படி தரவுகளுக்கு ஒப் பாகவே அவையும் காணப்படுகின்றன. இலங்கை குற்றங்கள் அல்லது வன்முறைகளை விட்டும் விடுதலை பெற்ற நாடொன்றல்ல. எனினும் குற்றங்களின் தன்மை மற்றும் அவற்றின் வளர்ச்சி வீதங்கள் இற்றைக்கு 4 வருடங்களுக்கு முன்பு காணப்பட்டதை விட குறைவாக உள்ளது. முன்பொருபோதும் இல்லாத வகையில் நாடு இன்று குற்றங்களின் தேசமாக மாறியிருப்பதாக ஆதாரபூர்வமற்ற தரவுகளின் அடிப்படையில் போலியான செய்திகளைத் தெரிவிப்பதன் மூலமே மக்கள் மத்தியில் ஒரு பிழையான புரிதலை ஏற்படுத்தியிருக்கிறார்கள்.

அரசியல் மற்றும் கட்சி அரசியலின் நோக்கங்களே இவை. 'பயங்கரமான நிலைமை' என்பதாக ஒரு பிழையான மனோபாவத்தை ஏற்படுத்திவிட்டு, எதிர்கால ராஜபக்ஷ ஆட்சியின் கீழ் சுதந்திரம் மற்றும் ஜனநாயக உரிமைகளை இல்லாமல் செய்துவிடுவதற்கான களத்தை தயார்படுத்தும் நோக்கங்களே இவற்றுக்குப் பின்னால் உள்ளன.


சிறிசேன - விக்ரமசிங்க அரசு மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை மறந்துவிட்டுள்ளது. தற்பொழுது பொலன்னறுவையில் விமானநிலையமொன்றை அமைக்கும் எவ்வித பிரயோசனமுமற்ற முயற்சி அதற்குச் சான்று பகர்கிறது. மறுபுறத்தில் மக்களுக்கு ராஜபக்ஷ காலப்பகுதி எப்படியிருந்தது என்பதும் மறந்துபோயுள்ளது. கஹவத்த, கொடகெதன கொலைச் சம்பவங்கள், பாரத லக்ஷ்மன் பிரேமசந்திர கொலை, பிரித்தானியாவைச் சேர்ந்த குராம் சேக் கொலைசெய்யப்பட்டு அவரது ரஷ்ய நாட்டு காதலி கூட்டுப் பாலியல் வன்கொடுமைக்கு உள்ளாக்கப்பட்டமை போன்ற சம்பவங்கள் மக்களுக்கு மறந்து போயுள்ளன.

இதுதவிர, ராஜபக்ஷவின் அடிவருடிகள் அன்று சட்டத்திலிருந்து தப்பித்து வந்த விதமும் மக்கள் நினைவில் இல்லை. எமக்கு மேர்வின் சில்வா நினைவில்லை. கொலை மற்றும் பாலியல் துஷ்பிரயோகச் சம்பவங்கள் உள்ளிட்ட 100 இற்கும் அதிகமான சம்பவங்கள் தொடர்பாக பிடியாணை பிறப்பிக்கப்பட்ட ஜூலம்பிடியே அமரே இராணுவச் சீருடை தரித்து டி.56 ரக துப்பாக்கியை கையில் ஏந்தியபடி தங்காலை நகரை தலைகீழாய் புரட்டியது எமக்கு நினைவில்லை.

ராஜபக்ஷாக்கள் மீண்டும் அதிகாரத்திற்கு வரும் திட்டத்தின் மிக முக்கிய உள்ளீடாகக் காணப்படுவது மறதியாகும். (பக்.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• மாலிக் பத்ரி




## முஸ்லிம் விவாக - விவாகரத்துச் சட்டத் திருத்த அறிக்கை

# ஒழித்து விளையாடும் பொறுப்பாளர்கள்

முஸ்லிம் விவாக-விவாகரத்துச் சட்டத் திருத்தம் தொடர்பாக ஓய்வுபெற்ற நீதிபதி சலீம் மர்ஸூப் தலைமையிலான குழுவின் அறிக்கை நீதியமைச்சர் தலதா அதுகோரலவிடம் கையளிக்கப்பட்டு ஆறுமாதங்களின் பின்னர் நீதியமைச்சின் இணையத்தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

திருத்தத்திற்காக நியமிக்கப்பட்ட குழுவிலிருந்து விலகிச் சென்ற உறுப்பினர்களைக் கொண்ட அணியின் அறிக்கையும் மாற்று ஆலோசனைகளோடு கையளிக்கப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது. அகில இலங்கை ஜம் இய்யதுல் உலமா முஸ்லிம் அரசியல்வாதிகளை அழைத்து சலீம் மர்ஸூப் தலைமையிலான குழுவின் அறிக்கை குறித்தும் அதில் உள்ளடங்கியுள்ள ஷரீஆவுக்கு மாற்றமான அம்சங்கள் குறித்தும் விளக்கமளிக்கப் போவதாக அறிவித் துள்ளது. ஏற்கனவே இது தொடர்பான சந்திப்பொன்று நடைபெற்ற போதும், அதில் அனைத்து முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களும் சமூகம் தரவில்லை என ஊடகங்களில் செய்திகள் வெளியாகின.

ஜம்இய்யாவின் இம்முயற்சியை பெண்ணுரிமை இயக்கங்கள் கண்டித்து வருவதோடு, ஊடகவியலாளர் சந்திப்புக்களையும் நடத்தி வருகின்றன. ''உங்கள் பெண்களுக்கும் சிறுமிகளுக்கும் அநீதி இழைத்து விட வேண்டாம்'' என்ற சுலோகத்தைத் தாங்கிய ஆர்ப்பாட்டமொன்றை சமீபத்தில் பாராளுமன்றத்திற்கு முன்பாக இவ்வியக்கங்கள் நடத்தின.

விவாக-விவாகரத்து திருத்த அறிக்கை விவகாரத்தை நோக்கும்போது ஏதோ அது ஜம்இய்யாவிற்கும் பெண்ணிலைவாத இயக்கங்களுக்கும் இடையிலான விவாதப் பொருள் போன்றே பொது மக்கள் பரப்பில் காட்சி தருகின்றது. காரணம், பெண்ணிலைவாத இயக்கங்களின் தேவைக்காக மேற்கொள்ளப்படும் ஒரு முயற்சியாகவே அது காட்டப்பட்டு வந்துள்ளது.

ஒல்லாந்தர் காலத்தில் (1715 - 1785) கவர்னர் வில்லியம் போல்க் என்பவரால் இந்தோனேசியாவின் கிழக்கு டச்சுக் கம்பனியின் மையமாக விளங்கிய பதேவியாவிலிருந்து தருவிக்கப்பட்டதே இலங்கை முஸ்லிம் தனியார் சட்டத்தின் ஆரம்பமாகும். பிரித்தானியர் காலத்தில் மாற்றங்களுக்கு உட்பட்ட இச்சட்டம் 1926 இலிருந்து நடைமுறையிலுள்ளது. அவ்வப்போது சிற்சில திருத்தங்கள் இச்சட்டத்தில் மேற்கொள்ளப்பட்டாலும் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் எதுவும் செய்யப்படவில்லை.





உண்மையில் நடைமுறையிலுள்ள முஸ்லிம் விவாக-விவாகரத்துச் சட்டத்தில் மாற்றங்களும் திருத்தங்களும் அவசியம் என்பதற்கான நியாயங்கள் ஏராளம். காழி நீதிமன்றக் கட்டமைப்பு நீதியை முழுமையாக நடைமுறைப்படுத்தும் நிலையில் இல்லை. காழி நீதிபதிகளுக்கான தகுதிகள், காழி நியமனம், காழி நீதிமன்ற நடைமுறைகள், பெண்கள் அதனால் எதிர்கொள்ளும் பாதிப்புகள் என காழி நீதிமன்ற முறை; கட்டமைப்பு மாற்றமொன்றுக்கு உட்படுத்த வேண்டிய நியாயப்பாடுகள் பல உள்ளன.

அதேபோன்று திருமண வயது, பலதார மணம், கைக்கூலி, பிள்ளைத் தாபரிப்பு, தலாக், பிள்ளைகளின் பாதுகாப்பு போன்ற இன்னோரன்ன விடயங்களில் பல்வேறு மாற்றங்களும் திருத்தங்களும் அவசியமாகின்றன. பல்வேறு சீர்குலைவுகளை எதிர்கொண்டுள்ள காழி நீதிமன்ற நடைமுறைகளும் அங்கு விசாரணைக்கு வரும் சிக்கலான வழக்குகளும் விவாக-விவாகரத்துச் சட்டத்தில் உடனடி மாற்றம் தேவை என்பதை வலியுறுத்தி நிற்கின்றன.

குறிப்பாக, திருமண வயது மற்றும் பலதார மணம் குறித்து, நிலவும் சட்டத்திலுள்ள ஓட்டைகளை பலர் மோசமாக துஷ்பிரயோகம் செய்து வருகின்றனர் என்பதற்கு களரீதியாக மேற்கொள்ளப்பட்ட ஆய்வு வழியாக பல உதாரணங்களை முன்வைக்கலாம்.

கடந்த கால் நூற்றாண்டு கால இடைவெளியில், காழி நீதிமன்ற கட்டமைப்பு மற்றும் பலதார மணம் குறித்து மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் மற்றும் தனியாள் கற்கைச் சம்பவங்கள் (Case Studies) ஏராளமாக உள்ளன. ஆக, முஸ்லிம் விவாக-விவாகரத்துச் சட்டத்தில் திருத்தம் அவசியம் என்பது கால் நூற்றாண்டுக்கு முன்னரேயே உணரப்பட்டு விட்டது. ஆனால், இதிலுள்ள சங்கடம் என்னவெனில், இந்த உண்மையை சமூகவெளிக்கு முதலில் கொண்டு வந்தவர்கள் பெண்ணுரிமைச் செயற்பாட்டாளர்கள்தான் என்பதில் சந்தேகமில்லை.

வாய்ப்புக்கேடாக பெண்ணுரிமைச் செயற்பாட்டாளர்களின் நிகழ்ச்சி நிரல் குறித்து பொதுவாக நிலவும் ஐயத்தை வைத்துக் கொண்டு ஜம்இய்யாவோ பாரம்பரிய உலமாக்களோ திருத்தத்தை எதிர்த்து நிற்பதை எந்தவகையிலும் நியாயப்படுத்த முடியாது. மாற்றங்கள் வேண்டுமா என்பதை திறந்த மனதோடும் இதய சுத்தியோடும் ஆராய்ந்து பார்த்திருந்தால் இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கும் இழுபறியும் ஒழித்து விளையாடுதலும் இடம்பெற்றிருக்காது.

''பெண்ணிலைவாதிகளின் தேவைக்காக எங்கள் மூதாதையர்களால் எமக்கென வகுத்தளிக்கப்பட்ட ஷரீஆவின் அடிப்படையிலான முஸ்லிம் தனியார் சட்டம் கைநழுவிச் செல்லப் போகின்றது. இஸ்லாமிய இயக்கங்களே வந்து காப்பாற்றுங்கள்'' என்பது போல ஜம்இய்யா புரளி கிளப்புவதன் மூலம் பிரச்சினையின் மையத்தைக் காணத் தவறுகின்றது.

2009 இல் அப்போதைய நீதியமைச்சர் மிலிந்த மொரகொடவினால் நியமிக்கப்பட்ட சலீம் மர்ஸூபின் தலைமையிலான சிபாரிசுக் குழு கடந்த 9 ஆண்டுகளாக முஸ்லிம் விவாக-விவாகரத்துச் சட்டம் குறித்து ஆராய்ந்து வந்தது. சட்டத்தில் பிரச்சினைக்குரிய அம்சங்களை இனங்கண்டது. ஜம்இய்யாவுடனும் பல்வேறு அமர்வுகளை நடத்தி ஆலோசனைகளைப் பெற்றது.

இஸ்லாமிய பிக்ஹை விரிந்த கண்ணோட்டத்தில் நோக்கி ஷரீஆவின் நோக்கங்களையும் சமூகத்தின் நலன்களையும் அடிப்படையாக வைத்து தேவையான திருத்தங்களை ஓர் அறிக்கையாக சமர்ப்பித்துள்ளது. துரதிஷ்டவசமாக ரிஸ்வி முப்தி தலைமையில் சிபாரிசுக் குழுவின் அரைவாசிப் பேர் விலகிச் சென்று தமது பங்கிற்கு ஒரு மாற்று அறிக்கையை தயாரித்துள்ளனர்.

பன்மைப் பாங்கான இலங்கையில் அறுதிச் சிறுபான்மையாக வாழும் முஸ்லிம்களுக்கு இது போன்ற தனியார் சட்டமொன்று வாய்த்திருப்பது மிகப் பெரும் வரப் பிரசாதமாகும். ஏனெனில், இலங்கையின் தேசிய அரசியலமைப்புச் சட்டத்திற்கு முரண்பட்ட வகையிலான அம்சங்கள் கூட

> **முஸ்லிம் விவாக-விவாகரத்துச் சட்டத்தில் மாற்றம் வேண்டுமா இல்லையா என்பதைத் தீர்மானிப்பது நியூயோர்க்கிலுள்ள உல்க வங்கியோ சர்வதேச நாணய நிதியமோ கொழும்பிலுள்ள அமெரிக்கத் தூதரகமோ அல்ல. நாம்தான் அதனைத் தீர்மானிக்க வேண்டும். நடைமுறையை ஆராயும் எவரும் மாற்றமும் திருத்தமும் காட்டாயம் என்ற முடிவுக்கு வருவார்கள். இதுதான் கடந்த 25 ஆண்டு காலமாக வலியுறுத்தப்பட்டு வருகிறது.**

முஸ்லிம் தனியார் சட்டத்தில் உள்ளபோதும் மிக நீண்ட தூரம் இச்சட்டம் நடைமுறையில் இருந்து வந்துள்ளது. இப்போது முஸ்லிம் சமூகத்தின் நலன்களை முன்னிறுத்தியே திருத்தமும் மாற்றமுமே சமூகத்தால் வேண்டப்படுகின்றது.

நடைமுறையிலுள்ள விவாக-விவாகரத்துச் சட்டம் நூறு வீத ஷரீஆவின் அடிப்படையில் அமைந்ததல்ல. ஏனெனில், கைக்கூலி போன்றன அதில் அனுமதிக்கப்பட்டுள்ளது. விவாக-விவாகரத்துச் சட்டத்தில் கொண்டுவரப்படும் மாற்றம் அல்குர்ஆன் சுன்னாவை மாற்றுவதற்கு ஒப்பானது என்று தவறான பிரச்சாரத்தை சிலர் மேற்கொண்டு வருகின்றனர். அது தேவையான திருத்தங்களிலிருந்து மக்களின் கவனத்தைத் திசைதிருப்பும் தந்திரமாகும். மீண்டும் ஒரு நூற்றாண்டுக்கு சமூகத்தைப் பின்நோக்கித் தள்ளும் பிற்போக்குத் தனமாகும்.

9 ஆண்டுகள் ஜம்இய்யாவுடன் அமர்ந்து பேசிய தன் பின்னர் மீண்டும் முஸ்லிம் பாராளுமன்ற உறுப்பினர்களை அழைத்துப் பேசுவதற்கு என்ன இருக்கின்றது? காலத்திற்கும் சமூகத்திற்கும் அவசியமான திருத்தங்களை ஷரீஆவின் வரையறைக்குள் மேற்கொள்வதை ஏன் ஜம்இய்யா எதிர்த்து நிற்கின்றது?

விளம்பமற்ற சில அரசியல்வாதிகள் மற்றும் சில சிரேஷ்ட சட்டத்தரணிகள் தமது ''ஆழ்ந்த சமூக அக்கறையை'' வெளிக்காட்டுவதற்கு ஒரு சந்தர்ப்பமாக இன்றைய சூழலை கையாள்வது போலவே தெரிகிறது. GSP வரிச் சலுகைக்காகவே அரசாங்கம் தனியார் சட்டத்தை மாற்றப் போவதாக கடந்த காலத்தில் சிலர் காட்டுக் கூச்சல் போட்டனர். அடிநுனி தெரியாமல் மொட்டைத் தலைக்கும் முழங்காலுக்கும் முடிச்சுப் போடும் இந்த முல்லாத்தனம் முட்டாள்தனமானது என்பது இப்போது புரிகிறதல்லவா?.

தற்போது அரசாங்கம் GSP வரிச் சலுகையைப் பெற்று விட்டது. அப்படியானால் புரளி கிளப்பியவர்களும் வதந்தி பரப்பியவர்களும் இப்போது என்ன சொல்லப் போகின்றார்கள்?

முஸ்லிம் விவாக-விவாகரத்துச் சட்டத்தில் மாற்றம் வேண்டுமா இல்லையா என்பதைத் தீர்மானிப்பது நியூயோர்க்கிலுள்ள உலக வங்கியோ சர்வ தேச நாணய நிதியமோ கொழும்பிலுள்ள அமெ ரிக்கத் தூதரகமோ அல்ல. நாம்தான் அதனைத் தீர்மானிக்க வேண்டும். நடைமுறையை ஆராயும் எவரும் மாற்றமும் திருத்தமும் காட்டாயம் என்ற முடிவுக்கு வருவார்கள். இதுதான் கடந்த 25 ஆண்டு காலமாக வலியுறுத்தப்பட்டு வருகிறது.

ஷரீஆ, பிக்ஹ், கானூன் ஆகிய மூன்றையும் இலங்கைச் சூழலில் பழமைவாதத்தில் ஊறிப் போனவர்கள் குழப்பிக் கொள்கிறார்கள். இதனால் தான் எடுத்ததற்கெல்லாம் ஷரீஆ என்ற சொல்லைப் பயன்படுத்துகின்றனர். மாற்றம் அல்லது திருத்தம் என்பதற்கு குறுக்கே நிற்பதற்கு ஷரீஆ இவர்களுக்கு ஒரு கேடயம்.

அல்லாஹ் இறக்கிய குர்ஆனும் அவனது தூதரது ஸுன்னாவுமே ஷரீஆவாகும். அது ஒருபோதுமே மாறுவதில்லை. யாராலும் அதை மாற்றவும் முடி யாது. ஷரீஆ குறித்த இறைவனின் பிரதிநிதியான மனிதன் கொள்ளும் புரிதலே பிக்ஹ் எனப்படு கின்றது. ஷரீஆ காலத்தாலோ இடத்தாலோ மாற்ற மடைதில்லை. ஆனால், பிக்ஹ் மாற்றமடைகிறது. இதனால்தான் இஸ்லாமிய வரலாற்றின் ஆரம்ப காலப் பிரிவில் 400 இற்கும் மேற்பட்ட பிக்ஹ் மத்ஹபுகள் காணப்பட்டன. பின்னர் அவை செல்வாக்கிழந்து நான்காகச் சுருங்கியது என்கிறார் 20 ஆம் நூற்றாண்டின் சட்டமேதை கலாநிதி முஸ்தபா அஹ்மத் ஸர்கா.

குறிப்பிட்ட ஒரு ஆட்சிப் பரப்பில் ஓர் அரசாங்கம் தனக்குக் கீழேயுள்ள சிவில் சமூகத்தை குழப்பமின்றி ஆள்வதற்கு நடைமுறைப்படுத்தும் பிரத்தியேக சட்டமே கானூன் எனப்படுகிறது. இம்மூன்றுக்கும் இடையில் முரண்பாடுகள் ஏற்படாமல் ஷரீஆவின் நோக்கங்களையும் சமூகத்தின் நலன்களையும் கருத்திற் கொண்டு நாம் வாழும் காலம், சூழ்நிலை என்பவற்றுக்கு ஏற்ப பிக்ஹில் திருத்தம் கொண்டு வருவது ஒன்றும் பிரச்சினைக்குரியதல்ல.

தனியார் சட்டத்தில் கைவைத்தால் காலப் போக்கில் அது இல்லாமல் போய்விடும் என்று தேவையற்ற புரளியை இங்கு யாரும் கிளப்ப வேண்டியதில்லை. இது அறிவுபூர்மற்ற பயம் அல்ல. மாறாக, அறியாமை. கைவைத்துத் திருத்தாவிட்டால்தான் அது காணாமல் போகும் அபாயம் உள்ளது. ஏனெனில், ஒரு நாட்டின் நீதிப் பரிபாலனம் என்பது அதனை ஆளும் அரசாங்கத்திற்குரிய பொறுப்பாகும். அதேபோன்று நீதித் துறை பரிபாலனத்தில் பால் வேற்றுமைகள் கிடையாது. நீதி சட்டம் என்று வரும்போது ஒரு நாட்டின் பிரஜைகள் அனைவரும் சமமானவர்கள்.

இலங்கையின் அரசியலமைப்புச் சட்டத்தில் இவ்விரு விடயங்களும் மிகத் தெளிவாக உள்ளடக்கப்பட்டுள்ளன. நடைமுறையிலுள்ள காழி நீதிமன்ற முறைமை மற்றும் பெண்களுக்கு நீதிபதிகளாகப் பதவி வகிக்க முடியாமை குறித்து யாரேனும் ஒருவர் இலங்கையின் உச்சநீதி மன்றத்தில் வழக்கொன்றைத் தாக்கல் செய்தால் நம் கையிலிருக்கும் தனியார் சட்டம் காணாமல் போய்விடும் என்ற அடிப்படை உண்மையை நாம் மறந்துவிடக் கூடாது. அப்படியொரு வழக்கை இதுவரை யாரும் தாக்கல் செய்யவில்லை என்ற நம்பிக்கையில் கண்ணைப் பொத்திக் கொண்டு ஒழித்து விளையாடும் காட்சி இதற்கு மேலும் தொடரக் கூடாது.

ஷரீஆவை பாதுகாக்கும் அக்கறை ஜம்இய்யாவுக்கு மட்டுமல்ல. இந்த நாட்டில் பல தசாப்தங்களாக இஸ்லாமிய தஃவா பணியில் ஈடுபடும் பல்வேறு இயக்கங்களுக்கும் உள்ளன. மத்ஹப் என்ற குறுகிய வட்டத்திற்குள் சுழன்று கொண்டிருக்காது இஸ்லாத்தை அதன் விரிந்த கண்ணோட்டத்தில் புரிந்து வைத்திருக்கும், ஆழ்ந்து கற்றிருக்கும் இஸ்லாமிய அறிஞர்கள் இந்நாட்டில் உள்ளனர்.

தாம் மத்ரஸாக்களில் கற்ற ஒரு மத்ஹபின் பிக்ஹே ஒட்டுமொத்த இஸ்லாம் எனக் கருதுவதும், இலங்கைச் சூழலின் கள யதார்த்தங்களை ஏற்க மறுப்பதும் இன்றைய சூழலுக்கு எந்த வகையிலும் பொருந்தி வராத நிலைப்பாடுகளாகும்.

மத்ஹப் வட்டத்திலிருந்து வெளியேற மாட்டோம் என்று கூறுபவர்கள் தாம் வலியுறுத்துகின்ற ஒற்றை மத்ஹபையே இலங்கை முஸ்லிம்கள் பின்பற்ற வேண்டும் என்று கூறுவதற்கு ஷரீஆவிலிருந்து ஆதாரங்களை முன்வைக்க வேண்டும். எண்ணெய் திரண்டு வரும்போது தாழி உடைந்த கதை போலல்லாது சமூக யதார்த்தத்தைக் கருத்திற் கொண்டு திருத்தங்களுக்கு ஆதரவளிக்க சம்பந்தப்பட்ட அனைவரும் முன்வர வேண்டும்.

இது ஒழித்து விளையாடுவதற்கான நேரமல்ல. நாளை மிக வேகமாக நெருங்கி வருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாடுவது நலம்



இம்தியாஸ் பாக்கிர் மாக்கார்

# முஸ்லிம்கள் நாட்டிற்கு சுமையாக இருக்கக் கூடாது

பெரும்பாலானவர்கள் இன்று நாட்டிற்கு ஏதாவதொன்றை வழங்குவதற்குப் பதிலாக நாட்டிலிருந்து ஏதாவதொன்றை பெற்றுக்கொள்வதற்கே பழக்கப்பட்டுள்ளனர். முஸ்லிம்கள் என்ற வகையில் நாம் எப்பொழுதும் நாட்டிற்குச் சுமையாகாமல் நாட்டிற்கு ஏதாவதொன்றைக் கொடுப்பவர்களாக மாற வேண்டும். எமது எதிர்காலம் இளைஞர்களுக்கானதே. இளைஞர்கள் நேர்மையானவர்கள். இளைஞர்கள் எப்பொழுதும் ஊழல் மோசடிகளுக்கு எதிரானவர்கள்.

நல்லிணக்கம், சகவாழ்வு, சமத்துவம் தொடர்பில் இளைஞர்களுக்கு மிக முக்கிய பொறுப்புள்ளது. இவற்றுக்காக வேண்டி இளைஞர்கள் தங்கள் சக்தியை தியாகிக்கும் காலமே எழுந்திருக்கிறது. எமது நாட்டின் முஸ்லிம் சமூகம் தொடர்பாக இளைஞர்களிடம் ஒரு கனவுள்ளது என்பதை நாம் அறிவோம். நாட்டிலிருந்து நாம் இன்னும் வேண்டிக்கொண்டிருப்பதற்குப் பதிலாக நாட்டிற்கு ஏதாவதொன்றை செய்கின்ற, அடுத்த மக்களுக்கு உதவும் சமூகமாக மாற வேண்டும். இந்தச் சவாலை இளைஞர்களே பொறுப்பேற்க வேண்டும்.

பல நாடுகளில் ஆட்சியை மாற்றியதில் இளைஞர்களின் பங்களிப்பு அளப்பறியவை. தூனிசியாவில் இடம்பெற்ற மல்லிகைப் புரட்சி இதற்கு சிறந்த உதாரணம். அரசியல், சமூக, பொருளாதார விடயங்களில் இன்று அதிக இளைஞர்கள் ஈடுபாடு காட்டி வருகின்றார்கள். இளைஞர்களை சரியான பாதையில் வழிகாட்டுவதன் மூலம் ஒரு நாட்டிற்கு பல்வேறு துறைகளில் சாதிக்க முடிகின்றது.

கடந்த காலப்பகுதியில் கண்டி திகன பகுதியில் இடம்பெற்ற இனவன்முறைகளை 25 வயதுக்கும் குறைவான இளைஞர்களே முன்னின்று செயற்படுத்தியுள்ளனர். எனவே இளைஞர்ளை பிழையான வழியில் நடாத்தும் பொது அதனால் ஏற்படுகின்ற பாதக நிலைமைகளை நாடென்ற வகையில் அனைவரும் அனுபவிக்க வேண்டியேற்படும். இதற்கு பல உதாரணங்களை சொல்ல முடியும்.

எனவே, இளைஞர்கள் இன, மதம் பாராமல் அதிகதிகம் சமூக சேவைப் பணிகளில் ஈடுபாடு காட்ட வேண்டும். இப்படியான மனப்பான்மைக் கூடாக மாத்திரமே சமூகம் என்ற வகையிலும், நாடென்ற வகையிலும் எமக்கு முன்னோக்கிச் செல்ல முடியும். என்றாலும் முஸ்லிம் சமூகத்திற்குள் இன்னும் பிற்போக்குத்தனமான சிந்தனை படைத்தவர்கள் உள்ளார்கள். இப்படிப்பட்டவர்கள் எல்லா சமூகத்திலும் இருப்பது உண்மையே. எனினும் இப்படிப்பட்ட பிற்போக்குத்தனமான சிந்தனை களை இளைஞர்களுக்கு மாற்றிவிட முடியும்.

இந்நாட்டு முஸ்லிம்களுக்கு சிறப்பானதொரு வரலாறுள்ளது. எமது சமூகத்தின் முன்னோடி களான டொக்டர் கலீல், டீ.பி. ஜாயா, பதியுதீன் மஹ்மூத், பாக்கிர் மாக்கார் போன்றோர் நாட்டை முதன்மைப்படுத்தி பல விடயங்களை செய்துள்ளார்கள். அரசியல் கட்சி பேதம் பாராமல் பணி யாற்றியுள்ளார்கள். அத்தகைய வரலாறு மாத்திரம் எமக்கு போதாது. எமது சமூக முன்னோடிகள் மேற்கொண்ட தீர்மானங்களை முன்மாதிரியாகக் கொண்டு பணியாற்றும் சமுதாய மொன்றை,' அறிவுக்கு முதலிடம் வழங்கிச் செயற்படும் சமுதாயமொன்றை உருவாக்கிட வேண்டும்.

## சம்பிக்கவின்... (03 ஆம் பக்கத் தொடர்)

''மலேசியா, இந்தோனேஷியாவில் வாழ்ந்த பௌத்தர்கள் இஸ்லாத்தை தழுவப் பண ஆசையும் காம வெறியுமே காரணம்.''

''மலேசியா மிக வேகமாக முஸ்லிம் அடிப்படைவாதத்துக்கு உள்ளாகி வருகிறது. இந்தோனேசியாவிலிருந்த கோத்திரங்களது தலைவர்களுக்கு அரேபிய வியாபாரிகள் பணம் (சந்தோஷம்) கொடுத்துத்தான் இஸ்லாத்தைப் பரப்பியிருக்கிறார்கள். தற்காலத்தில் அங்கு அதிதீவிரவாதிகளது கட்சியானது ஷரீஆ சட்டத்தை நடைமுறைப்படுத்தும்படி ஆர்ப்பாட்டம் செய்து தேர்தல்களில் கூட முன்னணி வகிக்கிறது. உலகிலேயே அதிக எண்ணிக்கையிலான அங்கத்தவர்களைக் கொண்ட முஸ்லிம் அடிப்படைவாதக் கட்சி இந்தோனேசியாவிலேயே உள்ளது.'' (பக்:120)

''மலாயா, சுமாத்ரா, ஜாவா ஆகிய தீவுகளும் அவற்றைச் சூழவுள்ள பகுதிகளும் ஏற்கனவே பௌத்த இராஜ்யங்களாக இருந்தன. அப்பகுதிகளுக்கு அறபு வர்த்தகர்கள் வந்தார்கள். அப்பிரதேசங்களிலிருந்த கோத்திரத் தலைவர்கள், பிராந்திய ஆட்சியாளர்கள், அரசர்கள், இளவரசர்கள் ஆகியோருடன் வியாபாரத் தொடர்புகளை வைத்து வியாபாரப் பண்டங்களைக் கொடுத்து அவர்களை வசீகரித்தார்கள். சிலருக்கு அரபிகளது வியாபார மற்றும் காம கலாசாரத்துள் இணைவதற்கு பாரம்பரிய பௌத்த மதம் தடையாக இருந்தது. உதாரணமாக மலாயாவின் அரசன் (1400 ஆம் வருடம்) பல மனைவியரை வைத்துக் கொண்டு காம சுகம் பெற பௌத்த மதம் தடையாக இருந்ததால் அவன் இஸ்லாத்திற்குச் சென்றான். இஸ்லாம் அப்பகுதிகளில் அப்படித்தான் பரவியது.'' (பக்:55)

''முஸ்லிம்கள் தமக்கிடையிலுள்ள பிரிவுகளை மறந்து ஐக்கியப்பட்டு ஒரே சர்வதேச சமூகமாக மாற வேண்டும் என ஆப்கானி விரும்பினார். அவருக்கு 100 வருடங்களுக்குப் பிறகு அவரது கருத்தை உஸாமா பின் லாதின் நடைமுறைப்படுத்துகிறார். ஆப்கானியைப் போலவே முஹம்மத் அப்துஹூவும் முக்கியமானவராக இருக்கிறார். ஸெய்யித் குத்ப், முஹம்மத் குத்ப் போன்றவர்களும் எகிப்திலே மேற்குலகுக்கெதிரான அடிப்படைவாதத்தை போதித்திருக்கிறார்கள்.'' (பக்:65)

### புலிகளும் முஸ்லிம் பயங்கரவாதிகளும்

''தமிழ் பிரிவினைவாதத்தை தோற்கடிக்க முஸ்லிம் அடிப்படைவாதிகள் சிங்களவர்களுடன் ஒத்துழைக்கவில்லை. இது அவர்களது தந்திரமாகும். சிதைந்து போன நாட்டில் கிழக்கு மாகாணத்தில் நஸரிஸ்தானையும் சபிஸ்தானையும் (கிழக்கில் தனியான முஸ்லிம் ஆட்சியை) உருவாக்குவதே இவர்களது நோக்கமாகும்.'' (முகவுரையில்)

''அல்கயிதாவுக்கும் புலிகளுக்கும் நெருங்கிய தொடர்பிருக்கிறது. புலிகளுக்கு பிலிபைன்ஸிலுள்ள மோரோ முஸ்லிம் விடுதலை இராணுவத்துடன் தொடர்பிருக்கிறது. புலிகள் ஆப்கானிஸ்தானுக்குச் சென்று அல்காயிதாவிடம் பயிற்சி பெற்றிருக்கிறார்கள். பிலிப்பைன்ஸின் முஸ்லிம் கெரில்லாக்களுக்கும் தமிழ் நாட்டிலுள்ள அல் உம்மா எனப்படும் குழுவினருக்கும் புலிகள் ஆயுதப் பயிற்சியளித்திருக்கிறார்கள். புலிகள் அல்காயிதாவின் ஆயுதங்களை கடல் மார்க்கமாக இடத்துக்கிடம் நகர்த்துவதற்கு உதவி செய்திருக்கிறார்கள். கட்டுநாயக்க விமானப் படைத் தளத்தை தாக்க வந்த புலிகள் அல்காயிதாவிடம் பயிற்சி எடுத்தவர்கள் தான்.'' (பக்:248, 249)

''அஷ்ரப், சேகு இஸ்ஸதீன், ஒஸ்மான் ஆகியோர் உருவாக்கிய முஸ்லிம் அடிப்படைவாதத்துக் கெதிராக நான் போர் தொடுக்க முனைந்தமைக்கு அவர்கள் தீகவாபியை திட்டமிட்டு அழித்தது தான் காரணமாகும்.'' (முகவுரையில்)

### இஸ்லாமிய அடிப்படைவாதத்தின் தீச்சுவாலையாக மாறியிருக்கும் தென்கிழக்குப் பல்கழைக்கழகம்

''2003 ம் ஆண்டு முஸ்லிம்கள் 'அல்லாஹு அக்பர்' என கோஷமிட்டு ஒலுவில் பிரகடனத்தை செய்தார்கள். இஸ்லாமிய அடிப்படைவாதத்தின் தீச்சுவாலையாக மாறியிருக்கும் தென்கிழக்குப் பல்கழைக்கழகம் தான் அதற்குத் தலைமை வகித்தது. அதன் மூலம் முஸ்லிம்கள் இந்நாட்டின் தனியான சாதியினர் என்றும் அவர்களுக்கு வரலாற்று ரீதியான பூர்வீகமிருப்பதாகவும் அங்கு அவர்களுக்கு சுயாதிபத்தியமிக்க அதிகாரம் வேண்டுமென்றும் பிரகடனம் செய்யப்பட்டது. இது எத்தனை உயிர்களது அழிவில் முடியுமோ தெரியாது.'' (பக்:252)

''1976 இல் வட்டுக்கோட்டையில் தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணியைச் சேர்ந்தவர்கள் ஒரு கருத்தரங்கை நடாத்தி சுதந்திரமான தமிழீழத்தைப் பிரகடனம் செய்தார்கள். அதற்கு யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர்கள் கோசமெழுப்பி ஆசீர்வதித்தார்கள். இதன் பின்னர் தான் 46,000 பேரின் மரணத்திற்குக் காரணமான புலிகளது பிரிவினைவாத யுத்தம் வெடித்தது. இது போன்று தான் ஒலுவில் பிரகடனத்தையும் நாம் பார்க்கிறோம்.'' (பக்:253)

### வரலாறில்லாத முஸ்லிம்கள்

''இலங்கை அரசின் பணத்தைப் பயன்படுத்தி முஸ்லிம் கலாசார திணைக்களத்தினால் நடாத்தப்படும் மீலாத் விழாக்களில் வெளியிடப்படும் நூற்களில் இலங்கை முஸ்லிம்களது வரலாறு கி.மு 2ஆம் நூற்றாண்டுக்கு முற்பட்டதென நிறுவப் பார்க்கிறார்கள். இது பொய்யான கருத்தாகும். ஆனால் முஸ்லிம் வியாபாரிகளுக்கும் இலங்கைக்குமான தொடர்பு 15 ஆம் நூற்றாண்டின் நடுப் பகுதியில் தான் ஓரளவு ஏற்பட்டது. அதற்கு முன்னரான முஸ்லிம்களது வரலாறு பற்றிக் கூறப்படும் கதைகள் மத அடிப்படைவாதிகளது வதந்திகளாகும். அதற்கு மார்க்கத்திலுள்ள குருட்டு நம்பிக்கை தான் காரணமாகும். இதற்கு புதைபொருளாராய்ச்சி ஆதாரங்கள் எதுவும் இல்லை. கி.பி 16 ஆம் நூற்றாண்டிலிருந்து தான் இலங்கையில் இஸ்லாம் பரவியிருக்கின்றது. அது 19 ஆம் நூற்றாண்டில் தான் ஸ்திரமாகப் பரவியதென முடிவு செய்ய முடியும்.'' (பக்:256)

### முஸ்லிம்களின் சுயநலமும் துரோகமும்

''இலங்கையில் ஹெரோயின் வியாபாரத்தில் ஈடுபடும் 21 பேரில் 17 பேர் இலங்கை முஸ்லிம்களாவர். (பக்:92) போர்த்துக்கேயரது காலத்தில் முஸ்லிம்களுக்கும் போர்த்துக்கேயருக்கும் இடையே 1517 இல் மோதல் ஏற்பட்டது. இங்கு சமாதானம் செய்யச் சென்ற கோட்டை அரசன் தர்மபராக்கிரமபாகுவிற்கும் போர்த்துக்கேயருக்கும் இடையில் யுத்தம் மூண்டது. முஸ்லிம்கள் கோள் சொன்னதனால் தான் சிங்கள அரசன் தம்மை எதிர்த்தான் என இதற்கு போர்த்துக்கேயர் காரணம் கூறினார்கள்.'' (பக்:263)

''போர்த்துக்கேயரால் கொழும்பிலிருந்து துரத்தப்பட்ட முஸ்லிம்களுக்கு சிங்கள அரசர்கள் தான் புகலிடம் கொடுத்தார்கள். ஆனால் முஸ்லிம்களது நாட்டுப்பற்று ஆரம்பத்திலிருந்தே சந்தேகத்திற்கிடமாகவே இருந்தது. முஸ்லிம்களை போர்த்துக்கேய தாக்குதல்களிலிருந்து பாதுகாத்த செனரத் அரசன் அந்த போர்த்துக்கேயர்களுக்கு எதிராக யுத்தம் புரிவதற்கு முஸ்லிம்களை அழைத்தான். 4000 பேரில் 1500 பேர் மட்டுமே முன்வந்தார்கள். அந்த வகையில் முஸ்லிம்கள் தமது இருப்பைப் பற்றி மட்டுமே யோசித்தார்களே தவிர நன்றிக்கடன் தெரிவிக்கவில்லை.

கண்டி இராச்சியம் பற்றிய இரகசியத் தகவல்களை ஆங்கிலேயருக்குக் கொடுத்தவர்களும் முஸ்லிம்கள்தான். முஸ்லிம்களுடன் இணைந்து ஆங்கிலேயர் கண்டி அரசுக்கெதிராக 1802 இல் யுத்தம் தொடுத்தார்கள். அந்த யுத்தத்தில் மலே, ஜாவா முஸ்லிம் படைவீரர்களும் இருந்தார்கள். ஊவா-வெல்லஸ்ஸ கிளர்ச்சியும் இதுபோன்ற காரணத்தால் ஏற்பட்டதாகும். சிங்களவருக்கெதிரான பல யுத்தங்களுக்கு முஸ்லிம்கள் காரணகர்த்தாக்களாவர். 1915 ஆம் ஆண்டு முஸ்லிம்- சிங்கள மோதல் சிங்கள எழுச்சிக்கு வித்திட்டது. பெரும்பான்மை சிங்களவரை ஆத்திரமூட்டச் செய்வது முஸ்லிம்களுக்கு பெரும் பாதிப்பை உண்டுபண்ணும் எனும் பாடத்தை முஸ்லிம்கள் படித்துக் கொண்டார்கள்.'' (பக்: 263)

### அரசியலில் முஸ்லிம் அடிப்படைவாதம்

''இலங்கையின் நவீனகால இஸ்லாமிய அடிப்படைவாதத்துக்கு எகிப்தின் அடிப்படைவாதியான ஒராபி பாஷா தான் அடித்தளமிட்டார். அதனை தேசிய ரீதியில் சித்திலெப்பை பிரசாரம் செய்தார். 1899 இல் கிண்ணியாவில் மத்ரசதுல் சைதிய்யா என்ற மத அடிப்படைவாதத்தை போதிக்கும் பாடசாலை உருவாக்கப்பட்டதுடன் நவீன கால அடிப்படைவாதம் ஆரம்பமாகிறது.'' (பக்:270)

''SLMC முஸ்லிம் அடிப்படைவாத கட்சியாகும். ஜே.ஆர் முஸ்லிம் அடிப்படைவாதத்தின் எழுச்சியை அறிந்து அதனை கவனமாக அணுகினார். முஸ்லிம் பெண்களுக்கான ஹிஜாப், ஷரீஆ சட்டம் என்பவற்றை அனுமதித்தார். இந்தச் சலுகைகளை வழங்கினால் முஸ்லிம்களை வளைக்கலாம் என நினைத்தார். ஆனால் பதிலாக முஸ்லிம் அடிப்படைவாதம் மேலும் பலமடைந்து வளர்ச்சியடைந்தது.'' (பக்:276)

''பிரேமதாஸ யுகம் தான் (1989-1993) முஸ்லிம் அடிப்படைவாதத்துக்கு வளமான காலமாகியது. அவர் முஸ்லிம் அடிப்படைவாதத்துடன் இணைந்தார். இஸ்ரவேலை வெளியேற்றினார். பயங்கரவாதத்தை அடக்கும் உபாயங்களை ஈரானிலிருந்து பெற்றார். 1989 இல் JVP கிளர்ச்சியால் நாடு பலவீனமுற்ற வேளையில் அவரது உதவிக்கு இஸ்லாமிய வங்கி வந்தது. வரலாற்றில் முதல் தடவையாக இலங்கை அரசின் பணத்தையும் பொருட் சந்தையையும் முஸ்லிம் அடிப்படைவாதம் தனதாக்கிக் கொண்டது. அத்துடன் இந்தியாவை பிரேமதாஸ எதிர்த்ததால் அவருக்கு பாகிஸ்தான் நெருங்கி வந்தது. அதன் விளைவாக பாகிஸ்தானிலுள்ள அடிப்படைவாத கலாசாலைகளுக்கு இலங்கை முஸ்லிம் இளைஞர்கள் அனுப்பப்படுவதற்கு வழிசமைக்கப்பட்டது.'' (பக்:277)

''1994 இல் நடந்த பாராளுமன்றத் தேர்தலில் SLMC 7 ஆசனங்களைப் பெற்றது. அந்த வெற்றியின் பின்னணியில் தேசிய, சர்வதேச சக்திகள் உள்ளன. நன்றாக மோப்பம் பிடிக்கும் சக்திகொண்ட அஷ்ரப் சந்திரிக்காவுடன் இணைந்ததிலிருந்து முஸ்லிம் அடிப்படைவாதத்தின் தேன்நிலவு ஆரம்பமானது. துறைமுகத்தை ஸ்தாபிக்க எந்தவகையிலும் பொருத்தமற்ற இடமான ஒலுவிலில் துறைமுகம் ஸ்தாபிக்க ஏற்பாடாகியது. அடுத்த இலக்கு ஒரு விமான நிலையம்தான். முஸ்லிம்களுக்கு மட்டுமான பல்கலைக்கழகத்தை தென்கிழக்கில் அவர்கள் கட்டினார்கள். இது பதியுத்தீன் ஏற்படுத்திய 70 - 77 வரையுள்ள முஸ்லிம் கல்வி மறுமலர்ச்சியை மேலும் பலப்படுத்தும் முயற்சியாகும்.

துருக்கி போன்ற இஸ்லாமிய நாடுகளில் கூட கல்விக் கூடங்களுக்குள் தடைசெய்யப்பட்ட பர்தாவும் முஸ்லிம்களது தொப்பியும் தென்கிழக்குப் பல்கலைக்கழகத்துக்குள் கட்டாயமாக்கப்பட்டது. பள்ளிகளைப் பராமரிக்க சவூதியிலிருந்து 6.6 பில்லியன் ரூபாய்கள் பெறப்பட்டது. நாடு பூராவும் 700 அடிப்படைவாத மத்ரஸாக்கள் ஸ்தாபிக்கப்பட்டன. போதைவஸ்துக்களை இறக்குமதி செய்வது, கள்ளச் சாமான்களை விற்பது, பாதாள உலகக் கோஷ்டிகளது செயற்பாடுகள், கறுப்புப் பணத்தை கையாள்வது என்பவற்றை முஸ்லிம் அடிப்படைவாதமே செய்கிறது. இந்த அடிப்படைவாதிகள் தான் வெளிநாட்டு வேலைவாய்ப்பு நிறுவனங்கள் பலவற்றை நிர்வகிக்கிறார்கள்.'' (பக்:279)

### நுஆ 2012ல் நாட்டின் ஆட்சியைக் கைப்பற்றும்

''வடக்கிலிருந்து துரத்தப்பட்ட முஸ்லிம்களது சொத்துக்களை புலிகள் கைப்பற்றிக் கொண்டது போல் தப்பி வந்த அந்த முஸ்லிம்கள் புத்தளத்திலும் கற்பிட்டியிலும் உள்ள சிங்களவர்களது சொத்து செல்வங்களை கைப்பற்றிக் கொண்டார்கள்.'' (பக்:278)

''அஷ்ரஃப் தனது பேரம் பேசும் பலத்தைப் பயன்படுத்தி இலங்கையின் மிகப் பெரிய கட்சித் தலைமையகமான தாருஸ்ஸலாமையும் இலங்கையின் உயர்ந்த கட்டடமான இஸ்லாமிய தகவல் நிலையத்தையும் கட்டியிருக்கின்றார். அஷ்ரபுக்கு சவூதி நிதியிலிருந்து கோடிக் கணக்கில் பணம் கிடைத்ததாகவும் இதன் மூல வேலைத் திட்டத்தை சவூதியில் அடிப்படைவாதத்தைப் பயின்ற ஹாபிஸ் நஸீர் அஹ்மத் மேற்கொண்டதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. அஷ்ரப் அகால மரணமாகாவிட்டால் அவர் உருவாக்கிய நுஆ 2012 இல் நாட்டின் ஆட்சியைக் கைப்பற்றும் தனது திட்டத்தை அடைந்திருக்கும்.'' (பக்:280)

''முஹம்மத்தின் மரணத்தின் பின்னர் அடுத்த தலைவர் யார் என்ற பிரச்சினை வந்ததுபோல அஷ்ரபின் மரணத்தின் பின்பும் அதே பிரச்சினை வந்தது. பேரியல், ஹகீம், ஹிஸ்புல்லாஹ் ஆகியோர் அப்பதவிக்கு போட்டி போட்டார்கள். எதிர்காலத்தில் ஹகீம் அதாவுல்லாவுக்கிடையிலன்றி பாராளுமன்ற முறைக்கும் ஜிஹாத் ஆயுதப் போராட்டத்துக்குமிடையில் தான் மோதல் நடக்கும். பிரபாகரனுக்கு வடக்கு, கிழக்கு தாரை வார்க்கப்பட்டதன் அபாயகரமான முடிவுகளில் ஒன்றாக உஸாமா பின் லாதினை கிழக்குக்குக் கொண்டு வந்து சேர்ப்பது அமையும்.''

### அபாயகரமான நிலை

''முஸ்லிம்களது மிக விரைவான சனத்தொகைப் பெருக்கம், புதிய கல்வி மாற்றம், தமிழ் பாஸிச யுத்தத்தாலும் UNP க்கும் PAக்கும் இடையிலான மோதலாலும் ஏற்பட்ட பலவீனம், எண்ணெய்ப் பணத்தின் குமுறல் இவை அனைத்தினதும் முடிவு இலங்கையின் முஸ்லிம் அடிப்படைவாதத்தை வெடிப்பதற்கு தயார்நிலையிலுள்ள எரிமலையைப் போன்றாக்கிவிட்டது. இலங்கை உளவுப் பிரிவின் தகவலின்படி தமக்கிடையில் மோதிக் கொள்ளும் 4 முஸ்லிம் ஆயுதக் குழுக்கள் (முஜாஹிதீன் ஒஸாமா ஜெட் பீம்)) இலங்கையில் இருப்பதாகவும் அவர்களுக்கு சர்வதேச பயங்கரவாதிகளுடன் தொடர்பிருப்பதாகவும் அறிய முடிகிறது. ஒலுவில் பிரகடனம் என்பது அர்த்தமில்லாததொன்றல்ல. அது இந்தோனேசியாவையும் இலங்கையையும் சேர்த்துத் தீயிட்டுக் கொழுத்தி விடும்.'' (பக்:281)

### ஜாமியா நளீமிய்யா அடிப்படைவாதத்தின் மைல்கல்லாகும்

''இலங்கையில் முஸ்லிம் அடிப்படைவாதமானது மக்தப்கள் மத்ரஸாக்கள், இஸ்லாமிய முன்பள்ளிகள், முஸ்லிம் பாடசாலைகள், ஆசிரியர் பயிற்சி கல்லூரிகள், முஸ்லிம் பல்கலைக்கழகங்கள் ஆகிய இடங்களில் போதிக்கப்படுகின்றது. மத்ரஸாக்களைப் பொறுத்தவரையில் மக்கிய்யா, பாரீ, பஹ்ஜதுல் இப்றாஹீமிய்யா, கிண்ணியா சஹதிய்யா, மாதர அல்மின்னதுல் பாஸியா, மைதுல் அரபுப் பாடசாலை (தர்ஹாநகர்), காஸிமிய்யா, கபூரிய்யா என்பன குறிப்பிடத்தக்கவையாகும். இவை வெளிநாட்டுப் பணத்தால் வேகமாக நவீனமயப்பட்டு வருகின்றன. அங்கு ஆப்கானிஸ்தான் பாகிஸ்தான், பங்களாதேஷ் ஆசிரியர்கள் கூட போதிக்கிறார்கள்.

2003-2010 ற்கும் இடையில் 700 மத்ரஸாக்களை நிர்மாணிக்கச் சவூதி வாக்குறுதியளித்துள்ளது. பாடத்திட்டம் முழுக்க முழுக்க இஸ்லாமிய அடிப்படைவாதத்துடன் சம்பந்தப்பட்டிருக்கிறது. நளீம் ஹாஜியாரால் 1973 இல் பேருவலையில் ஸ்தாபிக்கப்பட்ட ஜாமியா நளீமிய்யா அடிப்படைவாத கலாசாலை இங்கு மைல் கல்லாகும்.வெளிநாடுகளைச் சேர்ந்த அடிப்படைவாத ஆசிரியர்களை சேவைக்கு அமர்த்தி நவீன தொழினுட்பத்தை போதிக்கும் இடமாக அது மாறியுள்ளது.'' (பக்: 284,285)

''1996 இல் 111 அடிப்படைவாத முன்பள்ளிகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. இலங்கையின் 5 பல்கலைக்கழகங்களில் இஸ்லாமிய நாகரிகத்துக்கான தனியான துறைகள் (Department)கள் உள்ளன. அஷ்ரப் 1995 இல் தனியான முஸ்லிம் பல்கலைக்கழகத்தை ஆரம்பித்ததுடன் இந்நிலை இன்னும் வேகமடைந்துள்ளது. நாட்டின் ஏனை பகுதிகளில் ஏற்படுத்தப்பட்ட, சபரகமுவ, ரஜரட, ஊவா, வட மேல் பல்கலைக்கழகங்கள் இறுதி மூச்சுவாங்கும்போது இந்தப் பல்கலைக்கழகத்திற்கு மடைதிறந்த வெள்ளமாக வெளிநாட்டு உதவிகள் வந்து சேர்வதால் அது சீக்கிரமாக நவீன பல்கலைக்கழகமாக மாறியுள்ளது.

இந்திய சுதந்திரப் போருக்கு அலிகார் பல்கலைக் கழகம் செய்த பங்களிப்பை விட கிழக்கின் சுய ராஜ்ய உருவாக்கத்திற்கு அதிகமான பங்களிப்பை தென்கிழக்குப் பல்கலைக்கழகம் செய்யும் என்பதை 2003-01-29 அன்று தென்கிழக்குப் பல்கலைக்கழக பூமியில் ஒலுவில் பிரகடனம் வெளியிடப்பட்ட நாளில் பேச்சாளர்கள் தெரிவித்திருப்பதாக அறிய முடிகிறது. அந்தவகையில் அது இன்று முஸ்லிம் அடிப்படைவாதத்தின் தொட்டில் என்பது தெளிவாகிறது.'' (பக்: 310)

### 2090 ஆம் ஆண்டு முஸ்லிம்கள் இந்நாட்டின் பெரும்பான்மையினராக மாறுவார்கள்

(இக் கருத்து சம்பிக்கவின் நூலின் முதல் பதிப்பில் இருந்தது, பின்னர் அதை இரண்டாம் பதிப்பில் 2102 - 2143 என்று திருத்தி விட்டுள்ளார்)

''முஸ்லிம்களது சனத்தொகை அண்மைக்காலத்தில் அதிவேகமாகப் பரவி வருகின்றது. மத்திய கிழக்கு நாடுகளுக்கு அவர்கள் செல்வதாலும் அதிகமாகத் திருமணங்கள் நடைபெறுவதாலும் இந்நிலை உருவாகியுள்ளது. சிங்களவர்களது வளர்ச்சி 1% ஆகும். அதேவேளை முஸ்லிம்களது வளர்ச்சி 2.8% ஆக இருக்கின்றது. 2090 ம் ஆண்டு முஸ்லிம்கள் இந்நாட்டின் பெரும்பான்மையினராக மாறுவார்கள். சிங்கள சமூகத்தில் இளைஞர்களது விகிசாரம் 16% ஆகும். அதேவேளை முஸ்லிம் சமூகத்தின் இளைஞர்களது விகிதாசாரம் 29% ஆகும். எனவே பொதுவாக புரட்சிகளுக்கு இளைஞர்களே காரணமாக அமைகின்றனர் என்ற வகையில் முஸ்லிம் சமூகத்திலும் எதிர்காலத்தில் அடிப்படைவாதிகளது புரட்சி பலமடைவதற்கு இது வழிவகுக்கும்.

இலங்கையின் மொத்த சனத்தொகையில் பெண்களது தொகை ஆண்களது தொகையை விடவும் 1,77,961 மேலதிகமாக இருக்கிறது. இவர்களுள் 1,35,251 பேர் சிங்களப் பெண்களாவர். ஆனால் இந்தப் பெண்களை எதிர்காலத்தில் திருமணம் செய்வது யார்?. இவர்கள் ஒன்றில் முஸ்லிம் அல்லது வெளிநாட்டு ஆண்களையே முடிக்க வேண்டும். கடந்த காலத்தில் பலதார மணத்தின் மூலமே இஸ்லாம் இலங்கையில் பரவியது.'' (பக்:317)

''பௌத்தர்களிடம் சிங்களத்தன்மை பற்றிய உணர்வில்லாமலுமிருப்பதனால் தான் அவர்கள் திட்டமிட்டுச் செயற்பாடாமல் இருக்கிறார்கள். இதனால் தான் சிறுபான்மை தீவிரவாதம் வளர்கிறது. சிங்களத்தன்மையைக் கொலை செய்கிறவர்கள் தான் இந்த சிறுபான்மைத் தீவிரவாதத்தின் வளர்ச்சிக்கு வழி சமைப்பவர்கள் என்பதை மறக்கலாகாது.

அடுத்த தசாப்தங்களில் சிங்க ளவர்கள் தமது சிங்களத் தன்மையிலிருந்து எவ்வாறு செயல்படப் போகிறார்கள் என்பதைப் பொறுத்தே இலங் கையின் தலைவிதி தீர்மானிக்கப்படும். மகாத்மா காந்தி 'இலங்கையனின் மரணம் எம்மால் தாங்க முடியுமான கவலை. மாறாக இலங்கையின் மரணம் எம்மால் தாங்க முடியாத கவலை.' என்று குறிப்பிட்டார்.'' (பக்: 312)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# “சிறுபான்மை என்ற சொல்லை நான் அவ்வளவு விரும்புவதில்லை”



**பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ்**
தவிசாளர், ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன

நேர்காணல்: ஹெட்டி ரம்ஸி

- **ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன கட்சியின் அடுத்த கட்ட அரசியல் நடவடிக்கைகள் எவ்வாறு இடம்பெற்று வருகின்றன?**

கட்சியின் செயற்பாடுகள் வெற்றிகரமான முறையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. பதினாறு மாதங்களுக்கு முன்பாகவே இக்கட்சி தாபிக்கப்பட்டது. கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் 70 வீதத்திற்கும் அதிகமான தொகுதிகளை வெல்ல முடிந்தது. தற்பொழுது நாம் கட்சிக்கென்று விவசாய சங்கம், ஆசிரியர் சங்கம், கலைஞர்கள் சங்கம் மற்றும் மாணவர் இயக்கங்களை தாபித்து வருகின்றோம். கட்சியின் சம்மேளனத்தை எதிர்வரும் நவம்பர் மாதம் நடாத்தத் தீர்மானித்துள்ளோம்.

எமது கட்சிக்கான யாப்பினை தயாரிக்கும் பணிகள் இறுதிக் கட்டத்தில் உள்ளன. இச்சகல நடவடிக்கைகளுக்கும் கட்சியின் கீழ்மட்ட உறுப்பினர்களிடம் கருத்து வினவப்பட்டுள்ளன. இதுவரையில் எமக்குக் கிடைத்திருக்கும் பதில்கள் நல்ல நிலையில் உள்ளன. கட்சியின் வேலைத்திட்டங்களோடு கைகோர்ப்பதற்கு நாலாபுறத்திலிருந்தும் அழைப்புக்கள் வருகின்றன. முஸ்லிம் மக்களும் எம்முடன் இணைந்து பணியாற்றி வருகின்றார்கள். கட்சியுடன் இணைந்து தனியொரு கூட்டமைப்பாக பணியாற்றும் எதிர்பார்ப்புகள் உள்ளதாக முஸ்லிம் தலைவர்கள் எம்மிடம் தெரிவித்திருக்கிறார்கள்.

இதன்படி முஸ்லிம் சமூக பிரதிநிதிகளை அண்மையில் நாம் கொழும்பில் சந்தித்தோம். கடந்த தினம் அநுராதபுரத்தில் எஸ்.எம். சந்திரசேன எம்.பியின் வீட்டிலும் ஒரு கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டது. இதில் சுமார் 700 முஸ்லிம் பிரதிநிதிகள் பங்குபற்றியிருந்தார்கள்.

- **முஸ்லிம்களுக்கு தனிக்கட்சி அவசியமில்லை என நீங்கள் அண்மையில் தெரிவித்திருந்தீர்கள். முஸ்லிம்களுக்கென தனியான கட்சியின்றி வெற்றிகரமான பயணத்தை மேற்கொள்ள முடியும் என நீங்கள் கருதுகின்றீர்களா?**

வரலாறு இதற்கு தெளிவாகவே சான்று பகர்கிறது. முஸ்லிம் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் உறுப்பினர்களுக்கு ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி போன்ற பிரதான கட்சிகளில் உயர் பதவிகளுக்குச் செல்ல முடிந்தது. முஸ்லிம் மீடியா போரத்தின் மாநாட்டிலேயே நான் மேற்படி கருத்தைத் தெரிவித்திருந்தேன். அதில் பிரதான விருந்தினராக அமைச்சர் கபீர் ஹாசிம் பங்குபற்றியிருந்தார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளரான கபீர் ஹாசிம் மாவனெல்லை தேர்தல் தொகுதியை பிரதிநிதித்துவப்படுத்துகின்றார். முஸ்லிம்களது வாக்குகளால் மாத்திரம் அவர் பாராளுமன்றம் செல்வதில்லை. பெரும்பாலான சிங்கள மக்களும் அவருக்கு வாக்களிக்கிறார்கள். அக்குரணை ஹாரிஸ்பத்துவ தேர்தல் தொகுதியில் ஐ.தே.க.வை பிரதிநிதித்துவப்படுத்தி ஏ.சி.எஸ் ஹமீத் 35 வருடங்களாக பாராளுமன்றம் சென்றார். அவருக்கும் முஸ்லிம் வாக்குகள் மாத்திரம் கிடைக்கவில்லை. சிங்கள மக்களின் வாக்குகளும் கிடைத்தது. இதுபோன்று பேருவளையில் பாக்கிர் மாக்கார், அவரது புதல்வர் இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் போன்றவர்களும் இப்படித்தான் மக்கள் பிரதிநிதிகளாகத் தெரிவுசெய்யப்பட்டார்கள்.

இதுபோன்று அன்றைய கூட்டத்திற்கு வருகை தந்திருந்த அமைச்சர் பௌசியையும் உதாரணம் காட்ட முடியும். எஸ்.டபிள்யூ.ஆர்.டி பண்டாரநாயக்கவின் காலத்தில் சி.எஸ் மரிக்கார் கடுகண்ணாவ தொகுதியை பிரதிநிதித்துவப்படுத்தினார். பதியுதீன் மஹ்மூத் போன்றவர்களும் இதற்கு விதிவிலக்கல்ல. இதனால், முஸ்லிம் பிரதிநிதிகளுக்கு பிரதான கட்சிகளில் உயர் இடங்களுக்குச் செல்வதற்கான வாய்ப்புகள் உள்ளன.

வரலாற்றில் பெரும்பாலான முஸ்லிம் தலைவர்கள் சாதித்துக் காட்டியிருக்கிறார்கள். முஸ்லிம் கட்சி, தமிழ் கட்சி என தனித்துவ அடையாளங்களுடன் கட்சிகள் அமைப்பதில் பிரயோசனமில்லை. கடந்த 20 -25 வருட காலப்பகுதியிலேயே இந்நிலை ஏற்பட்டிருக்கிறது.

- **முஸ்லிம்கள் பெரும்பான்மைக் கட்சிகளில் இணைந்து சலுகைகளைப் பெற்றுக் கொண்டது உண்மை. ஆனால் முஸ்லிம்கள் தங்களது உரிமைகளை வென்றெடுக்கும் நோக்கிலேயே தனிக்கட்சி அரசியலை நோக்கிப் பயணித்தார்கள். தனிக்கட்சி அரசியலால் முஸ்லிம்கள் பல உரிமைகளை வென்றுள்ளார்கள். இந்நிலையில் நீங்கள் உங்கள் கருத்தை எந்தளவு தூரம் நியாயப்படுத்துகிறீர்கள்?**

> “ நல்லிணக்கத்துக்கான செயற்பாடுகளை முன்னெடுக்கும் வேளையில் பெரும்பான்மை சிங்கள மக்களினதும் ஆதரவை பெற்றுக்கொள்ள வேண்டும். ஆனால் தற்போதைய அரசாங்கத்தின் நல்லிணக்க நிகழ்ச்சித் திட்டத்தில் சிங்கள மக்களின் அபிலாஷைகள் தொடர்பில் போதிய அளவு கவனம் செலுத்தப்படாமையானது மிகப்பெரும் குறைபாடாகக் காணப்படுகின்றது. ”

நாம் இப்படி நினைக்கக் கூடாது. சிறுபான்மை என்ற சொல்லை நான் அவ்வளவு விரும்புவதில்லை. தமிழ், முஸ்லிம் மக்களுக்கான நீதி நிலைநாட்டப்பட வேண்டும். சகலரும் இந்நாட்டுப் பிரஜைகள். தமிழ் பேசும் மக்களுக்கு கௌரவத்துடன் வாழ்வதற்குரிய சூழலை உருவாக்கிக் கொடுப்பது எம் அனைவரினதும் கடமையாகும்.

இம்மக்களுக்கான பொருளாதார, சமய, பௌதீகப் பாதுகாப்பு போன்ற விடயங்களை ஏற்படுத்திக்கொடுப்பது அரசாங்கங்களின் பொறுப்பாகும். இவ்வகையில் நல்லிணக்கத்துக்கான செயற்பாடுகளை முன்னெடுக்கும் வேளையில் பெரும்பான்மை சிங்கள மக்களினதும் ஆதரவை பெற்றுக்கொள்ள வேண்டும். ஆனால் தற்போதைய அரசாங்கத்தின் நல்லிணக்க நிகழ்ச்சித் திட்டத்தில் சிங்கள மக்களின் அபிலாஷைகள் தொடர்பில் போதிய அளவு கவனம் செலுத்தப்படாமையானது மிகப்பெரும் குறைபாடாகக் காணப்படுகின்றது.

நாம் வித்தியாசமான முறையில் சிந்திக்க வேண்டும். ஒவ்வொரு இனமாகப் பிரிந்து நின்று சிந்திக்காமல் நாம் இலங்கையர் என்னும் அடையாளத்துடன் பரந்த அடிப்படையில் சிநதிப்பதே சிறந்தது. இதை மையப்படுத்தியே நான் அந்தக் கருத்தை வெளியிட்டிருந்தேன். இது உடனடியாக மேற்கொள்ள முடியுமான விடயம் என நான் கருதவில்லை. குறிப்பாக நான் இதனை இளம் தலைமுறையினருக்கு சிறந்த விடயமாகக் காண்கிறேன்.

- **பொதுஜன பெரமுன கட்சியுடன் இணைந்த வகையில் முஸ்லிம் முற்போக்கு முன்னணி ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இக்கட்சியை பரந்த அடிப்படையில் முன்னெடுப்பதற்கான திட்டங்கள் ஏதும் உள்ளதா?**

பொதுஜன பெரமுனவை முதன்மையாகக் கொண்ட எதிர்கால அரசாங்கத்திடம் மிக முக்கியமாக எதிர்பார்க்கும் விடயங்கள் என்ன என்பது குறித்து முஸ்லிம் சமூக பிரதிநிதிகளிடம் கலந்துரையாடி வருகின்றோம். இவ்வெதிர்பார்ப்புகளை நிறைவேற்றுவதில் உள்ள நடைமுறைச் செயற்பாடுகள் என்ன என்பது தொடர்பாகவும் அவர்களிடம் கருத்துக்கள் வினவப்பட்டு அதன் பிரகாரம் எமது கொள்கைத் திட்டங்களைத் தயாரிக்கும் பணிகளை மேற்கொண்டு வருகின்றோம்.

- **எதிர்வரும் காலப்பகுதியில் பொதுஜன பெரமுன கட்சி ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சியுடன் இணையும் எதிர்பார்ப்பில் உள்ளதா?**

இல்லை. எமது ஆதரவாளர்களின் அபிலாஷை இதுவல்ல. ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி இன்று ஐக்கிய தேசியக் கட்சியின் வாலாக மாறியுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியின் கொள்கைத் திட்டங் கள் இன்று டார்லி வீதியிலுள்ள சுதந்திரக் கட்சி தலைமையகத்திலிருந்து செயற்படுத்தப்படுகின்றன. மறைந்த முன்னாள் தலைவர் எஸ்.டபிள்யூ. ஆர்.டி பண்டாரநாயக்கவின் சிந்தனைகள், சுதந்திரக் கட்சியின் பாரம்பரிய சிந்தனைகளை இன்று அக்கட்சி அமுல்படுத்துவதில்லை.

கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி குறித்து மக்கள் எவ்வாறான நிலைப்பாட்டில் இருந்தார்கள் என்பது நிரூபணமானது. 13 வீதமான வாக்குகளை யேனும் அக்கட்சியால் பெற முடியவில்லை. இலங்கை வரலாற்றில் மிகவும் துரதிஷ்டமான நிலையே இது. நாட்டின் ஜனாதிபதி ஒருவரின் தலைமையில் உள்ள கட்சி 3 வருடங்களாக நாட்டை ஆட்சி செய்ததன் பிறகு 13 வீதமான வாக்குகளை பெற்றுக்கொண்ட முதல் சந்தர்ப் பமே இது. கட்சி தொடர்பில் மக்கள் நம்பிக்கை எந்தளவுக்கு சிதைந்துபோயுள்ளது என்பது இதன் மூலம் விளங்குகின்றது. இதனால் அபலையான அக்கட்சியுடன் இணைந்து பணியாற்றும் தேவை எமக்கில்லை. எமது கொள்கைகளே உண்மையான சுதந்திரக் கட்சியின் கொள்கைகளாகும். இதனை ஏற்றுக்கொள்ளும் சகலருக்குமான வாயில்கள் எப்போதும் திறந்திருக்கும்.

- **கடந்த மஹிந்த ராஜபக்ஷ அரசின் மீது அதிருப்தி கொண்டமையினாலேயே பெரும்பான்மை மக்கள் மாற்றீடாக இந்த அரசாங்கத்தை தெரிவுசெய்தார்கள். எதிர்காலத்தில் உங்களது கட்சி தலைமையிலான அரசாங்கம் அமையும் பட்சத்தில் அதன் கீழ் சிறுபான்மை முஸ்லிம்களுக்கான பாதுகாப்பு உத்தரவாதம் எவ்வாறு காணப்படும்?**

எமது கைகளாலும் ஒரு சில தவறுகள் ஏற்பட்டதை நாம் ஏற்றுக்கொள்கிறோம். எம்மால் தவறுகள் ஏற்படாமல் இருந்திருப்பின் 2015 ஜனவரி 08 இல் இப்படியொரு பெறுபேறு கிடைத்திருக்க வாய்ப்பில்லை அல்லவா. எமது தவறுகளை நாம் ஏற்றுக்கொள்ளத்தான் வேண்டும்.

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ, முன்னாள் அமைச்சர் பசில் ராஜபக்ஷ, முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ ஆகியோர் எதிர்வரும் வருட இறுதியில் உறுதியாகவே அரசாங்கமொன்றை அமைக்க முடியும் என்ற கருத்தைத் தெரிவித்துள்ளார்கள். இவ்வாறு உருவாக்கப்படும் அரசாங்கத்தின் கீழ் முஸ்லிம்களுக்கு அச்சமின்றி வாழலாம் என்ற கருத்தை ஆணித்தரமாக தெரிவித்துக் கொள்கின்றேன்.

(பக்.14)

## எழுவாய், பயமில்லை



அபூ ஷாமில்

## ஒழுங்கு தெரியாமல் தள்ளாடும் போதை

முஸ்லிம்களைக் குறிவைத்திருக்கும் போதைப் பொருள் பாவனைக்கு எதிரான போராட்டங்கள் பல்வேறு இடங்களிலும் நடைபெற்று வருகின்றன. சம்மாந்துறையின் ஏழு ஜும்ஆப் பள்ளிவாசல்களும் அரச நிறுவனங்களுடன் இணைந்து “புகைத்தல், போதைப் பொருள் பாவனையற்ற சம்மாந்துறை” எனும் தொனிப் பொருளில் பேரணியொன்றை வெற்றிகரமாக நடத்தியுள்ளது. இந்தப் பேரணியில் ஏந்தப்பட்டிருந்த சுலோகங்களில் சம்மாந்துறையில் புகைத்தலினால் மாதமொன்றுக்கு இழக்கப்படும் தொகை ஒன்றறைக் கோடி ரூபா என்று எழுதப்பட்டிருந்த வாசகம் இந்தப் போதைப் பொருள் பாவனைக்கெதிரான போராட்டத்தை நியாயப்படுத்தப் போதுமானது.

தற்போதெல்லாம் முஸ்லிம் கிராமங்களில் இதுபோன்ற போதைப் பொருள் எதிர்ப்பு நிகழ்வுகள் நடந்து வருகின்றன. சில பள்ளிவாசல்களை மையப்படுத்தியும், பள்ளிவாசல் முன்வராத பல இடங்களில் சிவில் சமூகத்தின் ஏற்பாட்டிலும் பல்வேறு நிகழ்வுகள் நடத்தப்படுகின்றன. இவை அத்தனையையும் தாண்டி போதைப்பொருள் பாவனை திட்டமிடப்பட்ட அடிப்படையில் பரப்பப்படுவது போல எந்தத் தடையுமின்றி அதிகரித்த வண்ணமே இருக்கிறது.

போதை வஸ்துக்களின் பாவனையை இல்லாதொழிப்பதற்கான வெற்றிகரமான முறையை உலகில் இஸ்லாம் மட்டும் தான் நடைமுறைப்படுத்திக் காட்டியது. முடாக் குடியர்களாக இருந்த ஒரு சமூகத்தை, மது ஆறு ஓடும் அளவுக்கு மதுபானத்தைத் தூக்கி எறியும் நிலைக்கு இஸ்லாம் மாற்றிக் காட்டியது. அதன் பின்னர்தான் அந்தச் சமுதாயம் உலகின் மகோன்னத நிலைக்கு மாறியது. இந்த வகையில் போதைவஸ்துப் பாவனையை இல்லாதொழிப்பதற்கான சிறந்த திட்டம் இலங்கையில் இஸ்லாத்தைப் பின்பற்றும் முஸ்லிம்களிடம் இருக்கிறது. இதனை இஸ்லாமிய தலைமை பீடங்கள், பள்ளிவாசல்களுக்கூடாக நடைமுறைப்படுத்திக் காட்டி, இந்நாட்டுக்கு நல்லதொரு முன்மாதிரியை வழங்கிய சமுதாயமாகப் பேரெடுக்கவும் முடியும். போதைப்பொருள் பாவனையின் தீங்கிலிருந்து நாட்டைக் காப்பாற்றவும் முடியும்.

போதைப்பொருள் பாவனையை அதனை விற்பனை செய்பவர்களே தூண்டுகிறார்கள். இந்த விற்பனை முகவர்கள் ஒரு பெரிய வலையமைப்புடன் செயற்படுகிறார்கள் என்பது எல்லோருமே அறிந்த விடயம். இது பாதாள உலகையும் அரச அதிகாரிகளையும் பிணைத்ததொரு நச்சுவட்டத்தில் சுழன்று கொண்டிருக்கிறது. இதிலிருந்து மீள்வதற்கு போதைப் பொருளைப் பாவிப்பவர்களின் எண்ணிக்கையைக் குறைப்பதும் தீர்வாக அமைய முடியும்.

அன்றைய சமூகத்தில் இருந்து மதுப் பாவனையை இல்லாதொழிப்பதற்கு இஸ்லாம் கையாண்ட ஆரம்ப நடவடிக்கையாக போதைப்பொருள் பாவனையின் தீங்குகளை மக்கள் மனதில் பதிய வைப்பதில் கவனம் செலுத்தியது. பின்னர் மக்களின் நாளாந்தக் கடமையான தொழுகையின் போது போதையுடன் ஈடுபடுவதைத் தடைசெய்தது. தண்டனை வழங்கும் நிலையை படிப்படியாகத்தான் இஸ்லாம் நடைமுறைப்படுத்தியது.

இன்றைய சமகாலத்தில் போதைப்பொருள் பாவனையின் தீங்குகள் சம்பந்தமாக விளங்கப்படுத்தும் ஆரம்ப கட்ட நகர்வில் எமது சமூகப் பொறிமுறை இயங்கிக் கொண்டிருக்கிறது. மிம்பர்களில் முழங்குவதும், பேரணிகள் நடத்துவதும், கருத்தரங்குகளை ஏற்பாடு செய்வதுமாக நிகழ்வுகள் பெருகி வருகின்றன. இனி அடுத்த கட்டமான போதைப்பொருள் பாவனையைத் தடுப்பதற்கான செயற்பாடுகள் பற்றி சமூகம் சிந்திக்க வேண்டியிருக்கிறது.

இங்கு தான் பள்ளிவாசல் நிர்வாகிகள் விட்ட பிழையை சமூகம் அறுவடை செய்யும் நிலை வருகிறது. முஸ்லிம் சமூகத்திலிருந்து போதைப்பாவனையை இல்லாதொழிப்பதன் செயற்பாட்டுக் கட்டமாக தொழுகையின் போது போதையுடன் வருவதை இஸ்லாம் தடை செய்தது. அன்றைய சமூகத்தினருக்கு தொழுகை என்பது தமது இறைவனுடன் உரையாடும் இனிய சந்தர்ப்பமாக இருந்தது. தொழுகையை விடுவது அவர்களுக்குப் பெரும் சுமையாக இருந்தது. அத்தோடு அன்றிருந்த அதிகாரபீடங்கள் தொழுகையை நிலைநாட்டுவதை தமது அதிகார எல்லைக்குள் இறைவனால் புகுத்தப்பட்ட பொறுப்பாக சிரமேற்கொண்டு அதனை நடைமுறைப்படுத்தினர்.

இன்றைய சூழ்நிலையில் தொழுகைக்கு வரும்போது போதையுடன் வர வேண்டாம் என்ற அடுத்த கட்ட நடவடிக்கையை எப்படி நடைமுறைப்படுத்த முடியும்? தொழுகையை நிலைநாட்டுதல் என்ற அல்லாஹுத்தஆலா பள்ளிவாசல் நிர்வாகிகளுக்கு விதித்த பொறுப்பை பள்ளிவாசல் நிர்வாகங்கள் செய்யாமல் விட்ட தவறினால், பள்ளிவாசல் ஜமாஅத்தினர்களில் பள்ளிவாசல் பக்கமே எட்டிப் பார்க்காதவர்கள் இருக்கிறார்கள். தொழுகையில் கண்குளிர்ச்சி காண்பவர்களாக பள்ளிவாசல்கள் அவர்களை உருவாக்கவுமில்லை. இவர்களைப் பள்ளிவாசலுக்கு வரவழைப்பதற்கு அதான் சொல்லுவதைத் தவிர வேறெந்த செயற்பாடுகளையும் பெரும்பாலான பள்ளிவாசல்கள் செய்வதுமில்லை. பள்ளிவாசல்களை விட்டே வெகு தூரம் தூரமாகியுள்ள இவர்களிடம் போய், போதைப் பொருள் பாவனையைத் தடுப்பதற்கான செயற்பாட்டு நடைமுறைகளை எப்படிப் பிரயோகிப்பது?

போதைப்பொருள் பாவனைக்கெதிராக ஊர்வலமும் ஆர்ப்பாட்டமும் செய்வதற்கு முன்னர், பள்ளிவாசல்கள் தொழுகையை நிலைநாட்டுதல் எனும் தமது பொறுப்பினை நிறைவேற்றுவதற்கு முன்வர வேண்டும். இஸ்லாத்தின் முக்கியமான தூணையே சட்டை செய்யாத மக்களிடம் போய், போதைப் பொருள் பாவனையின் பாவத்தைப் பற்றி பயான் பண்ணுவது எந்தப் புண்ணியத்தையும் வரவழைக்கப் போவதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சவூதியின் இமாம் ஸபர் அல் ஹவாலியை விடுவிக்குமாறு வேண்டுகோள்

கடந்த மாதம் அரசை விமர்சித்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் சவூதி பொலிஸாரால் கைதுசெய்யப்பட்ட இமாம் ஸபர் அல் ஹவாலியை விடுதலை செய் யுமாறு சவூதி சமூக செயற்பாட்டாளர்கள் பாரிய பிரச்சாரமொன்றை ஆரம்பித்துள்ளனர். இமாம் ஸபர் அல் ஹவாலியுடன் அவரது குடும்பத்தைச் சேர்ந்த சிலரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

முகநூல் வாயிலாக ஹவாலியின் மகன் மற்றும் அவரது சகோதரர்கள் ஆரம்பித்த பிரச்சாரம், தற்போது பரந்துபட்ட வகையில் முன்னெடுக்கப்படுகின்றது. கைதுசெய்யப்பட்ட நாள் முதல் ஷெய்க் அல் ஹவாலி குறித்து எந்தத் தகவலும் வெளிவரவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.



இமாம் ஹவாலி மீதான குற்றச்சாட்டு மற்றும் விசாரணைகள் எதுவும் இதுவரை தெளிவாக முன்னெடுக்கப்படவில்லை. சர்வதேச அளவில் இயங்கும் மனித உரிமை செயற்பாட்டாளர்கள் இமாம் ஹவாலியின் விடுதலைக்காக குரல் கொடுக்க வேண்டும் என சமூக ஊடகங்களைப் பயன்படுத்தும் பிரச்சாரகர்கள் வலியுறுத்தி வருகின்றனர்.

சவூதி அரச குடும்பத்தின் கொள்கைகளை விமர்சித்தார் என்ற குற்றச்சாட் டில் ஜூலை மாதம் ஹவாலியும் அவரது பிள்ளைகளும் சவூதி அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டனர். இதேவேளை, கடந்த ஆண்டில் கைதுசெய்யப்பட்ட மற்றொரு இஸ்லாமிய அறிஞரான சல்மானுல் அவ்தா ஒரு வருட சிறை வாழ்வைப் பூர்த்தி செய்யப் போகின்றார். ஆனால், அவர் மீதான குற்றச்சாட்டுக்கள் குறித்து அரசாங்கம் எதுவும் பேசவில்லை. விசாரணைக்கு உட்படுத்தப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

வதே பார்வை



# பாகிஸ்தானின் அடுத்த பிரதமர் இம்ரான் கான்

ஜூலையில் பாகிஸ்தானில் நடைபெற்ற பொதுத் தேர்தலில் இம்ரான் கானின் PTI - Pakistan Tehreek-e-insaaf வெற்றியீட்டியுள்ளது. இதனால் பாகிஸ்தானின் அடுத்த பிரதமராக இம்ரான் கான் தெரிவாகுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

1992 கிரிக்கெட் உலகக் கிண்ணப் போட்டியில் பாகிஸ்தான் அணிக்குத் தலைமை வழங்கிய கிரிக்கெட் வீரர் இம்ரான் கான். கடந்த இரண்டு தசாப்தங்களாக தீவிர அரசியலில் ஈடுபட்டு வந்தார். விசேட நிபுணர்களைக் கொண்ட புற்றுநோய் மருத்துவமனையொன்றை நிறுவியதிலிருந்து இம்ரான் கான் சமூக செல்வாக்கைப் பெறத் தொடங்கினார். 2008 இல் பஞ்சாப் மாநிலத்தில் தனியார் தொழில்நுட்பக் கல்லூரியொன்றை நிறுவியதோடு, பல்வேறு சமூகநலப் பணிகளையும் முன்னெடுத்தார்.

ஊழல் அற்ற நாட்டின் தொழிலாளர்களின் உரிமைக்காகப் போராடுகின்ற வறியவர்களின் சமூக வாழ்வை உயர்த்துகின்ற பாகிஸ்தானை உருவாக்கப் போவதாக இம்ரான் கான் வெற்றி பெற்றதன் பின்னர் ஆதரவாளர்களுக்கு மத்தியில் கூறியுள்ளார்.

65 வயதான இம்ரான் கான் பஞ்சாப் மாநிலத்திலுள்ள லாஹூர் நகரில் பஸ்தூன் இனக் குடும்பமொன்றில் பிறந்தவர். லாஹூரிலுள்ள ஆண்கள் கல்லூரியொன்றில் ஆரம்பக் கல்வியைப் பெற்ற இம்ரான் கான் 1975 இல் ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் பட்டதாரியாக வெளியேறினார். பின்னர் பாகிஸ்தான் கிரிக்கெட் அணிக்குத் தலைமை தாங்கினார்.

சடுதியான மாற்றங்களைக் கண்டு வரும் பாகிஸ்தான் அரசியலில் இம்ரான் கானின் வெற்றி எதிர்பார்க்கப்பட்ட ஒன்றுதான் என்கிறார் வொஷிங்டனிலுள்ள வூற்றோவில்சன் மத்திய நிலையத்தில் அரசியல் ஆய்வாளர் மைக்கல் குஜல்மான்.

ஸயாஉல் ஹக்கைத் தவிர பாகிஸ்தான் அரசாங்கத்தை இதுவரை வழி நடத்திய அனைவரும் போல் அமெரிக்க ஆதரவாளர்கள் என்று கருதப்படுகின்றது. இம்ரான் கானும் இத்தகைய ஒருவராகவே செயல்படுவார் என்று கூறப்படுகின்றது.

# மொரோக்கோவுடனான உறவைப் பலப்படுத்த அல்ஜீரியா விரும்பம்

தனது எல்லைப் புற நாடான மொரோக்கோவுடன் உறவுகளைப் பலப்படுத்துவதற்கு அல்ஜீரியா தயாராக உள்ளது என்று அல்ஜீரிய ஜனாதிபதி அப்துல் அஸீஸ் பூதப்லிகா தெரிவித்தார். மொரோக்கோ மன்னர் 6 ஆம் முஹம்மதின் பதவியேற்ற நாளை முன்னிட்டு கொண்டாடப்படும் விழாவுக்கு வாழ்த்துச் செய்தியை அனுப்பி வைத்த பின்னர் பூதப்லிகா இவ்வாறு தெரிவித்தார்.

இரு நாடுகளுக்கும் இடையில் நிலவும் எல்லைத் தகராறுகளை அடுத்து நில ரீதியான போக்குவரத்து முற்றாகத் துண்டிக்கப்பட்டுள்ளது. எல்லைப் புறங்களில் இரு நாட்டு இராணுவமும் குவிக்கப்பட்டுள்ளது. சஹாரா எல்லைப் பிரச்சினை என்று கருதப்படும் அரசியல் பிரச்சினையே இரு நாடுகளின் பகை உணர்வுக்கும் காரணமாகவுள்ளது.

# யெமன் மீதான போருக்கு மூன்று வருடங்கள்



சவூதி தலைமையிலான அறபு நாடுகளின் கூட்டணி யெமன் மீது தொடங்கிய போர் மூன்றாண்டை நெருங்கி வரும் இச்சந்தர்ப்பத்தில் ஹுதைதா நகரின் மீது சவூதி கடும் தாக்குதல்களை ஆரம்பித்துள்ளது. துறைமுக நகரான ஹுதைதா மீது மேற்கொள்ளப்பட்டு வரும் தொடர்ச்சியான தாக்குதல்களால் இப்பிராந்திய மீனவர்கள் தமது வாழ்வாதாரத்தை இழந்துள்ளனர்.

அறபுக் கூட்டணியின் வான்வழித் தாக்குதல்கள் உயிராபத்தை ஏற்படுத்தியுள்ளது என மீனவர்கள் கடலுக்குச் செல்வதை நிறுத்தியுள்ளனர். மூன்றாண்டு காலப் போரில் 5000 இற்கும் அதிகமான மக்கள் கொல்லப்பட்டுள்ளதோடு இலட்சக்கணக்கானோர் இடம்பெயர்ந்துள்ளனர். மொத்த சனத்தொகையில் 40 வீதமான குழந்தைகள் போஷாக்கின்மையால் பாதிக்கப்பட்டுள்ளதாக யுனிசெப் எச்சரித்துள்ளது.

சமாதானத்திற்கான நோபல் பரிசு பெற்ற தவக்குல் கர்மான் சவூதி தனது நாட்டின் மீது ஆக்கிரமிப்பு யுத்தமொன்றைத் திணித்துள்ளதாகக் குற்றம் சாட்டியுள்ளார்.

# இஸ்ரேலிய சிறைகளில் இன்னும் 291 குழந்தைக் கைதிகள் உள்ளனர்

அஹத் அல் தமீமி எனப்படும் பலஸ்தீன சிறுமியை 8 மாத தடுப்புக் காவலுக்குப் பின்னர் இஸ்ரேலிய அதிகாரிகள் விடுவித்துள்ளனர். எனினும் இன்னும் 291 குழந்தைகள் இஸ்ரேலிய சிறைச்சாலையில் உள்ளனர் என்று பலஸ்தீன் அதிகார சபை நிறைவேற்றுக் குழு உறுப்பினர் ஹனான் ஹஷ்ராவி தெரிவித்துள்ளார்.


தற்போது 5900 பலஸ்தீனக் கைதிகள் இஸ்ரேலிய சிறைச்சாலைகளில் உள்ளனர். அவர்களுள் 291 பேர் சிறுவர்கள் என்று அஷ்ராவி மேலும் தெரிவித்தார். இஸ்ரேல் தொடர்ச்சியாக பலஸ்தீன் அரசியல் கைதிகளின் உரிமைகளை மீறி வரும் சந்தர்ப்பத்தில் சர்வதேச சமூகம் கண்மூடியுள்ளது என்று அவர் தெரிவித்தார்.

விடுவிக்கப்பட்டுள்ள அஹத் அல் தமீமியை இஸ்ரேலியப் படையினர் 2017 டிசம்பரில் கைதுசெய்தனர். துணிகரமான இப்பெண் இஸ்ரேலிய இராணுவ வீரர் ஒருவரை அறையும் காட்சி சமூக ஊடகங்களில் வைரஸ் போல் பரவியதை அடுத்து அஹத் தமீமி கைதுசெய்யப்பட்டார்.



# ஜோர்தானில் வெளிநாட்டு முதலீட்டில் பெரும் வீழ்ச்சி

இவ்வருடத்தில் முதல் அரை இறுதிப் பகுதியில் ஜோர்தானுக்கான வெளிநாட்டு முதலீடு 54 வீதத்தால் வீழ்ச்சி கண்டுள்ளது என ஜோர்தான் மத்திய வங்கி அறிவித்துள்ளது. கடந்த வருடத்தின் இதே காலப் பகுதியில் 615.8 மில்லியன் அமெரிக்க டொலர்களாக இருந்த வெளிநாட்டு முதலீடு இவ்வாண்டில் 300 மில்லியனாகக் குறைந்துள்ளது.




அத்தியவசியப் பொருட்களின் விலையில் ஏற்பட்ட உயர்வும் வருமான வரியில் ஏற்பட்ட அதிகரிப்புமே இதற்கான காரணம் என அறிவிக்கப்படு கின்றது.

கடந்த மே மாதம் முதல் வரி அதிகரிப்புக்கு எதிராக மக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். அதன் விளைவாக, பிரதமர் ஹானி முல்கி பதவி விலகினார். தொடர்ந்து உமர் ரஸ்ஸாஸ் மன்னர் 2ஆம் அப்துல்லாஹ்வினால் பிரதமராக நியமிக்கப்பட்டுள்ளார். இவர் உலக வங்கியின் முன்னாள் உயர் அதிகாரி என்பது குறிப்பிடத்தக்கது.

# ஈரானின் நாணயப் பெறுமதியில் கடும் வீழ்ச்சி

அமெரிக்காவின் பொருளாதாரத் தடையை அடுத்து ஈரானியப் பொருளாதாரம் வேகமாக சரிந்து வருகின்றது. ஒரு அமெரிக்க டொலருக்கு ஒரு இலட்சம் ரியால் எனும் அளவுக்கு நாணயப் பெறுமதியில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. அமெரிக்காவுக்கும் ஈரானுக்கும் இடையில் 2015 கைச்சாத்திடப்பட்ட அணுசெறிவாக்கல் திட்டம் தொடர்பான ஒப்பந்தத்திலிருந்து இவ்வருட மே மாதம் வொஷிங்டன் தன்னிச்சையாக விலகிக் கொண்டது.

ஈரான் தனது அணு செறிவாக்கல் திட்டத்தை நிறுத்தி வைக்கும் பட்சத்தில் அதன் மீதான சர்வதேச பொருளாதாரத் தடைகள் அனைத்தும் நீக்கப்படும் என்பதே இரு நாடுகளுக்கும் இடையில் நடைபெற்ற ஒப்பந்தமாகும். ஆயினும், டொனால்ட் ட்ரம்பின் வருகையை அடுத்து பிராந்தியத்திற்கு ஈரான் ஒரு அச்சுறுத்தல் என காரணம் காட்டி அமெரிக்கா ஒப்பந்தத்திலிருந்து விலகிக் கொண்டது.

எதிர்வரும் நவம்பர் 04 இலிருந்து ஈரானிலிருந்து பொருட்களை இறக்குமதி செய்யும் நாடுகள் இறக்குமதியை தவிர்ந்து கொள்ள வேண்டும் அல்லது அமெரிக்கா விதிக்கும் பொருளாதாரத் தடையை எதிர்கொள்ள நேரிடும் என ட்ரம்ப் எச்சரித்துள்ளார்.



தொடர்ச்சியான பொருளாதாரத் தடைகளால் ஈரானின் பொருளாதாரம் மென்மேலும் வீழ்ச்சியடைய வாய்ப்புள்ளது என்று அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• றஊப் ஸெய்ன்



# அவர்கள் அவர்களுக்கு நீண்ட வாள்களைக் கொடுத்தனர்

**பெண்கள், முதியோர், குழந்தைகள் என்ற வேறுபாடின்றி மக்கள் ஈவிரக்கமில்லாமல் பெருமளவு கொல்லப்பட்டுள்ளனர். நிராயுதபாணிகளான மக்களை பாகுபாடின்றிக் கொல்வது இன அழிப்பின் முக்கிய அடையாளமாகும். மக்களின் இருப்பிடங்கள் அனைத்தும் கொளுத் தப்பட்டுள்ளன. இவை இனச் சுத்தி கரிப்பின் பிரதான குறிகாட்டிகளாகும்**

மியன்மாரின் ரெக்கைன் (அரக்கான்) மாநிலத்திலிருந்து 2017 ஓகஸ்ட் 25 இல் 7 இலட்சம் ரோஹிங்ய முஸ்லிம்கள் வெளியேற்றப்பட்டு ஒரு வருடம் நிறைவடைகின்றது. இவர்கள் பங்களாதேஷின் துறைமுக நகரான கொக்ஸ் பஸாரில் தஞ்சமடைந்துள்ளனர். உணவு, தங்குமிடம், மருத்துவம் போன்ற அடிப்படைத் தேவைகள் நிறைவேற்றப்படாத நிலையில், கல்விக்கான வாய்ப்பு முற்றாகவே துண்டிக்கப்பட்டுள்ளதோடு, அவர்களின் பாதுகாப்பும் கேள்விக்குறியாகியுள்ளது.

ஏனெனில் இளம் பெண்கள் விபச்சாரத்திற்காக அயல் நாடுகளுக்குக் கடத்தப்படுகின்றனர். பங்களாதேஷ் அரசாங்கம் இவர்களுடனான உள்ளூர் சமூகத்தின் தொடர்புகளை துண்டித்துக் கொள்ளும் வகையிலான சட்டங்களை இயற்றியுள்ளது. இடம்பெயர்வின் ஒரு வருட நிறைவையொட்டி Fortify Rights எனும் சர்வதேச மனித உரிமை நிறுவனம் மேற்கொண்ட ஒரு களஆய்வை 19 ஜூலை 2018 அன்று வெளியிட்டது. 162 பக்கங்களைக் கொண்டுள்ள இவ்வறிக்கை They Gave them Long Swords எனும் பெயரில் வெளிவந்துள்ளது.

சுதந்திர முஸ்லிம் அரக்கான் குடியரசு 1400 களில் பர்மாவுடன் பூதாபாய் மன்னரின் காலத்தில் இணைக்கப்பட்டதிலிருந்து அரங்கேறிய இனச் சுத்திகரிப்பு, 2017 ஓகஸ்டில் அதன் உச்சத்திற்கு வந்தது. 2017 ஆகஸ்ட் இனச்சுத்திகரிப்பு நடவடிக்கையில் அரச இராணுவத்தின் திட்டமிட்ட முன் செயற்பாடுகள் குறித்து மேற்குறிப்பிட்ட சர்வதேச மனித உரிமை நிறுவனம் கடந்த ஆண்டு முழுவதும் ஒரு களஆய்வை மேற்கொண்டிருந்தது. அதில் நேரடியாகப் பாதிக்கப்பட்ட ரோஹிங்யர்கள் பர்மா இராணுவம், ரெக்கைனிலுள்ள 'முக்' இனத்தவர்கள், பங்களாதேஷ் மனித உரிமை செயற்பாட்டாளர்கள், சர்வதேச நிவாரணப் பணியாளர்கள் என பல்வேறு தரப்பினரையும் நேர் கண்டு போதிய ஆதாரங்களைத் திரட்டி இந்த அறிக்கையை வெளியிட்டுள்ளது. அறிக்கையின் சாரம்சம் கீழே தரப்படுகின்றது.

கடந்த ஆகஸ்ட் 25 முதல் அடுத்து வந்த இரு வார இடைவெளியில் மியன்மார் அரசாங்கப் படையினர் அரக்கான் முஸ்லிம்களை வெளியேற்றியமை மிக நுணுக்கமாகத் திட்டமிடப்பட்ட இராணுவ நடவடிக்கையாகும். முற்கூட்டி பல மாதங்களுக்கு முன்பாகவே நன்கு ஒழுங்குபடுத்தப்பட்ட உபாயங்களைக் கையாண்டு மக்கள் பீதியூட்டப்பட்டு, மேற்கு மாநிலமான ரெக்கைனிலிருந்து அகதிகளாக வெளியேற்றப்பட்டனர்.

Tatm Madaw என்றே மியன்மார் இராணுவம் அழைக்கப்படுகின்றது. 440 பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட மியன்மாரில் 10 வீதமான உறுப்பினர்கள் நேரடியாக இராணுவத்திலிருந்து நியமிக்கப்படுகின்றனர். இவர்கள் 2012 ஆம் ஆண்டிலிருந்து ரோஹிங்ய முஸ்லிம்களுக்கு எதிராக நடத்தி வந்த வன்முறைகளும் இனச் சுத்திகரிப்பும் மியன்மார் அரசாங்கத்துடன் தொடர்புபட்டது. இந்நடவடிக்கை மனித இனத்திற்கு எதிரான போர்க் குற்றங்கள் என்பதற்கு இந்த அறிக்கை பல காரணங்களை முன் வைக்கின்றது.

குறிவைக்கப்படும் இனத்தின் தூய்மையை அழிக்கும் வகையில் இராணுவத்தினர் திட்டமிட்ட பாலியல் பலாத்கார நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளனர். பெண்கள், முதியோர், குழந்தைகள் என்ற வேறுபாடின்றி மக்கள் ஈவிரக்கமில்லாமல் பெருமளவு கொல்லப்பட்டுள்ளனர். நிராயுதபாணிகளான மக்களை பாகுபாடின்றிக் கொல்வது இன அழிப்பின் முக்கிய அடையாளமாகும். மூன்றாவதாக, மக்களின் இருப்பிடங்கள் அனைத்தும் கொளுத்தப்பட்டுள்ளன. இவை இனச் சுத்திகரிப்பின் பிரதான குறிகாட்டிகளாகும் என்பதை சர்வதேச மனித உரிமைப் பிரகடனங்கள் ஏற்றுக்கொண்டுள்ளன.

''அவர்கள் அவர்களுக்கு நீண்ட வாள்களைக் கொடுத்தனர்'' எனும் இவ்வறிக்கை இடம்பெற்றது அப்பட்டமான இனச் சுத்திகரிப்பு என்பதற்கு அப்பால் இந்நடவடிக்கை அரச தரப்பினரால், குறிப்பாக பர்மிய இராணுவத்தினரால் எவ்வாறு பல மாதங்களுக்கு முன்பாகவே திட்டமிடப்பட்டது என்பதை விரிவாக ஆராய்கின்றது.

1. நான்கு மாதங்களுக்கு முன்பாகவே ரோஹிங்யர்கள் பர்மிய பௌத்தர்களின் எதிரிகள் என்ற துண்டுப் பிரசுரத்தை இராணுவம் நாடு முழுவதும் விநியோகித்தது. அதன் மூலம் முஸ்லிம்கள் குறித்த சமூக வெறுப்பை உருவாக்கியது. ஏற்கனவே ரெக்கைன் மாநிலத்தில் முஸ்லிம்களை விரோதிகளாகக் கருதி வந்த 'முக்' பௌத்த இனத்தவர்கள் இதன் மூலம் மேலும் வெறியூட்டப்பட்டனர்.

2. ரெக்கைன் மாநிலத்தில் ரோஹிங்யர்கள் சார்பாக மியன்மார் அரச படையை எதிர்த்துப் போராடுகின்ற பயங்கரவாதக் குழுவொன்று செயல்படுவதாக மியன்மார் ஊடகங்கள் தொடர்ச்சியான பிரச்சாரத்தில் ஈடுபட்டன. இராணுவம் இதற்கு நிதியாதரவு அளித்தது. அரக்கானில் அரசாங்கத்தை எதிர்த்துப் போராடும் இப்பயங்கரவாதக் குழுவை அரக்கான் ரோஹிங்யா விடுதலை இராணுவம் (ARSA - Arakkan Rohingya Salvation Army) என மியன்மார் இராணுவம் இதனை அழைத்தது. இதை எதிர்த்துப் போராடுவதே தமது இலக்கு என்றும், அரக்கானில் செயற்படும் மிகப் பெரிய பயங்கரவாத இயக்கம் இதுவெனவும் சர்வதேச சமூகத்தை நம்பவைக்கும் தந்திரங்களில் அரச படையினர் ஈடுபட்டனர்.

3. முக் இனத்தவர்களுக்கு மியன்மார் இராணுவம் ஆயுதங்களை வழங்கி இராணுவப் பயிற்சியளித்தது. அவர்களை பிராந்திய காவல் படை (Regional Police) என அழைத்தது. ரெக்கைனில் சிறுபான்மையாக வாழும் 'முக்' இனத்தவர்கள் மதத்தில் பௌத்தர்கள். ஏற்கனவே பல வன்முறைகளில் முஸ்லிம்களைக் கொன்று குவித்தவர்கள். அரச படையினரால் இவர்களுக்கு வழங்கப்பட்ட துப்பாக்கி தவிர்ந்த ஆயுதங்களில் நீண்ட வாள்கள் முக்கியமானவை. (அதனால் தான் இந்த அறிக்கைக்கு ''அவர்கள் அவர்களுக்கு நீண்ட வாள்களைக் கொடுத்தனர்'' எனப் பெயரிடப்பட்டுள்ளது.) இக்காடையர் குழுவே ரோஹிங்யர்களுக்கு எதிரான வன்முறையில் நேரடியாக ஈடுபட்டனர்.

4. சில மாதங்களுக்கு முன்னதாகவே ரோஹிங்ய முஸ்லிம்களின் வீட்டுப் பாவனைப் பொருட்களாக இருந்த கத்தி, வாள், பொல் என்பவற்றை மியன்மார் இராணுவம் மெது மெதுவாகக் களையத் தொடங்கியது. ரோஹிங்யர்களை 100 வீதம் நிராயுதபாணிகளாக்கும் நடவடிக்கையை இராணுவம் திட்டமிட்ட முறையில் அமுல்படுத்தியது. ''அவர்கள் வந்து எமது கத்திகளையும் வாள்களையும் பிடுங்கிச் சென்றனர் என்கிறார் 50 வயதான ரஹானா. இவர் இரண்டு குழந்தைகளின் தாய் என்பது குறிப்பிடத்தக்கது. அதேபோன்று அரக்கானிலுள்ள கிராமவாசி ஒருவரான 25 வயது மதிக்கத்தக்க ராபிக், தூலாதொலி எனும் கிராமத்தில் குழந்தைகளும் பெண்களும் நீண்ட வாட்களால் வெட்டப்பட்டு கொலை செய்யப்பட்டதை தனது கண்களால் கண்டதாக சாட்சியமளித்துள்ளார். கொலை வெறியாட்டத்தில் 'முக்' இனத்தவர்கள் நீண்ட வாள்களை அதிகம் பயன்படுத்தியுள்ளனர் என்பது பல்வேறு சாட்சியங்கள் மூலம் நிறுவப்பட்டுள்ளது. முதுகுக்குப் பின்னால் இவ்வாள்களை மறைத்த வண்ணம் வந்த இக்காடையர்கள் குழந்தைகளையும் பெண்களையும் இலக்கு வைத்துக் கொன்றனர்.

5. பாரியளவில் வன்முறைகள் பரவியதை அடுத்து ரெக்கைனின் எல்லைப் புறங்கள் அனைத்திலும் மியன்மார் இராணுவம் குவிக்கப்பட்டது. படைத் தளங்கள் என்ற பெயரில் வெளிநாடுகளிலிருந்து வரும் மனிதாபிமான உதவிகளையும் ஊடகவியலாளர்களையும் தடுத்து நிறுத்துவதற்கு இராணுவம் இந்த வழியைக் கையாண்டது. அதன் மூலம் ரோஹிங்யர்கள் மீதான கலவரங்கள் மற்றும் படுகொலைகள் குறித்த உண்மைகள் வெளியுலகிற்கு வராமல் மூடிமறைக்கப்பட்டது.



வெளியேறிச் சென்றதன் பின்னர் அவர்களது இருப்பிடங்கள் வாழ்வாதாரங்கள் கொழுத்தப்பட்டன.

சாம்பல் மேடு போல் காட்சியளிக்கும் அரக்கானில் வகைதொகையற்ற இராணுவப் படைக் கலன்கள் குவிக்கப்பட்டுள்ளன. பங்களாதேஷ் எல்லைப் புறத்தில் இன்று பிரமாண்டமான படைமுகாம்கள் கட்டப்பட்டுள்ளன.

பங்களாதேஷ் அரசாங்கமோ இம்மக்களை திரும்பிச் செல்லுமாறு வலியுறுத்தி வருகின்றது. ஆன்சாங் சூகியின் மியன்மார் அரசாங்கமோ அவர்களை ஏற்றுக் கொள்வதற்கு எந்தவொரு சமிக்ஞையையும் காட்டுவதாகத் தெரியவில்லை. மாறாக, அரக்கானை ஒரு பெரிய இராணுவ படை முகாம் போன்று மாற்றி வருகின்றது.

1990 களில் ஆபிரிக்காவின் ருவாண்டாவில் இடம்பெற்ற மனிதப் படுகொலைகளுக்குப் பின்னர் நவீன உலக வரலாற்றில் இடம்பெற்ற மிகக் குரூரமான இனச் சுத்திகரிப்பு ரோஹிங்யர்கள் மீதான இன அழிப்பு நடவடிக்கையே என அடித்துக் கூறுகிறார் Fortify Rights நிறுவனத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் மெத்தேவ் ஸ்மித்.

6. ரெக்கைனில் முஸ்லிம்கள் வாழும் பிரதேசங்களில் மாத்திரம் இராணுவ ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்பட்டு மக்கள் நடமாட்டம் தடுக்கப்பட்டது. இதனால் அச்சமடைந்த மக்கள் உயிரை கையிலெடுத்துக் கொண்டு தப்பியோடாமல் தடுக்கப்பட்டனர். இதன் மூலம் மக்கள் கூட்டாகக் கொல்லப்படுவதற்கும் உயிரோடு கொளுத்தப்படுவதற்கும் இராணுவம் வகைசெய்தது.

ஆக, 2017 ஆகஸ்டில் இடம்பெற்றது மியன்மார் பௌத்த அரசாங்கத்தின் இறுதிக்கட்ட இனச் சுத்திகரிப்பாகும். அதற்குப் பலியாக்கப்பட்ட ரோஹிங்யா முஸ்லிம்களில் 80 வீதமானவர்கள் அயல்நாடான பங்களாதேஷுக்கு வெளியேற்றப்பட்டனர். அவர்கள்

இதனால்தான் ஐ.நா.வின் பொதுச் செயலாளர் ''பூமிப் பரப்பில் மிகவும் சோதிக்கப்படும் சிறுபான்மைச் சமூகம் ரோஹிங்யர்கள்'' எனக் குறிப்பிட்டிருந்தார். அதேவேளை, ஐ.நா. மனித உரிமைப் பேரவையின் தலைவர் செய்யித் ராஇத் ஹுஸைன், ''ரோஹிங்ய இனச் சுத்திகரிப்பு ஒரு பாடப்புத்தக உதாரணம்'' என்று வர்ணித்தார்.

2016 ஒக்டோபரில் இடம்பெற்ற ரோஹிங்யர்கள் மீதான இனச் சுத்திகரிப்பிலிருந்து நாம் கற்றுக்கொண்ட பாடம் என்னவெனில், சர்வதேச சமூகம் ரோஹிங்யர்களின் பிரச்சினைக்கு செவிசாய்க்கவில்லை என்பதுதான். அவ்வாறு செவிசாய்த்திருந்தால் 2017 ஆகஸ்டில் இப்படிப் பாரியதொரு இனப்படுகொலையை ரோஹிங்யர்கள் சந்தித்திருக்க மாட்டார்கள் என்கிறார் மெத்தோவ் ஸ்மித்.

இந்த அறிக்கை குறித்து தொடர்ந்து கருத்து வெளியிட்ட அவர், ''இப்போதேனும் சர்வதேச சமூகம் அர்த்தமுள்ள நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என நாம் எதிர்பார்க்கின்றோம். சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்திற்கு இந்த அறிக்கையை அனுப்பி வைத்துள்ளோம். ஐ.நா. பாதுகாப்புச் சபை நாடுகள் இவ்வறிக்கையை நடைமுறைப்படுத்த அழுத்தம் கொடுக்க வேண்டும். மியன்மார் மீது ஒரு உலகளாவிய ஆயுதத் தடையை ஐ.நா. விதிக்க வேண்டும். அதே வேளை மியன்மார் இராணுவத்தில் மனித இனத்திற்கு எதிரான போர்க் குற்றங்களை ஈடுபட்ட இராணுவ ஜெனரல்களை சட்டத்தின் முன் கொண்டுவர வேண்டும். இந்த வகையில் ஜெனரல் மிங் ஆங் இப்படுகொலையின் முக்கிய சூத்திரதாரிகளில் ஒருவராவார் எனத் தெரிவிக்கின்றார்.

இதேவேளை, மியன்மார் விவகாரம் குறித்த ஐ.நா.வுக்கான சிறப்பு அறிக்கையாளர் யங்ஹீலி, ''ரோஹிங்யர்கள் மியன்மார் திரும்புவது நிச்சயமற்ற நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளது. ரோஹிங்யர்களின் பாதுகாப்பு மற்றும் ஸ்திரத் தன்மைகளை உருவாக்குவதற்கு மியன்மாரில் நிலவும் பாரபட்சமான சட்டம், கொள்கைகள், செயற்பாட்டு முறைகளை மாற்றியமைப்பதற்கு மின்மார் அரசாங்கம் இதுவரை எவ்வித முன்னேற்றகரமான நடவடிக்கைகளையும் மேற்கொள்ளவில்லை.

ரோஹிங்ய மக்களின் வாழ்வாதாரம் மற்றும் கல்வி என்பவற்றுக்கு தேவை அதிகரித்துள்ளது. இதற்கு சர்வதேச சமூகம் உதவ முன்வர வேண்டும் எனக் கோரிக்கை விடுக்கிறார் யங்ஹீலி. உலகம் இதனை செவியேற்குமா?

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'தடுப்பு மருந்தேற்றலை மறுப்பது சமுதாயத்தை ஆபத்தான நோய்களுக்கு இட்டுச் செல்லும்''

தொற்று நோய் விஞ்ஞானப் பிரிவு,
சுகாதாரம், போஷாக்கு மற்றும் சுதேச வைத்திய அமைச்சு

தொற்று நோய்களுக்கு எதிரான தடுப்பு மருந்தேற்றலானது ஆபத்தான தொற்று நோய்களிலிருந்து தனிநபர்களையும், சமுதாயத்தையும் பாதுகாக்கிறது. இவ்வழி ஒரு ஆரோக்கியமான எதிர்கால சந்ததியை உறுதிசெய்யும் என்பது வலியுறுத்தப்பட வேண்டும். வெவ்வேறு காரணங்களினால் தடுப்பு மருந்தேற்றலை மறுப்பது ஆபத்தான நோய்களிலிருந்து பாதுகாக்கப்படுகின்ற நன்மைகளை பெறுவதிலிருந்து தனி நபர்களையும், சமூதாயத்தையும் இழக்கச் செய்கின்றது.

எனவே தடுப்பு மருந்தேற்றலின் நன்மைகளையும், இடர்பாடுகளையும் பற்றி ஒழுங்காக பொதுமக்களை அறிவூட்டுவது மிகவும் முக்கியமானது.

தடுப்பு மருந்துக்கு தீவிரமான பக்க விளைவுகள் உருவாகுவதற்குரிய ஆபத்து உண்டு. ஆனால் இவை மிக அரிது. அத்துடன் தடுப்பு மருந்தேற்றலின் நன்மைகள் இவ் அரிதான நிகழ்வுடன் ஒப்பிடுகையில் மிக அதிகம்.

### தடுப்பு மருந்தேற்றலுக்கான தடைகள்

வேறுபட்ட அபிப்பிராயங்களால் அல்லது பின்வருவன தொடர்பாக சரியான புரிதல் இன்மையால் தடுப்பு மருந்தேற்றலை மக்கள் நிராகரிக்கின்றனர்.

**1. அறிவு குறைவு**

- தடுப்பு மருந்தேற்றப்பட்ட ஒரு குழந்தை தொற்று நோய் ஏற்படுவதிலிருந்து பாதுகாக்கப்படல் தடுப்பு மருந்தேற்றலின் நன்மையாகும்.
- தடுப்பு மருந்து ஏற்றப்படாமை நோயை ஏற்படுத்தும் ஆபத்தில் முடிவடையும். சமூகத்தில் நோய் ஏற்படும் ஆபத்து குறைவாக இருப்பதாக அல்லது அந்நோய் மற்றவர்களுக்கு பரவுவது இல்லை என அல்லது அவர்களது குழந்தை நோய் தாக்கத்துக்கு உள்ளாகாது என அவர்கள் நினைக்கலாம்.
- ஆபத்தான நோய்கள் தடுப்பு மருந்தேற்றல் மூலம் தடுக்கப்பட்டுள்ளன. இதனால் தடுப்பு மருந்தேற்றல் மூலம் தடுக்கக்கூடிய நோய்கள் ஆபத்தற்றன என மக்கள் நினைக்கலாம்.

**2. தடுப்பு மருந்தேற்றலின் பின்னரான பாதகமான நிகழ்வு பற்றிய பயம்**

தடுப்பு மருந்தேற்றலின் முடிவு அவர்களுடையது என்பதால் தடுப்பு மருந்தேற்றலின் பின்னரான பாதக நிலைக்கு தாங்களே பொறுப்பு என பெற்றோர் நினைக்கலாம். இதனை தவிர்ப்பதற்கு குழந்தைக்கு தடுப்பு மருந்தேற்றத் தேவையில்லை என அவர்கள் நினைக்கலாம். தடுப்பு மருந்தேற்றலின் பின்னர் ஏற்படும் பாதக விளைவுகள் தெளிவுபடுத்தப்படாமையினால் இவ்வச்சம் ஏற்படலாம்.

சில சமயங்களில் தடுப்பு மருந்தேற்றலால் தடுக்கப்படக் கூடிய பாரதூரமான நோய்களை தடுப்பதில் தடுப்பு மருந்துகளின் பாரிய பங்களிப்பு தொடர்பாக குறிப்பிடப்படாமல் பாதகமான விளைவுகள் பற்றிக் கலந்துரையாடுவதாலும் இந்நிலை ஏற்படலாம். ஆகவே தடுப்பு மருந்தேற்றலின் பின்னரான பாதகமான விளைவுகளை விடவும் தடுப்பு மருந்துகளால் தடுக்கப்படும் நோய்களின் அதிக ஆபத்துக்கள் பற்றி பொதுமக்களை அறிவூட்டுவது மிகவும் முக்கியம்.

**3. தடுப்பு மருந்தின் செயற்திறன் தொடர்பான சந்தேகம்**

தடுப்பு மருந்தின் செயற்திறன் தொடர்பான சந்தேகமும் தாய்மார், தங்கள் குழந்தைகளுக்கு தடுப்புமருந்து ஏற்றாமைக்குக் காரணமாக இருக்கலாம்

**4. சூழல் காரணங்கள்**

சூழல் காரணங்கள் சிகிச்சை நிலையங்களை சென்றடைவதை கடினமாக்கும். அத்துடன் சிகிச்சை நிலையங்களில் வசதியின்மை, தாய்மார் குழந்தைகளை தடுப்பு மருந்தேற்றலுக்கு ஒழுங்காக கொண்டு வருதலை பாதிப்பதன் மூலம் வயதுக்கேற்ற தடுப்பு மருந்தேற்றல் குழந்தைக்குக் கிடைக்காது போகலாம்.

**5. சமூகப் பிரச்சினைகள்**

சமூகப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுப்பதன் விளைவாக அவர்களுடைய குழந்தைகளுக்கு வயதுக்கேற்ற தடுப்பு மருந்தேற்றலை கொடுக்க முடியாது இருக்கலாம்.

**6. சமய நம்பிக்கைகள்**

சமய நம்பிக்கைகளுக்காக சிலர் தடுப்பு மருந்தேற்றலுக்கு மறுப்பு தெரிவிக்கலாம். இவ்வாறு சிந்திக்கும் மக்கள் பொதுவாக குறிப்பிட்ட பகுதியில் செறிந்து வாழ்வார்கள். இதன் விளைவாக அப்பகுதியில் அதிகளவு தொற்றுநோய் பரவலாம். இவர்களுக்குச் சரியான ஆலோசனை வழங்கி தடுப்பு மருந்தேற்றலால் தடுக்கப்படும் நோய்களின் ஆபத்துக்கள் பற்றி புரிய வைத்தால் அவர்கள் தங்களது குழந்தைகளுக்கு தடுப்பு மருந்தை பெற்றுக்கொள்வதற்குத் தீர்மானிக்கலாம்.

**7. நிரந்தர வதிவிடம் இன்மை**

வேலை அல்லது வேறு காரணமாக சிலர் நிரந்தர வதிவிடத்தைக் கொண்டிருக்காமையால் அவர்களது குழந்தைகள் வயதுக்கேற்ற தடுப்பு மருந்தேற்றலை தவறவிடுவதற்கு ஏதுவாய் இருக்கும்.

தேசிய சுகாதார கொள்கையின்படி எவரும் நாட்டின் எப்பகுதியிலும் உள்ள சிகிச்சை நிலையத்துக்குச் சென்று தடுப்பு மருந்தேற்றலை மேற்கொள்ளலாம். தடுப்பு மருந்து ஏற்றப்படாத சிறுவர்கள், குழந்தைகளைக் கண்டுபிடிப்பதற்கு சுகாதார வைத்திய அதிகாரப் பிரிவில் விசாரணைகள் மேற்கொள்ளப்படும்.

## 'தவறான வாதங்கள் களையப்பட வேண்டும்'



Dr. அஹமட் நிஹாஜ்
(எலும்பியல் அறுவை சிகிச்சை நிபுணர்)

மலேசிய பத்வா குழுவானது தடுப்பூசிகள் நோயை தடுப்பதற்கும் குணப்படுத்துவதற்கும் பயன்படுத்தப்பட முடியும் என அறிவித்துள்ளதோடு, அதை மறுப்பது தீங்கிழைக்கக் கூடியதாகும். ஆய்வுக்கும் பத்வாவுக்குமான ஐரோப்பிய குழு தமது அறிக்கையில், தடுப்பூசிகளில் பன்றியிலிருந்து வரும் பதார்த்தங்கள், புறக்கணிக்கப்படக் கூடிய அளவே உள்ளது என அறிவித்து, அவை கட்டாயம் பாவிக்கப்பட வேண்டும் என அறிவித்துள்ளது. உலக சுகாதார ஸ்தாபனமானது, தற்போதைய தடுப்பூசிகளில் முஸ்லிம்கள் தவிர்க்கக்கூடிய பதார்த்தங்கள் இல்லை என அறிவித்துள்ளது.

அண்மையில் மலேசிய ஹலால் உற்பத்தி அபிவிருத்தி நிறுவனம், சவுதி அரேபிய தனியார்துறையுடன் சேர்ந்து ஹலால் சான்றிதழ் பெறப்பட்ட தடுப்பூசிகளை உற்பத்தி செய்யும் தொழிற்சாலையை ஆரம்பித்துள்ளது.

சமூக வலைத்தளங்களில் பகிரப்படும் தடுப்பூசிகளுக்கெதிரான தவறான வாதங்கள், ஆதாரபூர்வமற்ற தகவல்கள் மிகவும் அதிகமாக மக்களைச் சென்றடைகின்றன. இதனை உலகளாவிய முஸ்லிம் சமூகம் மெது மெதுவாக தமது வழக்காறாக மாற்றி வருகின்றது. இப்பிழையான வழக்காறுக்கெதிராக செயற்பட வேண்டியது ஒவ்வொருவர் மீதும் கடமையாகும்.




# நுஸ்ரான் பின்னூரி வைத்தியம்:

# விமர்சனங்கள் பற்றிய பார்வை: 02

## ''தாய் மரணத்திற்கு யாராவது காரணமாக இருந்தால் அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க முடியும்''



Dr. முகம்மட் ரிஷாட் -
பெண்ணியல் மற்றும் மகப்பேற்று வைத்திய நிபுணர்,
டிசொய்சா மருத்துவமனை, கொழும்பு

முன்னைய காலங்களில் வீடுகளில் பிரசவம் பார்த்திருப்பது உண்மைதான், ஆனால் தாய்மாரின் இறப்பு மற்றும் நோயுற்ற தன்மை (Mortality and Morbidity) அதிகளவில் காணப்பட்டுள்ளது. பிள்ளைப் பேரின்போது எத்தனையோ தாய்மார் மரணித்துள்ள சம்பவங்களை நாம் கேள்விப்பட்டுள்ளோம். அப்போது இது அல்லாஹ்வின் ஏற்பாடு என்பதாக கூறி விடயத்தை விட்டிருப்போம். ஆனால் நிகழ்கால நிலைமைகள் அப்படியில்லை. எமக்கான வசதிகள் பெருகும்போது அவற்றை மேம்படுத்தித்தான் ஆக வேண்டும்.

இங்கிலாந்தில் வீட்டுப் பிரசவம் பார்க்கப்படுவதாகக் கூறுகிறார்கள். ஆனால் இங்கிலாந்தில் வீட்டுப் பிரசவம் இன்னும் வாதப்பிரதிவாதங்களுக்கு உட்பட்டு வரும் விடயமாகவே காணப்படுகின்றது. வீட்டுப் பிரசவத்தை விரும்புபவர்களுக்கு நிறைய ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்படுகின்றன. அதிகளவில் பரிசோதனைகளும் மேற்கொள்ளப்படும். ஆபத்து கூடியவர்களா? ஆபத்துக் குறைவானவர்களா? வேறு நோய்கள் காணப்படுகின்றதா? போன்ற விடயங்கள் அவதானிக்கப்படும். ஒரு வைத்தியருக்குக் கீழால் இவை அவதானிக்கப்படும்.

இவையெல்லாம் கவனத்திற்கொள்ளப்பட்டதன் பின்னர் தாதியொருவரின் கீழ் அப்பெண்கள் உட்படுத்தப்படுவார்கள். தாதிமார் இப்பெண்களின் உடல் நிலைமைகள் தொடர்பில் அடிக்கடி மருத்துமனைக்கு தகவல் வழங்கிக் கொண்டிருப்பார்கள். அம்பியூலன்ஸ் வண்டிகளும் தயார்படுத்தப்பட்டிருக்கும். நான் இங்கிலாந்தில் கற்ற காலப் பகுதியில் கூட அதிகளவான பெண்கள் வைத்தியசாலைக்கு அழைத்துவரப்படுவார்கள்.

அப்பெண்களுக்கு ஏதாவது நடவடிக்கை மேற்கொள்ளப்பட வேண்டியிருக்கும். பிரசவம் என்பது மாறும் செயல்முறை கொண்டது. தாயும் சேயும் தனித்தனியாக அவதானிக்கப்பட வேண்டும். பிரசவத்தின் போது கருப்பை வால்வுப் பகுதி திறக்கப்பட வேண்டும். இதில் தாமதம் காணப்படுமாயின் சில நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டியிருக்கும். இந்த நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கான வசதிகள் மருத்துவமனையில் மாத்திரமே காணப்படும்.

சிலநேரம் குருதிப் பெருக்கு அதிகமாகக் காணப்படலாம், தாய்க்கு குருதி அழுத்தம் அதிகரிக்கலாம், பிள்ளையின் தலை திரும்பியிருக்கும் விதம் வித்தியாசப்படலாம். இவற்றை கண்டுபிடிக்கவும் அவற்றுக்கு உடனடி நடவடிக்கைகளை மேற்கொள்ளவும் தேவையான வசதிகள் ஏற்படுத்திக் கொடுக்கப்பட வேண்டும். இங்கிலாந்தில் இது சாத்தியம் என்றாலும் கூட இது நிறைய வாதப்பிரதிவாதங்களுக்கு உட்பட்ட விடயமாக காணப்படுகின்றது.

எமது நாட்டில் வீட்டுப் பிரசவத்திற்கான மேற்குறிப்பிட்ட வசதிகள் எதுவும் இல்லை. தொடர்பாடல் பிரச்சினை, இடமாற்றல் பிரச்சினை. இலங்கையில் வீட்டுப் பிரசவம் சரியான முறையில் பார்க்கப்பட வேண்டுமென்றால் மிகப் பெரும் மாற்றமொன்று நடைபெற வேண்டும். 2016 இல் இறந்து போன 116 பெண்களில் சுமார் 17 வீதமானவர்கள் முஸ்லிம்கள். 20 வீதம் தமிழர்கள். இன விகிதாசாரப்படி பார்த்தால் முஸ்லிம்களே அதிகம். நோய் வந்தால் மருத்துவமனையை நாடும் வீதம் குறைவு, மருத்துவக் காரணங்களுக்காக வேண்டி கருத்தரிப்பதை பிற்படுத்த வேண்டிய தேவையிருந்தும் இடைவெளி வழங்காமல் கர்ப்பம் தரிப்பது போன்ற காரணங்களை தாய் மரணங்களுக்கான காரணிகளாகக் குறிப்பிட முடியும்.

இதில் 15 பெண்கள் குருதிப் பெருக்கினாலும், 11 பெண்கள் மாரடைப்பினாலும், 10 பெண்கள் கருப்பையைச் சூழவுள்ள நீர் உடம்பினுள் நுழைந்ததாலும் இறந்துள்ளனர். வைத்தியசாலையில் இருந்தாலும் கூட இந்த நிலைமையால் 50 வீதத்திற்கு அதிக பெண்கள் இறக்கும் வாய்ப்புள்ளது. வீட்டுப் பிரசவத்தின் போது இந்த நிலைமை ஏற்பட்டால் பெண்களின் நிலைமை என்னவாகும்? 112 பெண்கள் மரணிப்பார்கள் என்றால் அதை விட 10 மடங்கிற்கும் அதிக பெண்கள் மரணத்தை நெருங்கி காப்பாற்றப்பட்டவர்களாவர். வைத்தியசாலைகளில் மேற்கொள்ளப்படும் சிகிச்சை நடவடிக்கைகளின் மூலமே இவர்கள் காப்பாற்றப்பட்டுள்ளனர்.

ஒரு MBBS அல்லது தகுதி வாய்ந்த வைத்தியர் ஒருவர் அல்லது பயிற்றப்பட்ட தாதியின் மூலமே பிரசவம் பார்க்க முடியும் என இலங்கை சுகாதார கொள்கைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. இப்படியிருக்கும் போது தாய் மரணத்திற்கு யாராவது காரணமாக இருந்தால் அவர்களுக்கு எதிராகக் கடும் சட்ட நடவடிக்கை எடுக்க முடியும்.

சுகாதார அமைச்சும் குடும்ப சுகாதார பணியகமும் இணைந்து வீட்டுப் பிரசவம் தொடர்பில் தளர்வாக உள்ள சில விடயங்களை கடுமையாக்குவதற்கான நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தி வருகின்றன. எனவே வீட்டுப் பிரசவத்தின் போது பாதிக்கப்பட்டவர்கள் சார்பில் ஏதும் வாக்குமூலங்கள் கிடைத்தால் அவை தொடர்பில் கடும் சட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

2016ஆம் ஆண்டு தரவுகளின் படி 68 வீதமானவர்கள் பிரசவத்தின் பின்னரே இறந்துள்ளார்கள். காரணம், பிரசவத்தின் பின்பும் அவர்களுக்கான ஆபத்து குறைவதில்லை. எனவே மருத்துவமனைகளிலேயே இவர்கள் முறையாக கவனிக்கப்படுகின்றனர். கிருமித் தொற்று, இரத்தப் போக்கு, கருப்பைத் தண்ணி உடம்பினுள் புகுதல் போன்ற அம்சங்களும் இடம்பெறலாம். இப்படியான விடயங்களை கவனிக்கும் வசதிகள் வைத்தியசாலைகளில் காணப்படுகின்ற போது நாம் இன்னும் கற்காலத்திற்கு செல்வது மிகவும் மடத்தனமானது.


ஏற்கனவே அதிக நோய்களால் பாதிக்கப்பட்டிருப்பது முஸ்லிம்களாவர். நோய்களுடன் கருத்தரித்தல், பதின்ம வயதில் கருத்தரித்தல் மற்றும் 40 வயதுக்கு அதிகமானவர்கள் கருத்தரிப்பதும் எமது சமூகத்தில் அதிகமாகக் காணப்படுகின்றது. பிள்ளைகளுக்கு தேவையான பிறப்புச் சான்றிதழ் பத்திரத்தை பெற்றுக் கொள்வதில் கஷ்ட நிலைகள் காணப்படுகின்றது. இது தவிர சட்ட ரீதியான பிரச்சினைகளையும் வீட்டுப் பிரசவத்தால் எதிர்கொள்ள நேரிடுகிறது.

### பாதிக்கப்பட்ட சம்பவம்
### பெயர் குறிப்பிட விரும்பாத தந்தை

மகனுக்கு நான்கு வயதிருக்கும். பிறந்தது முதல் மகன் காலில் ஓர் உபாதை. மகனைக் குணப்படுத்தும் முயற்சியில் பல வைத்தியர்களையும் நாடிச் சென்றேன். தற்காலிக பலன் தவிர பூரண குணம் கிட்டவில்லை.

இனிமேலும் வைத்தியம் செய்வதில் பயனில்லை என்று விரக்தியில் இருந்த சமயம், இஸ்லாமிய மருத்துவர் ஒருவர் கொழும்பில் இருப்பதாகவும் அவரை நாடினால் சில தினங்களிலேயே பலன் கிட்டும் என்பதாகவும் ஒரு செய்தி கிடைத்தது. கொழும்பில் இயங்கிவரும் Raha Natural Herb வைத்திய நிலையத்திற்கு மகனை அழைத்துச் சென்றேன்.

அவ்வைத்திய நிலையத்தில் ஒரு படிவம் வழங்கப்பட்டது. படிவம் பூரணப்படுத்திக் கொடுக்க, பதிவுக் கட்டணமும் அறிவிடப்பட்டு வைத்தியரைப் பார்க்க அழைத்தும் செல்லப்பட்டேன்.



வெள்ளை ஜுப்பா தலையில் தொப்பி அணிந்த ஒருவர் மகனின் நாடியை ப்பிடித்து பரிசோதித்தார். மகனுக்கு ஒன்றும் உபாதைகள் இல்லை ரூஹானியத் சம்பந்தப்பட்ட கோளாறென்று மாத்திரமே காணமுடிகிறது. ஒரு தாயத்து தருகிறோம் மகனின் இடுப்பில் கட்டி விடுங்கள். கவுண்டரில் ஒரு காகிதக் கூண்டு தருவார்கள் அதில் உள்ளவற்றை செய்து கொள்ளுங்கள் இன்ஷா அல்லாஹ் குணம் கிடைக்கும் என உருது மொழியில் சொல்ல அடுத்தவர் அதனை மொழிபெயர்த்துச் சொன்னார்.

கவுண்டரில் அந்த காகித கூண்டைப் பெற 9000.00 ரூபா அறவிடப்பட்டது. வீட்டிற்குச் சென்று பார்த்தால் காகிதத்தில் 'யா முமீத்' என ஒரு நாளைக்கு 8000 வீதம் ஏழு நாட்கள் ஓதவும் என அதில் எழுதப்பட்டிருந்தது.

(விமர்சனங்கள் தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

• அனஸ் அப்பாஸ்

# அமெரிக்காவிலிருந்து பேசும் இலங்கை விஞ்ஞானி

## ரிஸானா மஹ்ரூப்

முஹம்மத் மஹ்ரூப் - பாத்திமா சுல்பா தம்பதிகளின் செல்வப் புதல்வியும் விஞ்ஞானியுமான ரிஸானா மஹ்ரூப் கண்டியைப் பிறப்பிடமாகக் கொண்டவர். அமெரிக்காவின் South Carolina அரச பல்கலைக்கழகத்தில் தற்போது விரிவுரையாளராகக் கடமையாற்றுகின்றார். விரிவுரையாளராக கடந்த பத்து வருடங்களாக இத்துறையில் முதிர்ந்த அறிவு பெற்ற இவரது வாழ்க்கைப் பயணக் குறிப்புடன் இதோ நாமும் சஞ்சரிக்கலாம்.

LKG முதல் தரம்-1 வரை அல்-மின்ஹாஜ் தேசிய பாடசாலையில் கற்றுவிட்டு இரட்டை வகுப்பேற்றம் (Double Pass) பெற்றுத் தரம்-3 முதல் தரம்-6 வரை கண்டி பதியுத்தீன் மகளிர் கல்லூரியில் கற்றார் ரிஸானா. தரம்-7 முதல் உயர் தரம் வரை கண்டி உயர் நிலை பெண்கள் பாடசாலையில் கற்ற இவர், பேராதனை பல்கலைக்கழகத்தில் விவசாயத்துறை பட்டப்படிப்பை BSc in Agriculture (Hons) உயர்ந்த தரத்தில் நிறைவு செய்து, தனக்குக் கிடைத்த வாய்ப்பை பயன்படுத்தி ஐக்கிய இராச்சியத்தில் உள்ள எடின்பேர்க் பல்கலைக்கழகத்தில் வன பூச்சியியல் தத்துவ முதுமாணிக் கற்கையை (M. Phil in Forest Entomology) பூர்த்திசெய்தார். அடுத்து அமெரிக்காவுக்குப் பறந்தார் ரிஸானா. அங்கு கன்சாஸ் அரச பல்கலைக்கழகத்தில் நுண்ணுயிரியலில் இளங் கலைமானிப் பட்டத்தைப் பூர்த்தி செய்ததுடன், ஒக்லஹாமா அரச பல்கலைக்கழகத்தில் தோழமை முனைவர் பட்டத்தைப் பெற்றார்.

ஒரு விரிவுரையாளராக கற்பித்தல், ஆய்வுகளை மேற்கொள்ளல், நீட்டிப்பு மற்றும் எல்லை நடவடிக்கைகள் என களத்திலும் செயற்பாடுகள் நகர்வதுடன், வேலைப் பயிற்சி அடிப்படையில் ரிஸானா ஒரு நுண்ணுயிரியலாளர். குறிப்பாக, இடுகையிடப்பட்ட சங்கிலியுடன் இணைந்து பூச்சி தொற்றைக் குறைப்பதில் மற்றும் சமையலறை நுகர்வுக்காக விவசாய அறுவடைகளில் பூச்சிகளைக் கட்டுப்படுத்துவதில் தொழிற்படுகின்றார். உலகில் தானிய அறுவடைகளில் 5 - 40 வீதமான இழப்புக்களுக்கு பூச்சிகளே காரணம். (கோதுமை, அரிசி, சோளம், ஒத்தவைகள் மற்றும் பருப்பு வகைகள்.)

இரசாயனமல்லாத மரபுவழி முறைகளைப் பயன்படுத்தி சேமித்த மற்றும் பதப்படுத்தப்பட்ட உணவுப் பொருட்களை பூச்சிகள் சேதப்படுத்தாதிருக்கும்



முறைகளை இவர் ஆய்வு செய்கின்றார். உடல் உத்திகள், செமியோ இரசாயனம், ஒக்சிஜன் ஏற்றப்பட்ட வாயுக்கள் மூலமாகவே அமெரிக்காவில் இத்துறையில் முயற்சிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன. அபிவிருத்தியை ஆழமாக வேண்டிநிற்கும் ஆபிரிக்கா (எதியோப்பியா) போன்ற நாடுகளுக்கு சேமித்த உணவுகளில் ஏற்படும் சேதத்தை குறைக்கும் இவரது ஆய்வு விரிவாக்கப்பட்டுள்ளது.

இதுவரை தேசிய மற்றும் சர்வதேச அளவில் 34 பத்திரிகை மறுபார்வை கட்டுரைகள், 142 விளக்கக் காட்சிகள் இவரால் முன்வைக்கப்பட்டுள்ளன. 13 பரிந்துரைக்கப்பட்ட பத்திரிகைகளில் சமானமதிப்பாய்வாளராக செயற்படுவதோடு, பல புத்தகங்களுக்கு புத்தக



மீளாய்வாளர், ஆசிரியருமாவார். மேலும், அமெரிக்க- கனேடிய நிதி நிறுவனங்களுக்குப் பரிசோதனை வழங்குனராகவும் செயற்படுகின்றார்.

இவரது செயற்பாடுகளைப் பாராட்டி இதுவரை 31 அங்கீகார விருதுகள் கிடைக்கப் பெற்றுள்ளன. மிக அண்மையில் தெற்கு கரோலினாவின் உள்ளூர் அரசு பற்றிய சிறந்த அறிவியல் ஆய்வுக்காக முதல்வரின் விருதும் இவரது கரங்களை வந்தடைந்தது. இலங்கையில் இருந்த காலப்பகுதியிலும் பல கல்வி நிறுவனங்களில் விரிவுரைகளை நிகழ்த்திய அனுபவம் இவருக்குண்டு. மேலும், அமெரிக்க பல்கலைக்கழகத்தில் இதுவரை 40 மாணவர்களை ஆய்வுத் துறையில் வழிகாட்டி பயிற்றுவித்த பெருமையும் இவரைச் சாரும்.

உறுதியான நீட்டிப்பு சேவைகளை அமெரிக்காவுக்கும், உலக மக்களுக்கும் செய்வதோடு, எதிர்கால விஞ்ஞான ஆய்வாளர்களை பயிற்றுவிப்பதை தான்



தொடர்ந்தும் விரும்புவதாகக் குறிப்பிடும் ரிஸானா, அல்ஹம்துலில்லாஹ் சீரிய கல்வியைப் புகட்டி வாழ்க்கையில் உயர்ந்த இடத்திற்கு தன்னை கொண்டு வந்த அன்பின் பெற்றோருக்கு மனமார்ந்த நன்றிகளைத் தெரிவிக்கின்றார்.

மேலும், வாழ்க்கையில் ஒவ்வொரு கட்டங்களிலும் தீர்மானங்களின்போது உதவிய சகோதரர்கள், சிறுவயதிலேயே பூச்சி சார்ந்த அறிவியலைப் புகட்டிய மறைந்த பாட்டி, என்றும் தான் மறவாத ஆசிரியர்கள், விரிவுரையாளர்கள், பயிற்றுவிப்பாளர்கள் மற்றும் பல வழிகளில் உதவியோர் என அனைவருக்கும் நன்றி தெரி விக்கின்றார்.

''எதிர்கால வாயில்களைத் திறக்கும் ஒரே மந்திரம் கல்வி. வாழ்வில் உயர்வைப் பெற அயராத முயற்சி அவசியம். எமக்கான ஒழுங்குகளை விதித்து அதன்படி நடந்தால் வாழ்வில் வெற்றி நிச்சயம். பெற்றோரையும், ஆசிரியர்களையும் மதிக்க வேண்டும். பல்லின கலாசார சூழலில் வாழும் நாம் நல்லிணக்கத்துடன் வாழ்வதுடன், பிற மத நம்பிக்கையுடையோர்க்கும் தேவைகளின் போது கரம் கொடுக்க வேண்டும்'' என்று இளம் சந்ததிக்கு தனது அறிவுரையை உதிர்த்து இலங்கை சமூகத்துக்கு நன்றி கூறி முடிக்கின்றார் ரிஸானா.

---

• உஸ்தாத் ஆஸாத் அப்துல் முஈத்

### கூட்டு இஜ்திஹாத்: அறிமுகமும் பிரயோகமும் (08)



# கூட்டு இஜ்திஹாதுக்கான பரப்புகள்

கூட்டு இஜ்திஹாத் பல சட்ட வல்லுனர்கள் ஒரு இடத்தில் ஒன்று திரண்டு செய்யும் பணியாகும். எனவே இப்பணியின் பரப்புக்கள் தெளிவாக இருத்தல் முக்கியமானது. இல்லாத போது இஜ்திஹாத் இடம்பெறக்கூடாத இடங்களில் இஜ்திஹாத் நடைபெறலாம். அந்த வகையில் இதனை முக்கிய மூன்று பரப்புகளில் அடையாளப்படுத்த முடியும்.

### முதலாவது பரப்பு: புதிய விவகாரங்கள்

இஸ்லாம் முழுமையான ஒரு மார்க்கம். அதன் பொது விதிகள், அனைவருக்குமான அடிப்படை சட்ட ஒழுங்குகள் தெளிவாக வகுக்கப்பட்டுள்ளன. எனினும் சங்கடங்கள் ஏற்படாமல் இருப்பதற்காக விரிவான மற்றும் கிளை அம்சங்களை இஜ்திஹாதிற்கு விட்டுள்ளது.

இது பற்றி இமாம் ஷாதிபி (ரஹ்) கூறுகின்றார்: ''மிக அத்தியவசிய அம்சங்கள் (ழரூரிய்யாத்), முக்கிய தேவைகள் (ஹாஜிய்யாத்) மற்றும் முழுமைப்படுத்தும் அம்சங்கள் (தக்மீலிய்யாத்) தொடர்பான விதிகள் மார்க்கத்தில் மிகத் தெளிவாக விளக்கப்பட்டுள்ளன. இவற்றை மையப்படுத்திய கிளை அம்சங்களின் நடைமுறைகள் பற்றிய அம்சம் முஜ்தஹித்களின் சிந்தனைக்கு விடப்பட்டுள்ளது''. (இஃதிஸாம்)

ஆரம்பகால அறிஞர்கள் தமது காலத்தில் தோன்றிய புதிய அம்சங்களுக்கு இஜ்திஹாத் செய்து தீர்வுகளைக் கண்டு கொண்டனர். வேகமான பல மாற்றங்களை கண்டுவரும் இக்காலத்தில் தோன்றும் புதிய விவகாரங்களுக்கு இக்கால அறிஞர்களின் இஜ்திஹாத் அவசியப்படுகின்றது. அரசியல், பொருளாதார, சமூக, கல்வி மற்றும் இன்னோரன்ன பல பரப்புகளில் சடுதியான மாற்றங்களையும் புதிய வடிவிலான பிரச்சினைகளையும் நாம் காண்கிறோம்.

இப்பிரச்சினைகள் பல சிக்கல்களுடன் இருப்பது இது பற்றிய தீர்வைப் பெறுவதில் கூட்டு இஜ்திஹாதின் தேவையைக் காட்டுகின்றது. தனிநபரால் மாத்திரம் இத்தகு பிரச்சினைகளுக்கு தீர்வு காண்பது சிரமமானது. இத்தகைய பிரச்சினைகளுக்கு எமது முன்னோர்களின் பத்வாக்களின் பொருத்தப்பாடு தொடர்பிலும் சிந்திக்க வேண்டிய தேவை உள்ளது.

### இரண்டாவது பரப்பு : பொருத்தமான கருத்தைத் தெரிவுசெய்தல்

இஸ்லாமிய சட்டவாக்க வரலாற்றில் இமாம்களின் பங்காற்றுகை மகத்தானது. ஒவ்வொரு காலப்பிரிவிலும் வாழ்ந்த அறிஞர்கள் மத்ஹப் அடிப்படையிலும், மத்ஹப் சாராமலும் கூறிய பத்வாக்கள், ஷரீஅத் நிலைப்பாடுகள் அக்கால கட்டங்களில் காணப்பட்ட பல்வேறு சட்டப் பிரச்சினைகளுக்கு தீர்வுகளை வழங்கின.

இச்சட்டங்கள், பத்வாக்கள், ஷரீஅத் நிலைப்பாடுகள் புத்தக வடிவில் தொகுக்கப்பட்டுள்ளமை எமக்குக் கிடைத்த மிகப்பெரும் பொக்கிஷமாகும். ஒரு மஸ்அலா தொடர்பில் அறிஞர்களுக்கு மத்தியில் பல்வேறு கோணங்களில் அவற்றுக்கான நிலைப்பாடுகளை நாம் காண முடியும். இதனை இஸ்லாமிய அறிஞர்கள் அருளாகப் பார்க்கின்றனர். மக்களை சங்கடத்தில் தள்ளிவிடாது பொருத்தமான தீர்வை பெற்றுக் கொள்வதற்கான வாயில் இங்கு திறந்திருக்கின்றது என்பது அருள் என்பதன் கருத்தாகும்.

பொருத்தமான கருத்தைத் தெரிவு செய்தல் என்பது ஒரு பொறுப்பான காரியமாகும். குறிப்பாக தனிநபர்களுக்கு பத்வா சொல்வதை விட சமூகம் சார்ந்த பொதுப் பிரச்சினைகளுக்கு ஷரீஆவின் நிலைப்பாட்டை எடுக்கும்போது அதனை தனிநபர் இஜ்திஹாதில் தங்கியிருந்து எடுப்பது ஆரோக்கியமானதல்ல. ஏனெனில் அவரது இஜ்திஹாத் முடிவு பொருத்தமற்றதாகக் காணும் போது அதன் விளைவு முழு சமூகத்தையுமே பாதிக்கும்.

இங்கு இப்பணியை அறிஞர்கள் கூட்டாக செய்ய வேண்டிய தேவையுள்ளது. பிக்ஹில் காணப்படும் பல்வேறு கருத்துக்களில் இருந்து மிகப் பொருத்தமான கருத்தைத் தெரிவுசெய்யும் போது பின்வரும் விடயங்களை கருத்தில் கொள்வதினால் பொருத்தமான கருத்தைத் தெரிவு செய்துகொள்ள முடியும்.

1. இலங்கை முஸ்லிம்கள் ஷாபிஈ மத்ஹபைப் பின்பற்றுகின்றவர்கள் என்ற வகையில் ஆரம்பத்தில் ஷாபிஈ மத்ஹபிற்குள்ளால் காணப்படும் கருத்துகளில் பொருத்தமான கருத்தை அடையாளம் கண்டு கொள்ளல். ஷாபிஈ மத்ஹப் என்பது ஒரு சில அறிஞர்களின் கருத்தல்ல. இமாம் ஷாபிஈ (ரஹ்) முதல் நவீன காலம் வரை ஷாபிஈ மத்ஹபைச் சார்ந்து சொல்லப்பட்ட ஷரீஅத் நிலைப்பாடுகளை நாம் பார்க்க வேண்டும். இதற்குள்ளால் பொருத்தமான தீர்வு கிடைக்குமாயின் அதனை நாம் பத்வாவாக எடுக்க முடியும்.

2. குறித்த பிரச்சினைக்குப் பொருத்தமான தீர்வு ஷாபிஈ மத்ஹபிற்குள்ளால் இல்லாதபோது ஏனைய மத்ஹபுகளின் கருத்துக்களை நாம் ஆய்வு செய்ய வேண்டும். அதற்குள்ளால் காணப்படும் கருத்துக்களில் பொருத்தமான கருத்தைத் தெரிவுசெய்ய வேண்டும். இது முன்னைய இமாம்களின் முக்கிய பண்பாகக் காணப்பட்டது. தான் பின்பற்றும் மத்ஹபின் கருத்தை விட்டு விட்டு ஏனைய மத்ஹபுகளின் கருத்தை அவர்கள் தெரிவு செய்தார்கள். அவர்கள் மத்ஹப் வெறியில்லாது மக்களை சங்கடத்தில் தள்ளிவிடாமல் ஷரீஆவின் நோக்கங்களுக்கு ஏற்ப தமது தெரிவுகளை அமைத்துக் கொண்டார்கள். இதுவே உலமாக்களின் கடமையுமாகும்.

3. நான்கு மத்ஹபுகளிலும் பொருத்தமான தீர்வு கிடைக்காத போது மத்ஹபுகளை சாராத இமாம்கள், சட்ட வல்லுனர்களின் கருத்துக்களை ஆய்வு செய்ய வேண்டும். இமாம் அவ்ஸாஈ, இமாம் லைஸ் இப்னு ஸஃத், இமாம் சுப்யானுஸ் ஸவ்ரி போன்ற முஜ்தஹித் தரத்தில் கணிக்கப்படக்கூடிய இத்தகையவர்களது கருத்துக்களில் இருந்து பொருத்தமான கருத்து தெரிவு செய்யப்பட வேண்டும். இவர்கள் நான்கு இமாம்களின் அந்தஸ்தை விட ஒருபோதும் குறைந்தவர்கள் அல்ல.

இத்தொடரில் மதீனாவில் வாழ்ந்த ஏழு பெரும் தாபியீன்கள், புகஹாஉஸ் ஸஹாபா என அழைக்கப்படும் சட்டத் துறையில் பாண்டித்தியம் பெற்ற உமர் (ரழி), இப்னு அப்பாஸ் (ரழி), ஆயிஷா (ரழி) போன்ற ஏழு பெரும் ஸஹாபிகளின் கருத்துக்களில் இருந்தும் தெரிவுகள் இடம்பெற வேண்டும்.

4. இவ்வனைத்து இடங்களிலும் பொருத்தமான கருத்து காணாத போது கூட்டு இஜ்திஹாத் அடிப்படையில் மஸ்அலாக்கள் ஆராயப்பட்டு முடிவுகள் பெறப்பட வேண்டும். இது ஷரீஆத் துறை அறிஞர்களின் கடமையாகும்.

இத்தகைய இஜ்திஹாதின் போது ஷரீஆவின் நோக்கங்களான மகாஸிதுகள் கருத்திற் கொள்ளப்பட வேண்டும்.

மகாஸித் கலையின் ஆரம்ப வரலாற்றில் ஷாபிஈ மத்ஹபைச் சேர்ந்த அறிஞர்களின் பங்காற்றுகை முக்கியமானது. இமாம் அபூ பக்ர் அல் கப்பால் அஷ் ஷாஷி (365), இமாம் ஜுவைனி (478), இமாம் கஸ்ஸாலி (505), இமாம் இப்னு அப்திஸ் ஸலாம் (660) போன்ற ஷாபிஈ மத்ஹபைச் சேர்ந்த அறிஞர்கள் இதற்கு சில உதாரணங்கள் மாத்திரமே.

### மூன்றாவது பரப்பு: மாற்றத்தை வேண்டி நிற்கும் இடங்கள்

இஸ்லாமிய சட்டங்களில் பொது நலன், வழக்காறுகள், கியாஸை அடிப்படையாக வைத்து சொல்லப்பட்ட சட்டங்கள் உள்ளன. இத்தகைய சந்தர்ப்பங்களில் சட்டங்கள் சொல்லப்பட்டமைக்கான அடிப்படைகள் தொடர்பில் இஜ்திஹாத் செய்ய வேண்டும். நலன்கள், வழக்காறுகள் மாறும் சந்தர்ப்பத்தில் சட்டங்களும் மாற்றமடைய முடியும். கால, இட, சூழல் மாற்றங்களுக்கு ஏற்ப சட்டங்கள் மாற்றமடைய முடியும் என்ற சட்ட விதிக்கேற்ப இது காணப்படுகின்றது.

இஸ்லாமிய ஷரீஅத் அனைத்துக் காலங்களுக்கும் பொருந்தும் என்ற அடிப்படையுடனும் இப்பகுதி தொடர்பாகின்றது. எனவே சட்டங்களில் மாறாத அம்சங்கள் எவை, மாற்றத்திற்கு உட்பட முடியுமானவை எவை என்பது மிகக் கவனமாக தீர்மானிக்கப்பட வேண்டும்.

உதாரணத்திற்கு ஸகாத்தின் நிஸாபை தீர்மானிப்பதற்கு அன்றைய காலத்தில் கணிப்பீட்டு அளவீடாக தங்கம் மற்றும் வெள்ளி நாணயங்கள் காணப்பட்டன. ஆனால் இன்று இந்த இரண்டினதும் பெறுமானம் பாரிய வித்தியாசத்தில் காணப்படுகின்றது. எனவே வெள்ளியை நிஸாபிற்குரிய அளவீடாகப் பயன்படுத்தல் தொடர்பில் நவீனகால அறிஞர்கள் தமது கருத்தைத் தெரிவித்துள்ளனர்.

கால மாற்றங்களுக்கு ஏற்ப சட்டங்களில் மாற்றம் ஏற்பட வேண்டும் என்ற போர்வையில் மாற்றத்திற்கு உட்படாத சட்ட வசனங்களில் மாற்றங்களைக் கொண்டு வருவதற்கு சிலர் முயற்சிக்கலாம். இது ஆரோக்கியமானதல்ல. இதன் விளைவு பாரதூரமாக அமையும் என்ற அம்சம் கவனத்தில் கொள்ளப்பட வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உழ்ஹிய்யா

## இஸ்லாத்தின் ஆறாவது கடமையா?



• முஹம்மத் பகீஹுத்தீன்

துல்ஹஜ் மாதம் 10 ஆம் நாளாகிய பெருநாள் அன்று காலை பெருநாள் தொழுகை முடிந்ததிலிருந்து துல்ஹஜ் 13 ஆம் நாள் சூரியன் மறைவதற்குள் வசதி 'படைத்தவர்கள் தமது சுயவிருப்பத்தின் பிரகாரம் இறை திருப்தியை நாடி தியாக உணர்வோடு ஆடு, மாடு, ஒட்டகங்களை அறுத்து பலியிடுவது 'குர்பான்' அல்லது உழ்ஹிய்யா எனப்படும். இது ஒரு சுன்னத்தான வணக்கமாகும். இந்த வணக்கத்தை நிறைவேற்றுவதன் மூலம் பாவங்கள் மன்னிக்கப்படுகின்றன.

### உழ்ஹிய்யா கொடுப்பது ஏன்?

இப்ராஹீம் (அலை) அவர்களது தியாக வாழ்வை நினைவு கூர்வதும், எந்த நிலையிலும் அல்லாஹ்வின் கட்டளைக்கு அடிபணிந்து வாழ்வதும், உள்ளத்தில் உள்ள கஞ்சத்தனத்தை அகற்றுவதற்கு பயிற்சி எடுப்பதும், பெருநாள் தினங்களில் எல்லோரும் பசியாறி சந்தோசமாக வாழ்வதற்கு வழியமைப்பதும் உழ்ஹிய்யா வணக்கத்தை நிறைவேற்றுவதன் மூலம் அடையப் பெறும் முக்கியமான சில நோக்கங்களாகும்.

### உழ்ஹிய்யா ஆறாவது கடமை அல்ல

உழ்ஹிய்யா வணக்கத்திற்கு ஷரீஆ வழங்கியுள்ள அந்தஸ்து யாது என்பதை அறிந்திருப்பது மிக முக்கியமாகும். அது வசதி படைத்த ஒருவருக்கு தவிர்க்க முடியாத கட்டாயக் கடமையா? அல்லது சுன்னத்தான ஒரு அமலா? வசதியிருந்தும் அதனை நிறைவேற்றாமல் விட்டுவிட்டால் குற்றமாகுமா? இவை குறித்து தெளிவான விளக்கம் இல்லாவிட்டால் சமூகத் தளத்தில் பாரதூரமான தவறுகள் ஏற்பட வாய்ப்புண்டு. தேசிய நல்லிணக்கத்தையே பாதிக்கும் அளவிற்கு அதன் தாக்கம் பாய்ந்து செல்ல முடியும். எனவே ஷரீஆ சட்டப் பரப்பில் அதன் அந்தஸ்தை சரிவர புரிந்து கொள்வது தார்மீகக் கடமையாகும்.

உழ்ஹிய்யா என்பது வாஜிபான ஒரு வணக்கம் என என சில அறிஞர்கள் அபிப்பிராயப்படுகின்றனர். இக்கருத்தை இமாம் அபூ ஹனீபா (ரஹ்), இமாம் நகஈ, இமாம் முஹம்மத், இமாம் அவ்ஸாஈ, இமாம் இப்னு தைமியா ஆகியோர் கூறியுள்ளனர். அவ்வாறே இமாம் அஹ்மத் பின் ஹம்பல் (ரஹ்) அவர்களின் இரண்டு அபிப்பிராயங்களில் ஒரு கருத்தும் மாலிக் மத்ஹபின் ஒரு சாராரின் கருத்தும் உழ்ஹிய்யா வாஜிப் என்ற சிந்தனைக்கு வலுச் சேர்க்கின்றது. ''நீர் அவனுக்காகவே தொழுது பலியிடுவீராக!'' என்ற அல்குர்ஆன் வசனத்தை இதற்கு ஆதாரமாக அவர்கள் முன்வைக்கின்றனர்.

பின்வரும் ஹதீஸ்களும் வாஜிப் என்ற சிந்தனையை கொண்டிருப்பவர்கள் முன்வைக்கும் ஆதாரமாக அடையாளப் படுத்தப்படுகிறது.

ஜுன்துப் இப்னு சுஃப்யான் (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: 'நான் நபி (ஸல்) அவர்களுடன் துல்ஹஜ் 10 ஆவது நாளில் இருந்தேன். அப்போது அவர்கள், 'பெருநாள் தொழுவதற்கு முன்பே குர்பானிக்கான பிராணியை அறுத்துவிட்டவர் அதற்குப் பதிலாக வேறொன்றை தொழுகைக்குப் பின் அறுக்கட்டும் என்றும், அறுக்காமல் இருப்பவர் தொழுகை முடிந்தவுடன் அறுக்கட்டும்'' என்றும் கூறினார்கள். (புகாரி, முஸ்லிம்)


''யார் வசதியிருந்தும் அறுத்துப் பலியிடவில்லையோ அவர் நமது தொழுகை நடைபெறும் இடத்தை நெருங்கவும் வேண்டாம்'' என நபி (ஸல்) அவர்கள் கூறியதாக அபூ ஹுரைரா (ரழி) அவர்கள் அறிவித்துள்ளார்கள். (அஹ்மத், இப்னு மாஜா)

இமாம் ஷாபிஈ, இமாம் ஸவ்ரி, இமாம் ஸயீத் இப்னு முஸைய்யப், இமாம் மாலிக் மற்றும் ஹம்பலி மத்ஹபின் பெரும்பான்மையான அறிஞர்களின் கருத்தும் உழ்ஹிய்யா முக்கியமான ஒரு சுன்னா என்பதே. பொதுவாக ஸஹாபாக்களின் கருத்தும் உழ்ஹிய்யா வலியுறுத்தப்பட்ட ஒரு சுன்னாவாகும் என்பதே. எனவே பெரும்பான்மையான அறிஞர்களின் கருத்துப்படி உழ்ஹிய்யா வாஜிப் அல்ல.

''துல் ஹஜ் முதல் பத்தில் நுழைந்துள்ள ஒருவர் உழ்ஹிய்யா கொடுக்க விரும்பினால்...) என ஆரம்பிக்கும் ஹதீஸ் ஸஹீஹ் முஸ்லிமில் வந்துள்ளது. இந்த ஹதீஸ் தெளிவாகவே விருப்பமுள்ள ஒருவர் செய்யக் கூடிய ஒரு வணக்கமாகவே உழ்ஹிய்யாவை நபிகளார் அறிமுகம் செய்துள்ளார்கள். அது கட்டாயக் கடமை என்ற கருத்து இருந்திருப்பின் மக்கள் விருப்பத் தெரிவுக்கு நபி (ஸல்) அவர்கள் விட்டுவைக்க மாட்டார்கள்.

### ஸஹாபாக்கள் வாழ்வில் உழ்ஹிய்யா

உழ்ஹிய்யா என்பது இறையச்சத்தை வெளிப்படுத்தும் ஒரு முக்கியமான வணக்க வழிபாடாகும். இருந்தும் ஸஹாபாக்கள் அதனை கட்டாயக் கடமையாகப் புரிந்துகொள்ளவில்லை. மாறாக சுன்னத்தான ஒரு அமலாகவே பார்த்தனர். மக்கள் அதனை ஆறாவது கடமையாக நோக்கக் கூடாது என்பதில் அபூபக்கர் (ரழி) அவர்களும் உமர் (ரழி) அவர்களும் மிகக் கவனமாகச் செயற்பட்டார்கள். எனவே அவர்கள் இருவரும் துல்ஹஜ் மாதத்தின் விசேட சிறப்புக்குரிய வணக்கமான அறுத்துப் பலியிடும் உழ்ஹிய்யா வணக்கத்தை ஒருபோதும் நிறைவேற்றவில்லை என்பதே வரலாறாகும். (இப்னு கதீர் 4/646, ஸுப்லுஸ் ஸலாம் 4/91)



நபித்தோழர்கள் பலர் உழ்ஹிய்யா வணக்கத்தை பொது மக்கள் கடமை என்று எண்ணிவிடக் கூடாது என்பதற்காக அதனை நிறைவேற்றாமல் வாழ்ந்து வந்துள்ளார்கள் என்ற செய்தியை இமாம் ஷாதிபி அவர்கள் தனது இஃதிஸாம் என்ற நூலில் பதிவு செய்துள்ளார். (இஃதிஸாம் 8/91)

இக்ரிமா (ரழி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: இப்னு அப்பாஸ் (ரழி) அவர்கள் இரண்டு திர்ஹம்களை என்னிடம் தந்து இறைச்சி வாங்கி வருமாறு பணித்தார்கள். வரும் வழியில் இது என்ன? என யாரேனும் வினவினால் இது இப்னு அப்பாஸின் உழ்ஹிய்யா எனச் சொல்லுமாறு என்னிடம் கூறினார்கள். (பிதாயாதுல் முஜ்தஹித் 1/464) இப்னு அப்பாஸின் பார்வையில் அது ஒரு கடமையாகாது. எனவே இறைச்சியை வாங்கி தர்மம் செய்து விட்டு இது தான் எனது உழ்ஹிய்யா எனக் கூறியுள்ளார்கள்.

பிலால் (ரழி) அவர்கள் ஒரு சேவலை அறுத்து உழ்ஹிய்யா கொடுத்தார்கள் என்பதும் நம்பகமான அறிவிப்பாகவே காணப்படுகிறது. இப்னு மஸ்ஊத் (ரழி) அவர்கள் தனக்கு வசதிகள் இருந்தும் மக்கள் உழ்ஹிய்யா வணக்கத்தை கடமை என்று புரிந்துகொள்ளக் கூடாது என்பதற்காக குர்பான் கொடுப்பதை வேண்டுமென்றே தவிர்ந்து கொண்டார்கள். (இஃதிஸாம் 8/91)

சட்ட வசனங்கள் தரும் அர்த்தங்களை நபித்தோழர்களின் புரிதல்களுடன் விளங்குவது சட்டங்களின் தாரதரங்களை விளங்கிக் கொள்வதற்கு உதவியாக அமைகிறது. இங்கு ஸஹாபாக்கள் உழ்ஹிய்யா ஒரு கடமையல்ல என்பதை வித்தியாசமான முறையில் புரிய வைத்துள்ளார்கள். சிறப்புக்குரிய முதலிரண்டு கலீபாக்களும் உழ்ஹிய்யாவை நிறைவேற்றாமல் தவிர்ந்து கொள்வதனூடாக அது கடமையல்ல என்பதை நேரடியாகவே விளக்கியுள்ளார்கள்.

குர்பானுக்கு அறுத்துப் பலியிடுவது ஏற்றமானது என்பதை இப்னு அப்பாஸ் (ரழி) அவர்கள் அறியாதவரல்ல. இருந்தும் அவர் அறுத்துப் பலியிடாமல் அறுக்கப்பட்ட மிருகத்தின் ஒரு பகுதியை வாங்கி இது எனது உழ்ஹிய்யா என கூறுவதன் மூலம் உழ்ஹிய்யாவை ஆறாவது கடமையாக கருதிவிடாதீர்கள் என எச்சரிக்கை செய்துள்ளார்கள்.

பிலால் (ரழி) அவர்கள் ஒரு சேவலை உழ்ஹிய்யா கொடுத்து விட்டு அதுதான் எனது உழ்ஹிய்யா என்று கூறிய அறிவிப்பினூடாக உழ்ஹிய்யா கட்டாயக் கடமையல்ல என்ற கருத்தையே சொல்லுவதற்கு முனைந்துள்ளார்கள்.

உழ்ஹிய்யா பற்றிய இந்தப் பின்னணி இல்லாததன் காரணமாகவே கடன்பட்டாவது குர்பான் கொடுப்பதற்கு சிலர் முனைகின்றனர். கூட்டுக் குர்பான் திட்டமும் இந்த புரிதலில் ஏற்பட்ட கோளாறாகவே பார்க்க முடியும்.

பலர் தவணை அடிப்படையில் அடிப்படைத் தேவைகளுக்கான பொருட்களை கொள்வனவு செய்து வாழும் போது அந்தத் தவணைகளுக்கான கட்டணங்கள் எஞ்சியிருக்கும் நிலையில் உழ்ஹிய்யாவை ஆறாவது கடமை போல் செய்யத் துணிகின்றனர். அப்படி உழ்ஹிய்யா கொடுப்பது கூடாது என்பதே ஷரீஆவின் பார்வையாகும்.

ஏழு பேர் சேர்ந்து ஒரு மாட்டையோ அல்லது ஒட்டகத்தையோ உழ்ஹிய்யா கொடுக்கலாம். அதற்காக கூட்டுக் குர்பான் என்ற பெயரில் பொதுமக்களிடமிருந்து பணம் சேகரித்து செய்யப்படும் திட்டமிட்ட கூட்டு அமலாக உழ்ஹிய்யா வணக்கம் மாற்றப்படுவது நபிகளாரின் சுன்னாவல்ல. ஒரு வணக்கத்தின் சட்ட அந்தஸ்தை மிகைப்படுத்துவது வரவேற்கத்தக்க ஒன்றல்ல. ஸஹாபாக்கள் தனித்தனியாக உழ்ஹிய்யா கொடுப்பதையே மக்கள் அதனை வாஜிப் என்ற சட்ட அந்தஸ்துக்கு உயர்த்தக் கூடாது என்பதற்காகத் தவிர்ந்து கொண்டார்கள் என்பதை ஏலவே புரிந்து கொண்டோம்.

### உழ்ஹிய்யாவிற்குப் பதிலாக அதன் பெறுமதியை கொடுத்தல்

உழ்ஹிய்யாவை பொறுத்தவரை அதனது பெறுமதியைக் கொடுப்பதைப் பார்க்கிலும் அதனை அறுத்துப் பலியிடுவதே மேலானது என்பதே அநேகமான அறிஞர்களது கருத்தாகும்.

இங்கு யாரும் பெறுமதியை கொடுப்பது கூடாது என்று கூறவில்லை. அறுத்துப் பலியிடுவது சிறப்பானது என்ற கருத்தைத்தான் முன்வைத்துள்ளார்கள்.

ஏற்கனவே குறிப்பிட்டது போல இப்னு அப்பாஸ் (ரழி) அவர்கள் அறுப்பு கடமையில்லை என்ற கருத்தை கொண்டதனால்தான் காசுக்கு இறைச்சியை வாங்கி உழ்ஹிய்யா கொடுத்தார்கள். எனவே பணப் பெறுமதியை கொடுப்பதும் ஆகும் என்ற கருத்தை அதிலிருந்து எடுக்க முடியும்.

பெறுமதியை கொடுக்காது உழ்ஹியாவை கொடுக்க வேண்டும் என வலியுறுத்தியவர்கள் அனைவரும் அறுத்துப் பலியிடும் சுன்னா இல்லாமல் போய் விடக் கூடாது என்ற நியாயத்தைத்தான் முன்வைத்துள்ளார்கள்.

கலாநிதி யூஸுப் கர்ளாவி அவர்களின் அபிப்பிராயப்படி உயிருள்ளவர் உழ்ஹிய்யாவை கொடுப்பதே மிகவும் சிறந்தது. ஆனால் மரணித்த ஒருவருக்குப் பகரமாக உழ்ஹிய்யா கொடுக்கும்போது பெறுமதியை கொடுப்பது சிறந்தது என அவர் கூறுகிறார்.

நாம் சிறுபான்மையாக வாழும்போது எமது நாட்டின் சட்ட திட்டங்களை அனுசரித்துப் போக வேண்டியுள்ளதாலும் ஜீவ காருண்யம் பற்றி கூடுதலாகப் பேசுகின்ற நாடுகளில் ஒன்றாக இலங்கை இருப்பதாலும் சில நிபந்தனைகளுடன் பெறுமதியை கொடுப்பதற்கான முடிவை தெரிவு செய்வது மிகப் பொருத்தமானதாக அமையலாம்.

நாம் வாழும் காலத்தில் உழ்ஹிய்யா கடமையை நிறைவேற்ற அதன் பெறுமதியை தர்மமாகக் கொடுப்பது உழ்ஹிய்யாவின் இலக்குகளை அடைவதற்குப் போதுமாயின் அதனை அனுமதிக்கலாம். அதனால் அறுத்துப் பலியிடும் சுன்னா இல்லாமல் போகாது. காரணம் இது ஒரு காலத்தின் தேவை மட்டுமே. நாட்டின் அனைத்துப் பிராந்தியங்களும் இதனைப் பின்பற்ற வேண்டிய அவசியமும் கிடையாது. மிகுந்த கெடுபிடியுள்ள பிரதேசங்களில் மாத்திரம் பெறுமதியைக் கொடுப்பதற்கான நடைமுறையை அமுல்படுத்தலாம்.

கடந்த காலங்களில் உழ்ஹிய்யாவின் பெறுமதியை கொண்டு சிரியாவின் விடுதலைப் போராட்டத்துக்கு உதவுவது சிறந்த வணக்கமாகும் என அங்குள்ள அறிஞர்கள் தீர்ப்பு வழங்கியிருந்தனர். அசாதாரண ஒரு சூழ்நிலையில் உழ்ஹிய்யா தொடர்பாக எப்படிச் சிந்திப்பது என்பதற்கு சிரியா நாட்டின் உலமா சபை ஒரு முன்னுதாரணமாகும். அவர்கள் உழ்ஹிய்யாவின் பெறுமதியை சிரியா மக்களின் துயர் துடைப்பதற்காக ஸதகா செய்வது உழ்ஹிய்யாக் கடமையை நிறைவேற்றுவதை விடப் பெறுமதியானது எனக் குறிப்பிட்டுள்ளனர்.

### முஸ்லிம் அல்லாதாருக்கு உழ்ஹிய்யா பங்கை வழங்குதல்

குர்பான் இறைச்சியை முஸ்லிமல்லாதாருக்குக் கொடுப்பது சம்பந்தமாக அறிஞர்களுக்கு மத்தியில் அபிப்பிராய பேதங்கள் காணப்படுகின்றன.

இமாம் மாலிக் (ரஹ்) அவர்கள் வேதம் கொடுக்கப்பட்டவர்களுக்கு உழ்ஹிய்யாவின் இறைச்சியையோ அதன் தோலையோ கொடுப்பது விரும்பத்தக்கது அல்ல என்ற கருத்தைக் கூறியுள்ளார்கள். இமாம் லைஸ் அவர்கள் அதனை விரும்பத்தக்கது அல்ல என்ற கருத்தைக் கொண்டிருந்தாலும் சமைத்த உணவாகக் கொடுக்கலாம் என்று கூறியுள்ளார்கள்.

இமாம் நவவி அவர்கள் எமது மத்ஹபில் (ஷாபிஈ) உழ்ஹிய்யா இறைச்சியை முஸ்லிம் அல்லாதவர்களுக்கு பங்கு வைக்கலாம் என்றே பதிவுசெய்துள்ளார்கள். அவ்வாறே இமாம் இப்னு குதாமா, காபிருக்கு உழ்ஹிய்யாவிலிருந்து பங்கு கொடுக்கலாம் என்று அபிப்பிராயப்பட்டுள்ளார். (முஃனி-9/450)

இது குறித்து ஒரு முக்கியமான விடயத்தை நாம் கருத்தில் கொள்ள வேண்டும். அதாவது போராட்டங்கள் நிகழாத சமாதான சூழலில் வாழும் வேதம் கொடுக்கப்பட்ட பெண்களை ஒரு முஸ்லிம் திருமணம் முடிப்பதற்கான அனுமதியை இஸ்லாம் வழங்கியுள்ளது. அப்படியான திருமணங்கள் நடைபெற்றால் அவர்களுக்கு மத்தியில் பிணைப்பும் உறவும் இருக்கவே செய்யும். எனவே அவர்களுக்கு உழ்ஹிய்யா கொடுப்பது ஒரு சகஜமான விடயமாகவே பார்க்கப் படும்.

முஸ்லிம் அல்லாதவர்களுக்கு நோன்பு காலங்களில் நிறைவேற்றும் கடமையான ஸகாதுல் பித்ர் மற்றும் உழ்ஹிய்யா இறைச்சியைக் கொடுக்கலாம் என்ற சிந்தனையை முன்வைத்தவர்களில் உமர் இப்னு கத்தாப் (ரழி) அவர்கள், அப்துல்லா இப்னு அம்ர் இப்னு ஆஸ் (ரழி), உமர் இப்னு அப்துல் அஸீஸ் (ரஹ்), இமாம் ஸுஹ்ரி (ரஹ்), இமாம் இப்னு ஸீரீன் (ரஹ்), இமாம் ஹஸனுல் பஸரி, இமாம் அபூஹனீபா உட்பட ஹனபி மத்ஹப் அறிஞர்கள் என பலரை அடையாளம் காணமுடிகிறது. இவர்களுடைய அபிப்பிராயப்படி உழ்ஹிய்யா இறைச்சியை முஸ்லிம் அல்லாதவர்களுக்கு வழங்குவது ஆகுமானதே.

அப்துல்லாஹ் இப்னு அம்ர் இப்னு ஆஸ் (றழி) அவர்கள் தனது வீட்டில் ஒரு ஆடு அறுக்கப்பட்டபோது அவர் அதிலிருந்து தனது அயல் வீட்டாரான யூதனுக்குக் கொடுத்தீர்களா என்று பல தடவை கேட்டார்கள். ஏன் இப்படி அலட்டிக் கொள்கின்றீர்கள் என்று அவரிடம் அவருடைய பணியாள் வினவும் அளவிற்கு அயல்வீட்டு யூதனுக்கு பங்கு கொடுப்பதில் கவனம் எடுத்தார்கள் என்ற செய்தியை இமாம் முஜாஹித் (ரஹ்) அவர்கள் அறிவித்துள்ளர்கள். (திர்மிதி) இந்த அறிவிப்பு ஸஹீஹானது என ஷெய்க் அல்பானி (ரஹ்) எனக் குறிப்பிட்டுள்ளார்.

இந்த வகையில் உழ்ஹிய்யாவிலிருந்து முஸ்லிம் அல்லாதாருக்கு பங்கு கொடுக்கலாம் என்ற சிந்தனையை இலங்கையிலும் தெரிவு செய்வதற்கான இடம்பாடு ஷரீஆ சட்டப் பரப்பில் தாராளமாகவே உள்ளது. சகவாழ்வுக்கான மிகுந்த தேவையுடன் வாழும் நாம் முஸ்லிம் அல்லாத அயலவர்கள், கலப்புத் திருமணம் வழியாக வந்த உறவினர்கள், இன, மத வேறுபாடுகள் பார்க்காமல் தேவையுடையவர்கள் என பலருக்கும் உழ்ஹிய்யா இறைச்சியை தாராளமாக கொடுக்கலாம் என்பதை உணர முடிகிறது.

நவீன காலத்தில் இமாம் அப்துல்லாஹ் பின்பாஸ் அவர்களும் அல்-அஸ்ஹர் பத்வா சபை உறுப்பினர்களும் இது குறித்துப் பேசும்போது: எம்முடன் போராடாத காபிர்களுக்கும் கைதிகளுக்கும் மற்றும் எம்மிடம் அபயம் பெற்றோருக்கும் உழ்ஹிய்யாவை கொடுக்கலாம் என தீர்ப்பு வழங்கியுள்ளனர். அதுவும் அவர்கள் ஏழைகளாக, நெருங்கிய உறவினர்களாக, அயலவர்களாக இருப்பின் அவர்களை முற்படுத்துவது சிறப்பானது என்பதுடன் அவர்களது உள்ளங்களைப் பிணைக்கும் நோக்குடனும் நல்லுறவை பேணுவதற்காகவும் இதுவே மேலானதாகும் என்றும் கூறியுள்ளனர்.

### உழ்ஹிய்யாவுக்கு மிகவும் சிறந்த பிராணி எது?

அதிகமான அறிஞர்களின் கருத்துப்படி உழ்ஹிய்யாவுக்கான கால்நடைகளில் ஆட்டை அறுத்துப் பலியிடுவதே மிகவும் சிறந்தது எனக் கூறியுள்ளனர்.


இலங்கை சூழலில் ஆட்டை அறுப்பதுதான் மிகவும் பொருத்தமானது என்பது சொல்லித் தெரிய வேண்டிய விடயம் அல்ல. நபிகளாரின் செயலை வெளிப்படையாகவே பின்பற்றுதல் என்ற வகையிலும் குர்பானுக்காக ஆட்டைத் முற்படுத்துவது ஒரு சுன்னா என்ற பார்வையிலும் இலங்கை மக்கள் ஆட்டை தெரிவுசெய்வது தார்மீகக் கடமையாகும். சகோதர இனங்களின் மனங்களை புண்படுத்தாமல் எமது வணக்க

(பக்.14)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கல்வி அடைவு மட்டத்தில் ஆசிரியர்






முறைசார் கல்வியில் ஆசிரியர்களின் வகிபாகம் இன்றியமையாதது. பாடசாலைக் கல்வியின் பங்காளர்களாக பலதரப்பட்டவர்கள் உள்ளனர். கல்வி பெறும் மாணவர்கள், கல்விக்கு சாதகமான சூழலை உருவாக்கும் பெற்றோர், கண்காணிப்பு முகாமையாளர்கள் (அரச தரப்பு) போன்று ஆசிரியர்களும் பங்காளர்களில் முக்கியமானவர்கள். இவர்களின் மிக வினைத்திறனுடனானதும் உயிரோட்டமானதுமான பங்களிப்பு மாணவர்களின் கல்வி வளர்ச்சிக்கும், தொடர்ச்சியான கற்றலுக்கும் அவசியமாகின்றது.

குறிப்பாக மாணவர்களைப் பாடசாலையில் தக்க வைப்பதில் ஆசிரியர் பங்கு முக்கியமானது. ஒரு நாட்டின் தலைவிதி வகுப்பறைகளில் வடிவமைக்கப்படுகின்றது. அதை ஆசிரியர்களே வடிவமைக்கின்றார்கள் என கல்வியியலாளர்கள் கூறுகின்றனர். எனவே பாடசாலைக் கல்வியின் பிரதான வகிபாகத்தை ஏற்றுள்ள ஆசிரியர்கள் தமது பல்வேறு நடிபங்குகளை முறையாக மேற்கொள்ளும் பொழுதே மாணவர்களிடம் எதிர்பார்க்கப்படும் அடைவு சாத்தியமாகின்றது.

இன்றைய ஆசிரியர்களின் பண்புகள், தராதரங்கள், திறன்கள், மனப்பாங்குகள் முற்றிலும் மாறுபட்டவை. கடந்த பத்தாண்டுகளுடன் ஒப்பிடும் போது அவை மிகவும் வித்தியாசமானவை. ஆசிரியம் என்பது ஒரு தொழின்மை (Professional) என்ற வகையில் மேலே குறிப்பிடப்பட்டவை அனைத்தையும் இற்றைப்படுத்தல் அவசியமாகின்றது.

இன்றைய ஆசிரியர்கள் மாணவர்களின் தொடர்ச்சியான கற்றல் நடவடிக்கைகளை உறுதிசெய்யவும் கற்றல் ஆர்வத்தைத் தூண்டவும் வகுப்பறைக் கற்றலில் உயிர்த்துடிப்புள்ள பங்குபற்றலை சாத்தியப்படுத்தவும் பல்வேறு வகையான பங்கினை ஆற்ற வேண்டுமென்று கல்வியியலாளர்கள் வலியுறுத்தியுள்ளனர். Self Determination Theory இன்படி கற்பித்தல் செயற்பாடுகள் சுவாரஷ்யமானதாய் இருக்கும் போதும் மாணவர்கள் மகிழ்வுடன் தொடர்புறும் போதும் அவர்களது திறன்களை அடுத்தவர்கள் உறுதி செய்யும் போதும் பாடசாலை தொடர்பான நடவடிக்கைகளில் மாணவர்கள் மிகுந்த உற்சாகத்துடன் ஈடுபடுகின்றனர். (Hardre & Reeve 2003)

ஆசிரியரின் எதிர்மறையான அணுகல் மாணவர்களின் கற்றல் ஆர்வத்தைக் குறைக்கின்றது. கற்றல் - கற்பித்தலில், ஆசிரியர் - மாணவர் உறவு மிகவும் முக்கியமானது. ஏனெனில் அது பெற்றோருக்கும் பிள்ளைக்கும் இடையிலான உறவின் அவசியம் போன்றது. ஒரு பெற்றோர் ஒரு பிள்ளையை வெற்றிப்பாதையை நோக்கி நெறிப்படுத்தி, வழிப்படுத்துவது போல்தான் ஒரு ஆசிரியர் மாணவர்களை இலக்குகளை நோக்கி நெறிப்படுத்தி வழிகாட்டக் கடமைப்பட்டுள்ளார். இது கிடைக்காத மாணவர்கள் கல்வியிலிருந்து இடைவிலகும் வாய்ப்பு அதிகம் உள்ளது. (Hardre & Reeve 2003)

ஒரு மாணவன் வகுப்பறைக் கற்றலில் பின் தங்கியிருக்கும் நிலையில் எனக்கு ஆசிரியர் உதவுகிறாரில்லை என உணரத் தொடங்கும் போது நிலைமை இன்னும் மோசமடைகின்றது. அதாவது ஆசிரியர் கவனிப்பு கிடைக்கவில்லை என உணரும் பிள்ளைகள் கற்றல் ஆர்வத்தை இழந்து இடைவிலகலுக்குத் தூண்டப்படுகின்றனர். ஆசிரியர் ஆதரவு, ஊக்கம், நம்பிக்கையூட்டல் என்பன இடை விலகல் வீதத்தைக் குறைக்கின்றது. பாடசாலைச் சூழலும் இதில் சம்பந்தப்படுகின்றது. (றவூப் ஸெய்ன் 2014)

எதிர்பார்ப்புக்கள் நிறைந்த ஓர் சமூக அமைப்பில் அனைவருக்கும் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட நடத்தைக் கோலங்கள், அணுகுமுறைகள், பழக்க வழக்கங்கள், செயற்பாட்டு வடிவங்கள் இன்றியமையாதவை. இவை நாளைய இளைஞர்களான இன்றைய மாணவர்களுக்குக் கற்பிக்கப்பட வேண்டும். இதற்கான நிறுவன ஏற்பாடுகளும் பணியாளர்களும் அவசியம். சமூக எதிர்பார்ப்புக்களை உயர்ந்த பட்சம் நிறைவேற்றும் நிறுவனங்களே பாடசாலைகள். அதன் மைய விசையாக இயங்குபவர்களே ஆசிரியர்கள். பெற்றோரால் செய்ய முடியாத பணிகளை பெற்றோருக்காகவும் சமூகத்துக்காகவும் ஆசிரியர்கள் செய்கின்றனர். செய்ய வேண்டும் என்ற எதிர்பார்ப்பு சமூகத்தில் உள்ளது.

புதிய தலைமுறையினருக்கு அறிவுத்தாகத்தையும் விருப்புணர்வையும் ஏற்படுத்துவதோடு மாணவர்கள் சுயமாக ஆய்ந்து கற்றலுக்கான சூழலை விருத்தி செய்து நல்ல மனப்பாங்குகளையும் விழுமியம் சார் திறன்களையும் வளர்ச்சியுறச் செய்ய வேண்டியது ஆசிரியரது கடமையாகும் என இன்றைய கல்வி உலகம் எதிர்பார்க்கின்றது.

இந்த வகையில் தனது கல்வி, பயிற்சி, நடத்தை, ஈடுபாடு, சமூக அக்கறை, கடின உழைப்பு, அர்ப்பணம் என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு வாண்மைத் தொழில் புரியும் ஆசிரியர் சேவைக்கு அடிப்படையான சில முறைசார் தகைமைகள் அவசியமாகின்றன. மாணவர்களின் தொடர்ச்சியான கல்வியை உறுதி செய்வதற்கும் கற்றல் ஆர்வத்தைத் தூண்டி அடைவு மட்டத்தை உயர்த்துவதற்கும் ஆசிரியர் ஆற்ற வேண்டிய வகிபாகங்கள் பன்முகப்பாங்கானவை என இன்றைய கல்வியியலாளர்கள் வலியுறுத்துகின்றனர்.

வினைத்திறனுள்ள ஓர் ஆசிரியர் பல்வேறு பாத்திரங்களை ஏற்க வேண்டும். பெற்றோராக, முகாமையாளராக, உள வள ஆலோசகராக, தலைவராக, போதகராக, மதிப்பீட்டாளராக, சமூகப் பொறியியலாளராக, ஒழுக்கத்தைக் கட்டியெழுப்புபவராக என அவரது வகிபாகம் விரிந்து செல்கின்றது. பாரம்பரியமாக பாடப்புத்தகத்திலுள்ள தகவல்களை மாணவர்களின் மூளைக்கு இடமாற்றம் செய்பவரே ஆசிரியராகக் கருதப்பட்டார். அதாவது படிப்பிப்பவரே ஆசிரியர் எனக் கொள்ளப்பட்டது. இன்று அவ்வாறில்லை. சமூக, கலாசார, பொருளாதாரத் தளங்களில் ஏற்பட்டுள்ள சிக்கல்களும் நெருக்கடிகளும் ஆசிரியரின் வகிபாகங்களை வியாபகப்படுத்தியுள்ளது.

(தொடரும்)

# நீதிபதிகளாகப் பெண்கள்

## - இஸ்லாமிய அறிஞர்களின் நிலைப்பாடு

**இஸ்லாத்தில் பெண்கள் நீதிபதிகளாக கடமை புரிவதில் இஸ்லாமிய அறிஞர்கள் மத்தியில் கடந்த இதழ்களில் அவதானித்தோம். மேலும் சில அறிஞர்களின் கருத்துக்களை அவதானிப்போம்.**



- **இமாம் மாவர்தி (ரஹ்)**

இமாம் மாவர்தியின் முழுப்பெயர் அபுல் ஹஸன் அலி இப்னு ஹபீப் அல் பஸரி அல்மாவர்தி. இவர் ஷாபிஈ மத் ஹபைச் சேர்ந்தவர். கி.பி. 972 இல் பிறந்தவர். அஹ்காமுஸ் ஸுல்தானிய்யா என்பது இவர் எழுதிய நூல்களுள் மிகவும் பிரபல்யமானது. இந் நூலில் இமாம் இப்னு ஜரீர் அத்தபரியை மேற்கோள் காட்டியவாறு தனது கருத்துக்களை விளக்கிச் செல்கின்றார்.

இமாம் மாவர்தியின் அபிப்பிராயத்தில் முஸ்லிம் பெண்கள் நீதிபதிகளாய்க் கடமையாற்றலாம். நன்மையை ஏவித் தீமையைத் தடுத்தல் எனும் பொதுப் பணியில் ஆண்கள், பெண்கள் ஆகிய இரு சாராரும் சமமான பொறுப்புக்களையே சுமந்துள்ளனர். நீதியை நிலைநாட்டலும் அப்பொறுப்புக்களில் ஒன்றாகும் என மாவர்தி கூறுகின்றார். ஸூறதுந் நிஸாவின் 34 ஆவது வசனத் திற்கு இமாம் தபரி வழங்கும் விளக் கத்தை இமாம் மாவர்தி மிகப்பெரும் ஆதாரமாகக் கொள்கிறார்.

- **அஷ்ரப் அலீ தானவி**

ஸஹீஸுல் புகாரியில் அபூ பக்ரா (ரழி) அறிவிக்கும் ஹதீஸ் ஒன்று பின் வருமாறு அமைகின்றது. "பெண்களிடம் ஆட்சிப் பொறுப்பை ஒப்படைக்கும் சமூகம் வெற்றி பெறாது." இந்த ஹதீஸை விளக்கும் சட்ட அறிஞர் அஷ்ரப் அலீ தானவி இது பெண்களை நீதிமன்றங்களில் நீதிபதிகளாக நியமிப்பதற்கும் பகுதியளவிலான தலைமைத்துவத்தை வழங்குவதற்கும் எதிரான அல்லது அதைத் தடை செய்கின்ற கருத்தை உள்ளடக்கவில்லை. நீதிபதிப் பதவிக்கும் இந்த ஹதீஸுக்குமிடையில் எவ்வித சம்மந்தமுமில்லை. ஒரு முஸ்லிம் பெண் உலகளாவிய, ஒட்டுமொத்த முஸ்லிம் சமூகத்திற்கும் தலைமை வழங்குவதையே இந்த ஹதீஸ் தடுக்கின்றது என்கிறார்.

சிவில், நிதி விவகார நீதிமன்றங்களுக்குப் பெண்களை நீதிபதிகளாக நியமிக்கலாம் என்பது அஷ்ரப் அலீ தானவி அவர்களது கருத்தாகும். குற்றவியல் நீதிமன்றங்களில் பெண்கள் நீதிபதிகளாக இருக்க முடியாதென்ற இமாம் அபூ ஹனீபாவின் கருத்தை இவர் ஆதரிக்கின்றார்.

இந்தியத் துணைக் கண்டத்தில் அஷ்ரப் அலீ தானவி குறிப்பிடத்தக்க சட்ட அறிஞராக மதிக்கப்படுகின்றார்.

- **நவீன சட்ட அறிஞர்களின் நிலைப்பாடு**

20 ஆம் நூற்றாண்டின் மிகப் பெரும் சட்ட மேதை எனப் போற்றப்படும் இமாமுல் முஜ்தஹித் முஸ்தபா அஹ்மத் ஸர்கா, பெண்கள் நீதிபதிகளாக நியமிக்கப்படலாம் எனும் கருத்தைத் தெளிவாக முன்வைத்துள்ளார். இமாம் அஹ்மது ஸர்கா புகழ்பெற்ற நான்கு சட்ட மத்ஹபுகளிலும் உள்ள கருத்தொருமைப்பாடான விடயங்களை தனி நூலாகத் தொகுத்து வந்த நிலையில் வபாத்தானார். நவீன பிக்ஹ் வரலாற்றில் இதுபோன்ற ஒப்பீட்டு சட்ட நூலொன்றைத் தொகுக்க முயன்றோர் வேறெவரும் இல்லை.

அல் அஸ்ஹர் பல்கலைக்கழகத்தின் முன்னாள் தலைவர், பிரபல சட்ட மேதை அலீ தன்தாவி சமகால எகிப்தின் சட்ட அறிஞர்களுள்ள ஒருவரான கலாநிதி. அலி ஜும்ஆ, சர்வதேச இஸ்லாமிய அறிஞர் ஒன்றியத்தின் தலைவர் அல்லாமா முஜ்தஹிதுல் முத்லக் கலாநிதி. யூஸுப் அல் கர்ளாவி, லெபனானின் முன்னாள் முப்தியும் மாபெரும் சட்ட மேதையுமான ஷேக். பைஸல் மௌலவி, தூனீசியாவின் புகழ்பெற்ற இஸ்லாமிய அறிஞர் கலாநிதி ராஷித் அல் கன்னூஷி, மொரோக்கோவின் புகழ்பெற்ற சட்டமேதை கலாநிதி முஸ்தபா பின் ஹம்ஸா ஆகியோர் பெண்கள் நீதிபதிகளாக நியமிக்கப் படுவதற்கு ஷரீஆவில் எந்தத் தடையும் இல்லை எனும் கருத்தைக் கொண்டுள்ளனர்.

## மனநலம் 19

# நெருக்கீட்டின் (Stress) உளவியல் சார் விளைவுகள்



ஒருவர் தனக்கு உடலியல் மற்றும் உளவியல் சார்பாக ஏற்படும் அழுத்தங்கள் எல்லை மீறிச் செல்வதாகவும் அவற்றைத் தன்னால் கட்டுப்பாட்டுக்குள் வைக்க முடியாதுள்ளது எனவும் உணரும்போது உள்ரீதியான விளைவுகளை எதிர்கொள்கிறார். பதகளிப்பு, காரணமற்ற பயம், உளச் சோர்வு, நித்திரையின்மை ஆகியன ஏற்படுகின்றன.

உளச்சோர்வு ஒருவரது தற்கொலைக்குக் கூட காரணமாகலாம். புகைத்தல், மதுபானப் பழக்கம், போதைவஸ்துப் பாவனை என்பவற்றில் ஈடுபட ஆரம்பிக்கலாம். ஏற்கனவே இப்பழக்கங்களுக்கு அடிமைப்பட்டிருப்பவர்களுக்கு நெருக்கீடு அதிகரிக்கும்போது இப்பழக்கங்களில் அளவுக்கதிகமாக ஈடுபட்டு அதன் விளைவுகளை அனுபவிக்க நேரிடலாம்.

கர்ப்பிணிப் பெண்களுக்கு மன அழுத்தம் ஏற்பட்டால் அவர்களது உடலில் சரக்கும் ஹோமோன்கள் வளர்ந்து வரும் நுகத்தை பிறப்புக்கு முன்பே பாதிக்கலாம் என மருத்துவர்கள் எச்சரிக்கின்றனர். உளநெருக்கீடு நீடிக்கும்போது பாரதூரமாக பாதிப்புகள் ஏற்படுகின்றன. அதனைச் சமாளிக்க முடியாமல் அழுத்தத்தின் கீழ் இடிந்து போவதால் நரம்புக் கோளாறுகளும் உளரீதியான கோளாறுகளும் ஏற்படுகின்றன.

ஒருவர் உளரீதியிலும் உயிரியல் ரீதியிலும் சூழலுக்குப் பொருத்தப்பாடு அடைய முடியாமல் உளநெருக்கீடுகளைச் சந்திக்கலாம். ஒருவருக்கு ஏற்படும் உளநெருக்கீட்டின் தாக்கம் தனியாள் ஆளுமையையும் சூழலையும் பொறுத்ததாகும். நெருக்கீட்டைத் தாங்கிக்கொள்ளும் சக்தி ஆளுக்காள் வேறுபடுகின்றது. ஒருவரால் சூழல் எவ்வாறு புலக்காட்சி பெறப்படுகின்றது என்பது அவரது ஆளுமையைப் பொறுத்தது.

சூழலில் ஏற்படும் சம்பவங்கள் தன்னைப் பாதிப்பதாகவும் அழுத்தம் தருவதாகவும் ஒருவர் அதிகம் உணரும்போது அதற்குத் துலங்கும் செயற்பாடு நெருக்கீடாக மாறுகின்றது. நெருக்கீடு ஓரளவு தவிர்க்க முடியாதது. சிறப்பாகச் செயல்படும்போது நெருக்கீட்டை கவனமாக முகாமை செய்யலாம். ஏற்கனவே குறிப்பிட்டது போன்று குறைந்தளவு நெருக்கீடு சாதிப்பதற்கும் இலக்கை அடைவதற்கும் அவசியமானது.

ஆனால், நெருக்கீட்டின் அளவு கூடும்போதும் நீடிக்கும்போதுமே உள, உடல் பாதிப்புகள் ஏற்படுகின்றன. ஏனெனில், ஓர் அச்சுறுத்தலுக்கு அல்லது வேண்டுகோளுக்கு உடல் எதிர்வினையாற்றுவதையே நெருக்கீடு என்கிறோம். நேர்ப்பாடாக எதிர்வினையாற்றுபவருக்கு நெருக்கீட்டின் தாக்கம் குறைவாகவே இருக்கின்றது.

மாறாக, நெருக்கீட்டை எதிர்மறையாகக் கையாளும்போது அதன் உடல், உளத் தாக்கம் அதிகமாக இருக்கின்றது. ஓர் அழுத்தத்தின் காரணமாக நெருக்கீடு ஊக்கியாகவும் உந்தியாகவும் நம்மைத் தொழிற்படத் தூண்டுகின்றன. அவசர நிலையில் செயற்படும்போதே நெருக்கீடு நம்மை கடுமையாகப் பாதிக்கின்றது. எப்போது நாம் அடிக்கடி பிரச்சினைக்குள்ளாகியிருப்பதாக அல்லது தோல்வியுறுவதாக உணர்கின்றோமோ அப்போது நமது நரம்பு மண்டலத்தை சமநிலையில் வைத்திருக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்படுகின்றோம். ஏனெனில், அப்போதே நெருக்கீட்டின் விளைவுகள் செறிவாக இருக்கின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மேலதிக ஊழியர்களுக்கு... (01 ஆம் பக்கத் தொடர்)

அதேவேளை குறித்த அரச நிறுவனங்கள் ஊழியர்கள் தொடர்பிலான சட்ட ரீதியான செலுத்துகைகளையும் (EPF, ETF) உடனுக்குடன் செலுத்தி முடிக்க வேண்டும் எனவும் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. முகாமைத்துவ சேவை சுற்றுநிருபத்துக்கு வெளியில் யாராவது நியமனம் பெற்றிருந்தால் அவர்களுடைய சம்பள விபரங்கள் உட்பட்ட விபரங்கள் முகாமைத்துவ சேவைத் திணைக்களத்துக்கு அனுப்பி வைக்கப்பட வேண்டும் எனவும் சுற்றறிக்கை குறிப்பிடுகின்றது.

திறைசேரியின் முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி அரச நிறுவனங்களில் 7500 பேரளவில் தொழில் புரிவதாகக் கணக்கிடப்பட்டுள்ளது. அமைச்சுக்கள், திணைக்களங்கள், மாகாண சபைகள், உள்ளூராட்சி சபைகள், அரச வங்கிகள் உள்ளிட்ட அனைத்து அரச நிறுவனங்களிலும் 2017ஆம் ஆண்டில் 1,375,499 பேர் பணியாற்றியுள்ளனர். 23,224 பேர் புதிதாக உள்வாங்கப்பட்டுள்ளனர். 5000 பேர் ஓய்வுபெற்றும், 246 பேர் பணி நீக்கம் செய்யப்பட்டுமுள்ளனர்.

## முஸ்லிம் தனியார்... (03 ஆம் பக்கத் தொடர்)

அந்த வகையில் தற்போதைய சமூக சூழ்நிலையில் பலதார மணத்தை எப்படி நோக்கலாம் என்பதில் உடன்பாடுகள் எட்டப்பட வேண்டும். இதற்கென மணப்பெண் திருமணத்தின் போது, கணவர் மறுமணம் முடிக்கக் கூடாது என்று உடன்படிக்கை செய்துகொள்ள முடியுமா என்பது தொடர்பிலும் இலங்கையின் இஸ்லாமிய அறிஞர்கள் ஆராய்ந்து வருகின்றனர்.

விவாகரத்தின் பின்னரான தாபரிப்புப் பணம் வழங்குவதில் 1951 ஆம் சட்டம் மயக்கமானதொரு நிலைப்பாட்டிலேயே இருக்கிறது அல்லது தெளிவின்றி இருக்கின்றது. தலாக், குல்உ, பஸ்ஹ் என்பவை தொடர்பில் சம்பந்தப்பட்டவர்களுக்கும் முஸ்லிம் சமூகத்துக்கும் மேலும் பல விளக்கங்கள் வேண்டப்படுகின்றன. ஆகவே மொத்தமாக 'மதா' என்ற சொல்லினூடாக இவற்றைக் குறிக்க முனைவது தொடர்பில் சில போதாமைகள் தெரிகின்றன.

இந்த விடயத்தில் சமூகம் கருத்துச் சொல்வதற்கு முன்னர் சமூகத்தை தெளிவுபடுத்த வேண்டிய பணியை இலங்கையின் இஸ்லாமிய அறிஞர்கள் செய்ய வேண்டி இருக்கின்றனர்.

இங்கு குறிப்பிடப்பட்டவை தவிர்ந்த இன்னும் சில விடயங்கள் தொடர்பில் உடன்பாடுகள் எட்டப்பட வேண்டியிருக்கின்றன. இந்த விடயங்கள் தொடர்பாக ஷரீஆத் துறையில் ஆழமான அறிவுள்ள இலங்கை இஸ்லாமிய அறிஞர்கள் கருத்துச் சொல்வதற்கு இடமளிக்கப்பட வேண்டும்.

எடுத்த எடுப்பில் தனது கருத்துக்கு முரணானவற்றை மார்க்கத்துக்கு முரணானதாக ஊதிப் பெருப்பித்துக் காட்டி, இந்த அறிஞர்களது கருத்துக்களை மட்டம் தட்டுவதை விட்டு, கருத்துக்களை இங்கிதமாக அணுகும் பக்குவதற்கு அனைத்துத் தரப்பினரும் வர வேண்டும். முஸ்லிம் தனியார் சட்டத்தில் மாற்றத்துக்காகப் பேசப்படும் சில விடயங்களே இங்கு சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. இவை தொடர்பில் இலங்கையின் இஸ்லாமிய அறிஞர்கள் ஆராய்ந்து வருகிறார்கள் என்பது சமூகத்துக்குச் சொல்லப்பட வேண்டிய விடயம்.

அந்தவகையில் இந்தக் கருத்துக்கள் அறிஞர்களுக்கானது அல்ல. ஏற்படுத்தப்படப் போகும் மாற்றங்கள் தொடர்பில் சமூகமும் அறிந்திருக்க வேண்டும், அவர்களும் இந்த விடயங்களில் கருத்துச் சொல்ல வேண்டும் என்பதற்கான துவக்கமொன்றுக்காகவே இந்த விடயங்களை இங்கு சுட்டிக் காட்டியுள்ளேன்.

முஸ்லிம் தனியார் சட்டம் என்பது இலங்கை முஸ்லிம்களுக்கு முன்னோர்கள் பெற்றுத் தந்த வரப்பிரசாதம், அது கட்டாயம் பாதுகாக்கப்பட வேண்டும் என்ற கருத்தில் உள்ள எல்லோரும் இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி முன்மாதிரியான ஒரு சட்டத்தை முஸ்லிம்கள் சார்பில் நாட்டுக்கு வழங்குவதற்கு முன்வர வேண்டும்.

## அஸ்ஸாம் முஸ்லிம்கள்... (01 ஆம் பக்கத் தொடர்)

இந்தியாவின் தேசிய குடியுரிமைப் பதிப்பகம் (National Register of Citizens - NRC) வெளியிட்டுள்ள தனது இரண்டாவது வரைவின்படி, 40 இலட்சத்துக்கும் அதிகமானோர் இந்த இறுதி வரைவில் குடியுரிமைப் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டுள்ளனர். இவர்களில் அதிகமானோர் பெங்காலி மொழி பேசும் அஸ்ஸாமியர்களாவர்.

இவர்கள் தங்களது குடியுரிமையை நிரூபிப்பதற்கு ஆகஸ்ட் 30 முதல் செப்டம்பர் 20 வரையான வெறும் மூன்று வார கால அவகாசமே வழங்கப்பட்டுள்ளது. இவ்வளவு தொகையினர் இந்தக் குறுகிய காலப்பிரிவில் தமது குடியுரிமையை நிரூபிப்பது சாத்தியமற்றது என்பதை வைத்தே மாநில அரசு இந்த உத்தரவை பிறப்பித்துள்ளதாகச் சொல்லப்படுகிறது.

இந்த உத்தரவு நடைமுறைப்படுத்தப்பட்டால் அஸ்ஸாமில் வாழும் மொழியால் சிறுபான்மையான 40 இலட்சம் பெங்காலி மக்கள் சொந்த மண்ணிலேயே சட்டவிரோதமாகக் குடியேறிவர்கள் என அறிவிக்கப்படுவார்கள். குடியுரிமை, அரசியல் பிரதிநிதித்துவம் அவர்களுக்கு மறுக்கப்படுவதுடன், பொலிஸ் மற்றும் இராணுவத்தின் மனித உரிமை மீறல்களுக்கு இரையாகும் வாய்ப்புக்களும் உள்ளதாக சுட்டிக் காட்டப்படுகிறது.

பங்களாதேஷ் அரசோ, மேற்கு வங்காள மாநிலமோ அஸ்ஸாமிலிருந்து இவர்களை ஏற்றுக் கொள்ளத் தயாராக இல்லை என்ற நிலையில், உள்நாட்டிலும் குடியுரிமை இல்லாதவர்களாக வாழ வேண்டிய நிலை வரின், ரோஹிங்கிய மக்களின் நிலைக்கு இவர்களும் ஆளாக நேரிடலாம் என அச்சம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அயல்நாடான பங்களாதேஷிலிருந்து சட்டவிரோதமாகக் குடியேறியவர்களை களையெடுப்பதற்காக, 1951 இலிருந்து புதுப்பிக்கப்படாத பதிவேடுகளை மீளாய்வு செய்ய வேண்டும் என டெல்லி அரசாங்கம் கோரிவருகிறது.

1985 இல் பிரமதர் ராஜீவ் காந்தி செய்த அஸ்ஸாம் உடன்படிக்கையின் படி, 1971 மார்ச் 24 க்கு முன்னர் இந்தியாவின் வட கிழக்கு மாநிலத்தில் குடியமர்ந்ததை நிரூபிக்க முடியாத அனைவரும் வாக்காளர் பட்டியலில் இருந்து நீக்கப்படுவதோடு வெளியேற்றவும் படுவர் எனக் குறிப்பிடுகின்றது. இதனை வைத்து இந்துத் தீவிரவாதிகளும் அஸ்ஸாமிய கடும் போக்காளர்களும் பெங்காலி இனத்தின் மீது தாக்குதல்களை நடத்தி வருகின்றனர்.

## மன்னாரில்... (01 ஆம் பக்கத் தொடர்)

கெயார்ன் இந்தியா லிமிட்டட் உடன் 2008 இல் இலங்கை அரசாங்கம் செய்து கொண்ட உடன்படிக்கையின் பின்னர் மன்னார் கரையில் இயற்கை வாயு இருப்பதாக கண்டுபிடிக்கப்பட்டது. இரண்டு வருட முயற்சிகளின் பின்னர் எண்ணெய் விலை வீழ்ச்சியடைந்ததாகக் கூறி இந்தியா இந்த முயற்சியைக் கைவிட்டது.

## வனப் பாதுகாப்பு... (01 ஆம் பக்கத் தொடர்)

ஒப்படைப்பதற்கு வனப் பாதுகாப்பு பணிப்பாளர் சம்மதம் தெரிவித்திருப்பதாக நெடுஞ்சாலைகள், அனர்த்த முகாமைத்துவ பிரதி அமைச்சர் பாலித ரங்கே பண்டார தெரிவித்துள்ளார்.

புத்தளம் மாவட்டத்தின் வண்ணாத்திவில்லு, ஆனமடுவ, கருவலகஸ்வெவ, நவகத்தேகம, புத்தளம் ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளைச் சேர்ந்த விவசாயிகளின் காணிகளே இவ்வாறு திருப்பி ஒப்படைக்கப்படவுள்ளன. இவர்களது காணிகள் சுவீகரிக்கப்படும் போது, வனப் பாதுகாப்புத் திணைக்களம் உரிய பங்களிப்பைச் செய்யவில்லை என்பதனால் காணி உரிமை தொடர்பில் மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைத் தீர்க்க முடியாதிருப்பதாகக் கூறி புத்தளம் பிரதேச சபைக்குட்பட்ட 08 பிரதேசங்களின் மக்கள் 2003 ஆம் ஆண்டிலிருந்து தம்மிடம் கோரி வந்ததாக அமைச்சர் பாலித ரங்கே பண்டார குறிப்பிட்டுள்ளார்.

இதனுடைய முதலாவது தொகுதி இம்மாத இறுதிக்குள் வழங்கப்படவுள்ளதோடு இரண்டாவது தொகுதி செப்டம்பர் மாதத்திலும் ஏனையவை டிசம்பர் மாதத்திலும் வழங்கி வைக்கப்படவுள்ளன.

## முஸ்லிம் தனியார்... (01 ஆம் பக்கத் தொடர்)

கடந்த ஜனவரி மாதம் நீதியமைச்சரிடம் கையளிக்கப்பட்ட இந்த இரு அறிக்கைகளும் கடந்த மூன்று வாரங்களுக்கு முன்னர் நீதியமைச்சின் இணையத்தளத்தில் பதிவேற்றப்பட்டிருந்தன. ஆறு மாதங்களாக இந்த அறிக்கைகள் வெளியிடப்படாமல் இருந்ததற்கான காரணம் அப்போது வினவப்பட்ட போது, தமிழ் மொழி பெயர்ப்பு இன்னும் முடியவில்லை என்று கூறப்பட்டது. இப்பொழுது . தமிழ் மொழிபெயர்ப்பு இன்றியே இந்த இரு அறிக்கைகளும் வெளியிடப்பட்டுள்ளன. இந்த அறிக்கைகள் தொடர்பில் பொதுமக்களின் அபிப்பிராயம் கோரப்பட்ட போதும் சட்டவசனங்கள் அடங்கிய ஆங்கில மொழியில் அறிக்கையை விளங்கிக் கொள்ள முடியாமல் மக்கள் கருத்துத் தெரிவிப்பதில் பின்நிற்பதாகத் தெரிவிக்கின்றனர்.

இது தொடர்பில் மீள்பார்வை நீதி அமைச்சைத் தொடர்பு கொண்ட பொழுது, தமிழ் மொழிபெயர்ப்பு இன்னும் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. எப்பொழுது முடியும், எப்பொழுது பதிவேற்றப்படும் என்று சொல்ல முடியாது என்று தெரிவித்தனர். இதனால் அறிக்கை இழுத்தடிப்பதற்கான வாய்ப்புக்கள் தெரிகின்றன.

அதேபோல பொதுமக்களின் கருத்துக்களைக் கேட்டுள்ள நீதி அமைச்சு அதற்கு காலவரையறையற்ற அவகாசத்தை வழங்கியுள்ளது. இது இன்னும் எவ்வளவு காலத்துக்கு நீடிக்கும் என்பதிலும் நீதியமைச்சு தெளிவான பதிலொன்றினை வழங்கவில்லை. இது இழுத்தடிப்புக்கான ஒரு விடயமாகவே நோக்கப்பட வேண்டியுள்ளது.

கடந்த ஜனவரி மாதம் சமர்ப்பிக்கப்பட்ட இரு அறிக்கைகளும் 06 மாத காலத்துக்குப் பின்னரே வெளியிடப்பட்டது என்பதும் குறிப்பிடத்தக்கது.

## வாக்காளர்... (01 ஆம் பக்கத் தொடர்)

ஏதேனும் தகவல்கள் விடுபட்டிருந்தால், பிழையாகப் பதியப்பட்டிருந்தால், அல்லது தகுதியற்ற தகவல்கள் சேர்க்கப்பட்டிருந்தால் அது தொடர்பில் மேன்முறையீடு செய்வதற்காக 28 நாட்கள் கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. ஒகஸ்ட் மாதம் 10 ஆம் திகதி முதல் செப்டம்பர் 06 ஆம் திகதி வரை மேன்முறையீடுகள் ஏற்றுக் கொள்ளப்படும். இந்த மேன்முறையீடுகளைக் கருத்திற் கொண்டு தயாரிக்கப்பட்ட இறுதி இடாப்பு ஒக்டோபர் மாதம் 05 ஆம் திகதி வெளியிடப்படும் என மேலதிக தேர்தல்கள் ஆணையாளர் எம்.எம். முஹம்மத் தெரிவித்தார்.

இதுவரை வாக்களர் பதிவு விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்காதவர்கள் உடனடியாக அவற்றைச் சமர்ப்பிக்க வேண்டும், தவறும் பட்சத்தில் மேன்முறையீட்டுக்கான காலப்பிரிவில் ஒரு மேன்முறையீடாக தமது விண்ணப்பங்களை சமர்ப்பிக்க வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## உழ்ஹிய்யா... (12 ஆம் பக்கத் தொடர்)

வழிபாடு களைச் செய்வதற்கு ஷரீஆ விரிந்து தரும் போது அதனைப் பின்பற்றுவது சுன்னா என்பதற்கு அப்பால் அந்தத் தெரிவு ஒரு நல்ல பண்பாடு என்பதையும் நாம் புரிந்து கொள்ள வேண்டும்.

உழ்ஹிய்யா என்பது அதனை நிறைவேற்ற வசதியுள்ளவர்கள் செய்யும் ஓர் உயர்வான சுன்னாவாகும். இதனை நாட்டின் சட்ட விதிமுறைகளுக்கமைய, சமூக நல்லிணக்கத்தைக் கருத்திற் கொண்டு இலங்கை முஸ்லிம்கள் நிறைவேற்ற வேண்டும்.

பிற சமயத்தவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்கும் வகையில் உழ்ஹிய்யா வணக்கத்தை நிறைவேற்றுவதில் எமது கவனம் இருக்க வேண்டும். அது உயர்ந்த பண்பாடு என்பதை நாம் மனங்கொள்ள வேண்டும். பிரதேச . சூழலுக்கு ஏற்ப மஹல்லாவாசிகள் பொது மஷூராவின் அடிப்படையில் உழ்ஹிய்யா விடயங்களை முன்னெடுப்பது மிகவும் சிறந்தது. குர்பான் பங்கீட்டின்போது ஒழுங்கு முறைப்படியும், சாணக்கியமாகவும் நடந்துகொள்ள வேண்டும். அதில் பரந்த மனதுடன் செயற்படுவதற்கு ஷரீஆ சட்டம் இடம் தந்துள்ளது என்பதையும் நாம் மேலே கண்டோம்.

இஸ்லாமிய சட்டப் பரப்பில் 'சுன்னா முஅக்கதா' என்ற தரத்தில் வைத்து நோக்க வேண்டிய உழ்ஹிய்யா வணக்கத்துக்கு வாஜிபான வணக்கத்திற்குரிய அந்தஸ்தை கொடுப்பது ஷரீஆவின் பார்வையில் பிழையான புரிதலாகும். உழ்ஹிய்யாவிற்கு உரிய அந்தஸ்தை கொடுப்பதுடன் இலங்கைச் சூழலில் அந்த வணக்கத்தை நடைமுறைப்படுத்தும் போது அறிஞர்களின் வித்தியாசமான கருத்துக்களை அருளாகக் கொண்டு பொருத்தமானதைத் தெரிவுகளை முற்படுத்துவது காலத்தின் தேவையாகும்.

அல்லாஹ் மிக அறிந்தவன்.

## முதலாவது... (01 ஆம் பக்கத் தொடர்)

மடு மாதா தேவாலயம் இலங்கையின் புனிதப் பிரதேசமாகப் பிரகடனப் படுத்தப்பட்ட முதலாவது கத்தோலிக்க தேவாலயமாகும். யுத்த காலத்தில் பராமரிப்பின்றி இருந்த இந்த தேவாலயம், புனிதத்தலப் பிரகடனத்தின் பின்னர் அபிவிருத்தி செய்யப்பட்டு மேம்படுத்தப்படவிருக்கிறது.

இதனைச் சூழ உள்ள பிரதேசங்களில் குடியிருப்புக்களை ஏற்படுத்தவும், பாதைகளைச் செப்பனிடவும் நீர்ப்பாசன வசதிகளுட்பட ஏனைய வசதிகளை வழங்கவும் ஜனாதிபதியின் அமைச்சரவைப் பத்திரத்தில் முன்மொழிவுகள் முன்வைக்கப்பட்டுள்ளன. அமைச்சரவைப் பத்திரத்தைச் சமர்ப்பிப்பதற்கு முதல்நாள் ஜனாதிபதி தனது குடும்பத்துடன் மடு மாதாவைத் தரிசித்து ஆசீர்வாதம் பெற்றிருந்தார்.

## ராஜபக்ஷாக்களின்... (04 ஆம் பக்கத் தொடர்)

இந்தத் திட்டத்திற்குள் கடந்த காலப் பகுதி சட்டம் ஒழுங்கு நிலவிய யுகமாக காட்சிப்படுத்தப்படுகிறது. நிகழ்காலம் சிக்கல் மற்றும் அராஜகம் நிலவும் காலப்பகுதியாக காட்சிப்படுத்தப்படுகிறது. உண்மையில் கடந்த காலப்பகுதி எவ்வாறிருந்தது என்பதை நினைவுபடுத்திக் கொண்டால் பெரும்பான்மை மக்களுக்கு மீண்டும் அவ்வாறான காலப் பகுதிக்கு செல்ல வேண்டிய தேவை இருக்காது.

இன்று இடம்பெறுகின்ற குற்றங்கள் மிகவும் கொடூரமானவை என்பது உண்மை. எனினும் அது ராஜபக் ஷாக்களை தொடர்ந்து ஏற்பட்ட நிலமை அல்ல. போருக்கு இடையிலேயே இந் நிலை உருப்பெற்றிருக்கிறது.

2012இல் பொலிஸ் ஊடகப் பேச்சாளர் ஒருவர், ''அண்மைக் காலமாக இடம்பெற்று வருகின்ற கொலைகள் மிகவும் கொடூரமானவை. கணக்கின்றி கால், கை மற்றும் கழுத்துகள் வெட்டப்படுகின்றன. முன்னர் ஒரு பெண் துஷ்பிரயோகம் செய்யப்பட்டால் கொலைசெய்யப்படுவதில்லை. ஆனால் இன்று துஷ்பிரயோகம் செய்யப்பட்டதன் பிறகு பெண்கள் கொல்லப்படுகிறார்கள்.''

இலங்கையில் பெண்களுக்கு எதிரான பாலியல் குற்றங்கள் தொடர்பில் கேள்வி எழுப்பப்பட்ட போது அப்போதைய அமெரிக்காவுக்கான இலங்கைத் தூதுவர் (ராஜபக்ஷவின் மைத்துனன்) ஜாலிய விக்ரமசிங்க 'வொஷிங்டன் போஸ்ட்' பத்திரிகைக்கு சிரித்துக் கொண்டு பின்வருமாறு தெரிவித்தார்.

''இவர்கள் சொல்வது போன்று பெண்களுக்கு எதிரான பாலியல் கொடுமைகள் இலங்கையில் எங்கும் இடம்பெறுவதில்லை. எமது நாட்டில் மிகவும் அடக்கமான மக்களே உள்ளனர். உலக நாடுகளில் இடம்பெறுவதைப் போன்று அங்குமிங்குமாக ஓரிரு சம்பவங்கள் இடம்பெற்றிருக்கலாம்.''

2012இலேயே இவர் இந்தக் கருத்தை தெரிவித்துள்ளார். புள்ளிவிபரத் தரவுகளின் படி, 2010 இல் நாளொன்றுக்கு இந்நாட்டில் குறைந்த வயதையுடைய 3 பிள்ளைகள் பாலியல் துஷ்பிரயோகங்களுக்கு உள்ளாக்கப்பட்டுள்ளனர். 2011இல் 1169 சிறுவர் துஷ்பிரயோகச் சம்பவங்கள் பதிவாகியுள்ளன. அதாவது நாளொன்றுக்கு 3 என்ற அடிப்படையில். 2012 இல் முதல் 6 மாத காலப்பகுதிக்குள் மாத்திரம் சுமார் 700 இற்கும் அதிகமான பிள்ளைகள் துஷ்பிரயோகம் செய்யப்பட்டுள்ளனர். அதாவது நாளொன்றுக்கு 4 என்ற வகையில். குற்றங்களை அழிப்பேன் என பம்மாத்துக் காட்டும் ராஜபக்ஷ அன்று குற்றங்களுக்கு எதிராக இப்படித்தான் போரிட்டுள்ளார்.

## சிறுபான்மை... (07 ஆம் பக்கத் தொடர்)

முஸ்லிம்களது மத விவகாரங்கள், பள்ளிவாசல்கள், வியாபார நடவடிக்கைகள் இந்த அரசாங்கத்தின் கீழ் சிதைந்து போயுள்ளன. இன்று அராஜக நிலையே அரங்கேறுகிறது. எந்த விடயத்துக்கும் யாரும் பொறுப்புச் சொல்வதில்லை. இந்நிலை மாற்றப்படும். மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் முஸ்லிம்களை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். வாழ்க்கையின் சகல துறைகளிலும் பாதுகாப்பை உறுதிப் படுத்துவோம் என நாம் தெளிவாகவே வாக்குறுதியளிக்கிறோம்.

மீள்பார்வை

உள்நாட்டு - வெளிநாட்டு புதிய சந்தா விபரம்

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| மீள்பார்வை தனிப் பிரதி | - ரூபா 40.00 | இந்தியா | | மத்திய கிழக்கு நாடுகள் | - 4000.00 | ஐக்கிய இராச்சியம் | - 5500.00 |
| 12 இதழ்கள் | - ரூபா 600.00 | தனிப் பிரதி | - ரூபா 100.00 | மலேசியா | - 4000.00 | அமெரிக்கா | - 6500.00 |
| 24 இதழ்கள் | - ரூபா 1200.00 | ஒரு வருடம் | - ரூபா 3500.00 | ஐக்கிய அறபு இராச்சியம் | - 4000.00 | அவுஸ்திரேலியா | - 4700.00 |
| | | | | | | சீனா | - 4600.00 |

வங்கியில் பணம் செலுத்திவிட்டு, அதன் பிரதியையும் உங்களது பெயர், முகவரியையும் எமக்கு அனுப்பி வையுங்கள்:

MMC 49, Sri Mahinda Darma Mw, Dematagoda, Colombo 09. Hotline: 0777 581 661 People's Bank A/C: 056100153678164 (Branch: Sri Sangaraja Mawatha)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மகிழ்ச்சி இங்கே இருக்கிறது



ஓர் அரசனுக்கு ஓர் ஏழையைப் பார்த்து வியப்பு! நாம் எல்லா செல்வங்களோடும் இருக்கிறோம். ஆனால் இவன் எந்த செல்வங்களும் இன்றி நம்மை விட மிகவும் மகிழ்வாக இருக்கிறானே என்று. ஒருநாள் தன் அமைச்சரை அழைத்து இவன் மகிழ்வு எங்கு இருக்கிறது என்று கண்டுபிடிக்க வேண்டும் என்றார்.

அமைச்சர், 99 பொற்காசுகளை ஒரு பையில் கட்டி அவன் வீட்டு வாசலில் போட்டுவிட்டார். மறுநாள் காலையில் எழுந்து வந்த ஏழை அந்தப் பையைப் பார்த்து வியந்துபோனான். சுற்றும் முற்றும் பார்த்துவிட்டு அதை எடுத்து வீட்டுக்குள் சென்று எண்ணிப்பார்த்தான். ஒரு காசு குறைந்தது. அன்றிலிருந்து அவனது உறக்கம்போனது, மகிழ்வு போனது! எப்போதும் தன் மடியிலேயே அந்தப் பையை வைத்துக் கொண்டு வீட்டையே சுற்றிச் சுற்றிவந்தான்.

இந்த ஏழையின் தூக்கத்தையும், மகிழ்வையும் பறித்த கவலைகள் இரண்டு,

- இந்தப் பணத்துக்குச் சொந்தம் கொண்டாடி யாராவது வந்துவிடுவார்களோ?
- தொலைந்த அந்த 100வது காசு எங்கே?

அமைச்சர் அரசனிடம் சொன்னார். மன்னா, ''இந்த ஏழையிடம் இல்லாமையில் இருந்த மகிழ்ச்சி இருப்பில் இல்லாமல் போனது!

இவன் தன்னிடம் இருப்பதைப் பற்றி மகிழ்வுகொள்ளாமல் இல்லாததைத் தேடித் தன் மகிழ்வைத் தொலைத்து விட்டான்'' என்று..

இந்தக் கதையில் வரும் ஏழையைப் போலத்தான் நாமும். நம்மிடம் இருப்பதை எண்ணி மகிழாமல், நம்மிடம் இல்லாததை எண்ணியே ஏங்கிக் கொண்டிருக்கிறோம்.

நேர்பார்வை

தொகுப்பு: அஸாருதீன்

இச்சன்னல் வழியே தெரிவது
வானத்தின் ஒரு பகுதிதான்
என்றான்.
முழு வானமும் தெரியும்
வசமாய் ஒரு ஜன்னல் செய்ய
முடியுமா?

-ஜெ. பிரான்சிஸ் கிருபா

'ஒரு வண்ணத்துப் பூச்சி
வரும்போது
ஒரு பூ திறந்து கொள்கிறது
அல்லது
ஒரு பூ திறந்து
கொள்ளும் போது ஒரு
வண்ணத்துப் பூச்சி வருகிறது.'

-ஜென்

# புதிதாகப் பிறந்தவர்



மூன்று வருடங்களுக்கு மேல் நீங்கள் உயிர் வாழ முடியாது! மூளையும் சிந்தனையும் தவிர உடலின் எந்தப் புலன்களும் செயல்படாது! என அடுத்தடுத்த இடிகள் அவரது தலையில் விழுந்தன.

அரிய வகை நரம்பு நோய் அவரைத் தாக்கியது. துன்பத்தின் எல்லையில் மருத்துவமனையில் இருந்தவருக்கு அவர் சேர்க்கப்பட்ட எதிர் அறையில் ஒரு சிறுவன் உடல்நலக் குறைவால் சேர்க்கப்படுகிறான். சில நாட்களிலேயே அவன் இறந்துவிடுகிறான். இந்த நிகழ்வு அந்த மனிதருக்கு மனதில் பெரிய பெரிய கேள்விகளை எழுப்பியது.

அவர் நினைத்தார்.. அவனை விட நான் நல்வாய்ப்புப் பெற்றவன்! என் உடல் என் கட்டுப்பாட்டில் இல்லாவிட்டாலும், என் மூளையும் சிந்தனையும் முழுமையான ஆற்றலுடன் செயல்படுகிறது என்று...

அவர்தான் ஸ்டீபன் ஹாக்கிங்!

வரலாற்றுக்கே திருப்புமுனையான 'A Brief History of Time' என்ற நூலை எழுதியவர். காலம் மற்றும் அண்டவெளி பற்றிய அவரது கட்டுரைகள் அறிவியல் உலகின் மாபெரும் படைப்புகள்!

இவரது மந்திரச் சொல், எதை இழந்தீர்கள் என்பதல்ல! எது மிச்சம் இருக்கிறது!

அந்த சிறுவனின் மரணம் இவர் வாழ்வின் மிகப்பெரிய திருப்புமுனையாக அமைந்தது.அன்று அந்த சிறுவன் இறந்தான் என்றால் ஹாக்கிங் தனக்குள் புதிதாகப் பிறந்தார்.

இன்றுவரை அறிவியலின் பல புதிர்களுக்குப் பதிலளிக்கும் புதிராக விளங்குகிறார் ஸ்டீபன் ஹாக்கிங்!

# கண் பார்வையற்ற முதல் பட்டதாரிப் பெண்



கண்கள் இரண்டும் தெரியாது! காதுகள் இரண்டும் கேட்காது! வாய் பேச முடியாது! விடாமுயற்சியால் பிறகு பேசவும் கற்றவர்!

பிரெயில் முறையில் ஆங்கிலம், பிரெஞ்சு, ஜெர்மன், கிரேக்கம், இலத்தீன் ஆகிய மொழிகளைக் கற்று எழுத்தாளராகவும், பேச்சாளராகவும் திகழ்ந்தவர்!

39 நாடுகளுக்குச் சென்றவர்! 12 நூல்களை எழுதியவர்! கண் பார்வையற்ற முதல் பட்டதாரிப் பெண்! என பல சிறப்புகளுக்குச் சொந்தக்காரி. அவர்தான் ஹெலன் கெல்லர்!

ஒருமுறை அவரிடம் நீங்கள் உங்கள் வாழ்க்கையில் என்ன சாதித்தீர்கள் என்று கேட்கப்பட்டது. அதற்கு அவர்,

இந்த இருண்ட அமைதியான என் வாழ்வை கடவுள் ஏதோவொரு திட்டத்தோடுதான் படைத்திருக்கிறார் என்று நான் நம்புகிறேன்! அதை என்றாவது ஒருநாள் நான் உணர்வேன்! அப்போது அது குறித்து மகிழ்வேன்! என்று கூறினார்.

இவர் வாழ்வில் ஏற்பட்ட திருப்புமுனை...

சார்லஸ் டிக்கின்சன் எழுதிய அமெரிக்கன் நோட்ஸ் என்ற புத்தகத்தை ஹெலனின் தாயார் 1886 ஆம் ஆண்டு படித்தார். கண் தெரியாத, காது கேட்காத, பெண் லாரா என்பவர் எப்படிக் கல்வி கற்றார் என்பது அப்புத்தகத்தில் எழுதப்பட்டிருந்தது. அது ஹெலனின் தாயாருக்கு நம்பிக்கையளித்தது. இந்தக் கதையை அவர் படிக்காமல் இருந்திருந்தால் ஹெலனின் வாழ்க்கையில் இப்படி மாற்றம் நடக்காமலேயே இருந்திருக்கும். ஹெலனுக்கு நம்பிக்கை வந்தது ஒரு திருப்புமுனை என்றால் ஹெலனுக்கு ஆசிரியையாக ஆனி சல்லிவன் வந்தது இன்னொரு திருப்புமுனை எனலாம்.

எந்தக் குறையுமின்றித் தோன்றிய ஹெலனின் வாழ் வில் ஏற்பட்ட அடுத்தடுத்த உடல்சார்ந்த குறைபாடுகளால் அவர் மனம் வாடிப்போய்விடவில்லை! அவரின் தாய் அவர் மனதில் நம்பிக்கை விதை தூவினார். அந்த நம்பிக்கை விதையை ஆனி சல்லிவன் என்னும் ஆசிரியர் வளர்த்தெடுத்தார்!

தம் வாழ்வில் திருப்புமுனை ஏற்பட்ட மணித்துளி களில் ஹெலனுக்கு அகவிழிப்பு ஏற்பட்டது! அந்த அகவிழிப்பு அவரை இருபதாம் நூற்றாண்டின் உலகின் மிகச் சிறப்பு மிக்க பெண்மணியாக மாற்றியது!

# கோபம் வரும்போதெல்லாம்

1. கோபம் என்பது கொடிய நோய்..
2. இந்நோய் தன்னையும் அழித்து தன்னைச் சார்ந்திருக்கும் சுற்றத்தாரையும் அழிக்கவல்லது.
3. மிக விரைவாக அருகே இருப்பவருக்கும் பரவக்கூடிய நோய்
4. கோபத்தைக் கட்டுப்படுத்த பல வழிமுறைகள் சொல்லியிருக்கிறார்கள். அதைப் பின்பற்றுவதில்தான் நடைமுறைச்சிக்கல்கள் நிறைய உள்ளன.



**கோபம் வரும்போது..**

தண்ணீர் குடிக்கவும்..
ஒன்று இரண்டு என எண்ணவும்..
கண்களை மூடிக்கொள்ளவும்..
கண்ணாடியில் உங்கள் முகத்தைப் பார்க்கவும்..
என பல வழிமுறைகள் சொல்லியிருக்கிறார்கள்..

**நீங்க கோபப்படுறீங்களா?**

உங்களுக்கு நீங்களே ஏன் தண்டனை கொடுக்கறீங்க..

நிலத்தில் தன் கைகளை ஓங்கி அடித்துக்கொண்டவனுக்குக் கை வலிக்காமலா போகும்?

அதுபோலத்தான் அவன் கொள்ளும் கோபத்தால் அவனுக்கு வலி ஏற்படும். அவன் கோபத்தால் ஏற்படும் துன்பத்திலிருந்து தப்பமுடியாது என்கிறார்.

# பிளாஸ்டிக்

பிளாஸ்டிக் ஒழிப்பு தினத்தில்
பிளாஸ்டிக்கை நாங்கள் ஒழிக்கிறோம்
பிளாஸ்டிக் பைகளை
பிளாஸ்டிக் பாட்டில்களை
பிளாஸ்டிக் குவளைகளை
பிளாஸ்டிக் உறைகள்
எல்லாவற்றையும் நாங்கள் ஒழிக்கிறோம்

என்ன செய்வது இந்த
பிளாடிஸ்டிக் புன்னகைகளை
பிளாஸ்டிக் காதல்களை
பிளாஸ்டிக் பரிவுகளை
பிளாஸ்டிக் பாசங்களை
பிளாஸ்டிக் முத்தங்களை
பிளாஸ்டிக் சித்தாந்தங்களை
பிளாஸ்டிக் காதாநாயகர்களை
பிளாஸ்டிக் நாயகிகளை
பிளாஸ்டிக் சிகையலங்காரங்களை
பிளாஸ்டிக் உரையாடல்களை
பிளாஸ்டிக் சொற்பொழிவுகளை
பிளாஸ்டிக் புத்தக அட்டைப்படங்களை
பிளாஸ்டிக் கவிதைகளை
பிளாஸ்டிக் கோபங்களை
பிளாஸ்டிக் சந்தேகங்கள்ள
பிளாஸ்டிக் தெய்வங்களை

அவை உயிரற்றவையாக இருக்கின்றன
அழிக்க முடியாதவையாக இருக்கின்றன
நம்மை அவ்வளவு மாசடையச் செய்கின்றன

நான் வாழ்கிறேன்
ஒரு பிளாஸ்டிக் சூரியனுக்கும்
ஒரு பிளாஸ்டிக் சந்திரனுக்கும் நடுவே

மனுஷ்ய புத்திரன்

# காற்றோடு பேசித் திரிதல்

தனக்குத் தானே
பேசிக் கொள்ளும் மனிதர்கள்
இந்த உலகத்தின்
உரையாடலில் இருந்து
முற்றிலுமாக துண்டிக்கப்பட்டவர்கள்

இருட்டைக் கடப்பதற்காக
பாடுபவர்களைப் போல

குளியல் அறையில்
தாழிடப்படாத கதவுகளுக்காக
இசைப்பவர்களைப் போன்றவர்கள் அல்ல
இவர்கள்

கடவுளுடன் பேசுவதற்கான
இரகசிய மொழியை
தெரிந்து வைத்திருக்கிறார்கள்

நடைபாதையில்
யாருமற்று நடப்பவர்கள்
நம்பகத் தன்மையை இழந்துவிட்ட
உறவுகள் குறித்து
காற்றோடு கைவீசி
பேசிச் செல்கிறார்கள்

எல்லாவற்றையும் இழந்துவிட்ட
ஒரு மனிதன்
தன்னோடுதான் பேசித்திரிவது
பைத்தியமாவதற்கான
ஒரு முன் முயற்சியல்ல

அது ஒரு பரவசமான
தியான அனுபவம்



-அமீர் அப்பாஸ்-

# அந்நியம்

அசோக மரங்கள்
முற்றத்தில் நிற்கும்
தேவ இல்லங்களுக்குள் நுழையும்போது
அவன் கால்கள் சற்றுத் தடுமாறி
பாதணிகள் தாமாகவே கழன்று கொள்கின்றன.
அங்கிருக்கும் அத்தனை ஜன்னல்களும்
அவனை ஐயத்துடன் நோக்குகின்றன.

உள்ளே பணியாளர்கள்
மூடிய விழிகளுடன் அவனறியா மொழியில்
தேவனின் நாமத்தை
உச்சரித்தபடியிருக்கிறார்கள்
கருங்கற் சுவர்கள்
அவற்றைக் கேட்டுக்கொண்டிருக்கின்றன .

'அன்பின் பேரூற்று' பொங்கும் அவ்வில்லங்களில்
தாகத்துக்கு
ஒரு குவளைத் தண்ணீரும் கூடக் கிட்டுவதில்லை .

அவர்களுக்கும் அவனுக்கும் நடுவே
பூமிக்கும் வானுக்குமான தூரம்

தன் கூண்டுக்கு மீண்டும் போகும் வழியை
அவன் இப்போது தேடிக்கொண்டிருக்கிறான்.

-உமா வரதராஜன்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மீள்பார்வை விளையாட்டு

## பொலன்னறுவை மாவட்ட FA கிண்ண சம்பியனாக முடிசூடிய பரடைஸ்



இலங்கை கால்பந்து சம்மேளனம் நடாத்தும் FA கிண்ண சுற்றுத் தொடரின் பொலன்னறுவை மாவட்ட அணிகளுக்கு இடையிலான மோதலின் இறுதிப் போட்டியில், நியு பேர்ட்ஸ் (New Birds) விளையாட்டுக் கழக அணியை 1-0 என்ற கோல் கணக்கில் வெற்றி கொண்ட பரடைஸ் விளையாட்டுக் கழக அணி மாவட்ட சம்பியனாக தெரிவாகியுள்ளது.

இலங்கையின் அனைத்து பகுதிகளிலும் இடம்பெற்று வருகின்ற இந்தத் தொடருக்கான போட்டிகளில், பொலன்னறுவை மாவட்ட கால்பந்து அணிகளுக்கிடையிலான போட்டிகள் கடந்த 2 மாதங்களாக பொலன்னறுவை தேசிய விளையாட்டு மைதானத்தில் நடைபெற்று வந்தன.

பொலன்னறுவை மாவட்டத்தின் பதிவு செய்யப்பட்ட பல முன்னணி விளையாட்டுக் கழகங்கள் பலப்பரீட்சை நடாத்திய இத்தொடரில் தமது அனைத்துப் போட்டிகளிலும் அபாரமாக ஆடிய கதுருவெல, முஸ்லிம் கொலனியை பிரதிநிதித்துவப்படுத்திய பொலன்னறுவை மாவட்டத்தின் பழம்பெரும் விளையாட்டுக் கழகங்களில் ஒன்றான பரடைஸ் மற்றும் நியு பேர்ட்ஸ் அணிகள் தமது முன்னைய போட்டிகளில் எந்த வொரு தோல்வியையும் சந்திக்காது, இறுதிப் போட்டிக்கு முன்னேறின.

கடினப்பந்து கிரிக்கெட் அணி, மென்பந்து கிரிக்கெட் அணி, கால்பந்து அணி மற்றும் கரப்பந்து அணி என பல்வேறுபட்ட அணிகளைக் கொண்டுள்ள 30 வருட வரலாற்றைக் கொண்ட பரடைஸ் விளையாட்டுக் கழகம் FA கிண்ணத் தொடரின் இரண்டாம் கட்ட போட்டிகளுக்கு தெரிவாகியமை இதுவே முதன் முறை என்பது குறிப்பிடத்தக்கது.

## புத்தளம் லிவர்பூல் அணி வெற்றி

புத்தளம் லிவர்பூல் மற்றும் புத்தளம் நியூ ஸ்டார்ஸ் அணிகளுக்கிடையில் நடைபெற்ற கால் பந்தாட்ட போட்டியில் லிவர்பூல் அணி 02 : 00 கோல்களினால் வெற்றி பெற்றுள்ளது. புத்தளம் கால்பந்தாட்ட லீக் புத்தளம் நகரில் தொடராக நடாத்தி வரும் ட்ரகன்ஸ் வெற்றிக் கிண்ண கால் பந்தாட்ட தொடரின் போட்டி ஒன்றிலேயே இவ்விரு அணிகளும் சந்தித்துக் கொண்டன.

மிக நீண்ட காலத்துக்கு பின்னரான இந்த போட்டி புத்தளம் சாஹிரா தேசிய கல்லூரி மைதானத்தில் கடந்த வெள்ளிக்கிழமை (20) மாலை நடைபெற்றது.

லிவர்பூல் அணியானது இந்த போட்டியில் வெற்றி பெற்றதன் மூலம் அடுத்து வரும் இரண்டாம் சுற்றான விலகல் சுற்றுக்கு தெரிவாகும் 04 அணிகளுக்குள் ஒன்றாக தெரிவாகும் வாய்ப்பினை உறுதி படுத்தியுள்ளது.



## 96ஆவது தேசிய மெய்வல்லுனர் சம்பியன்ஷிப் இவ்வாரம் கொழும்பில் ஆரம்பம்




இலங்கை மெய்வல்லுனர் சம்மேளனத்தினால் நடத்தப்படுகின்ற 96ஆவது தேசிய மெய்வல்லுனர் சம்பியன்ஷிப் போட்டிகள் ஒகஸ்ட் 3ஆம் திகதி முதல் செப்டெம்பர் 5ஆம் திகதி வரை கொழும்பு சுகததாஸ விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

இதன்படி, சுமார் 800 வீர வீராங்கனைகள் கலந்து கொள்ளவுள்ள இம்முறை போட்டித் தொடரில் இருபாலாருக்கும் 38 போட்டி நிகழ்ச்சிகள் நடைபெறவுள்ளதுடன், தேசிய மட்டத்தில் முன்னிலை வகிக்கின்ற அனைத்து வீரர்களும் இதில் கலந்துகொள்ளவுள்ளதாக இலங்கை மெய்வல்லுனர் சம்மேளனத்தின் தலைவர் மேஜர் ஜெனரல் பாலித பெர்னாண்டோ தெரிவித்தார்.

வருடத்தின் மிகப் பிரதான மெய்வல்லுனர் போட்டித் தொடரான தேசிய மெய்வல்லுனர் சம்பியன்ஷிப் தொடரில் கடந்த காலங்களைப் போல இவ்வருடமும் தேசிய மட்ட வீரர்களுடன், புதுமுகவீரர்களும் பங்கு பற்றவுள்ளனர். அத்துடன், அடுத்த வருடம் நடைபெறவுள்ள 4 முக்கிய போட்டித் தொடர்களை இலக்காகக் கொண்டு வீரர்கள் தெரிவு இடம் பெறும் என இலங்கை மெய்வல்லுனர் சம்மேளனம் அறிவித்துள்ளது.













அகில இலங்கை முஸ்லிம் லீக் வாலிப முன்னணிகள் சம்மேளனத்தின் கம்பஹா மாவட்ட சம்மேளனக் கூட்டம் அண்மையில் சம்மேளனத்தின் தலைவர் கலாநிதி பீ.எம். பாரூக் தலைமையில் நடைபெற்றது.

இவ் வைபவத்தில் பிரதம அதிதியாக முன்னாள் அமைச்சரும் தேசிய ஊடக மத்திய நிலையத்தின் தலைவருமான இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் கலந்துகொண்டார். இந்நிகழ்வில் சம்மேளனத்தின் உப தலைவர் லுக்மான் சகாப்தீன், உப தலைவரும் பொருளாளருமான ஷாம் நவாஸ், நிறைவேற்றுக்குழு உறுப்பினர் எம். நஸீர் உட்பட பலர்கலந்து கொண்டனர்.

Printed and Published by Focus Media (Pvt) Ltd, 49, Sri Mahinda Dharma Mawatha, Colombo 09.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org